பக்கங்கள்: பதினான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 26 செவ்வாய்க்கிழமை (10-06-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:195

### டோக்கியோ உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில்

# எதிர்பார்த்தது ரூ.30 ஆயிரம் கோடி

# கிடைக்கிறது 40ஆயிரம் கோடி ரூபா

## நிலைமையைப் பொறுத்து இன்னும் அதிகரிக்க உதவும் நாடுகள் இணக்கம்

- டோக்கியோவிலிருந்து ந.வித்தியாதரன் -

டோக்கியோ,ஜூன்10

**டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளிலிருந்து இலங்கை 300 கோடி அமெரிக்க டொலர்களை(சுமார் ரூ.30 ஆயிரம் கோடி ரூபாவை) எதிர்பார்த்தது. ஆனால், அதைவிட மிகக் கூடுதலான தொகை அதாவது 400 கோடி அமெரிக்க டொலர்(சுமார் 40 ஆயிரம் கோடி ரூபா) கிடைக்க இருக்கிறது.**

**முன்னர் மூன்று ஆண்டுகளில் உதவித் தொகை வழங்கப்பட இருந்தது. இப்போது புதிய தொகையான 40 ஆயிரம் கோடி ரூபா நான்கு ஆண்டுகளில் வழங்கப்பட இருக்கிறது.**

மேலும் இரண்டு அடிப்படைகளில் இத்தொகை இன்னும் அதிகரிக்கவும் உதவும் நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

★ 'இலங்கை அமைதி முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் திரும்பி, சமாதான நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு, வடக்கு - கிழக்கு புனரமைப்பு நடவடிக்கைகளில் புலிகள் பங்குபற்றும் நிலைமை ஏற்பட்டால் -

★ தற்போது வழங்கப்படும் உதவு தொகை உரிய திட்டங்களுக்கு - உரிய முறையில் - வேகமாகச் செலவிடப்பட்டால் -

தற்போது உறுதியளிக்கப்பட்ட உதவு தொகையை மேலும் கணிசமான அளவில் அதிகரிக்க, உதவும் நாடுகள் உறுதியளித்துள்ளன.

நேற்று டோக்கியோவில் ஆரம்ப

(14ஆம் பக்கம் பார்க்க)

## உலக வங்கி வழங்கும் உதவித்தொகை அடுத்த வாரத்திலிருந்து கிடைக்கும்!

### நிதி அமைச்சர் சொக்ஸி உதயனுக்குத் தகவல்

டோக்கியோ,ஜூன்10

பெரும் எண்ணிக்கையான நாடுகள் மற்றும் சர்வதேச நிதி அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட உதவும் நாடுகளின் கூட்டம் இதுதான்.

இப்படி சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சுஜி சாகி குறிப்பிட்டார் என நிதியமைச்சர் கே.என். சொக்ஸி நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

உதவும் நாடுகளின் முதல் நாள் கூட்டத்தின் பின்னர் உதயனுக்கு அவர் செவ்வி ஒன்றை வழங்கினார். அப்போது அவர் தெரிவித்ததாவது:-

இருபத்தியொரு சர்வதேச நிதி அமைப்புகள் மற்றும் ஐம்பதுக்கு மேற்பட்ட உதவும் நாடுகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

சர்வதேச நாணய நிதியத்தில் நீண்ட பல வருடங்களாகச் சேவையாற்றிவரும் பணிப்பாளரான சுஜி

(14ஆம் பக்கம் பார்க்க)

## முழு நாட்டுக்கும் ஒதுக்கப்படும் பணத்தில் 15முதல் 25சதவீதம் வடக்கு - கிழக்குக்கு!

டோக்கியோ,ஜூன்10

யாரும் எதிர்பாராத வகையில் மிகப் பெரிய தொகையை இலங்கைக்கு உதவியாக வழங்க உதவும் நாடுகள் முன்வந்திருந்தாலும் -

சமாதான முயற்சிகள் அமைதி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் மட்டுமே உறுதியளிக்கப்பட்ட முழுத் தொகையும் வழங்கப்படும் என்று இலங்கைக்கு அந்த நாடுகள் அறிவுறுத்தியிருப்பதாகவும் விடயமறிந்த வட்டாரங்கள் உதயனுக்குத் தகவல் வெளியிட்டன.

உதவும் நாடுகள் வழங்க உறுதியளித்த தொகையில் எவ்வளவு வடக்கு - கிழக்கு புனரமைப்புக்கு உரியது என்பது நேற்று மாலைவரை திட்டவட்டமாக வெளிப்படுத்தப்படவில்லை.

எனினும், மொத்தம் 15 வீதம்முதல் 25 வீதம்வரை வடக்கு -கிழக்குக்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகவும்-

சில திட்டங்களில் பத்து வீதமும் ஏனைய சிலவற்றில் முப்பதுவீதமும் எனப் பத்து முதல் முப்பது வீதம் வரை திட்டத்துக்குத் திட்டம் மாறுபாடான தொகை ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் - தெரிகின்றது.

மொத்தத் தொகையில் 15 முதல் 25 வீதத்துக்கு உட்பட்ட தொகை வடக்குக் கிழக்குக்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. (ஐ-4)

## பருத்தித்துறை துறைமுகம் இனி துறைமுக அதிகார சபையிடம்!

யாழ்ப்பாணம்,ஜூன்10

பருத்தித்துறை இறங்குதுறையை அடுத்த மாதம் முதலாம் திகதிமுதல் துறைமுக அதிகார சபை பொறுப்பேற்கவுள்ளது.

துறைமுக அதிகார சபையின் பொது முகாமையாளர் தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து இது தொடர்பான ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர்.

பருத்தித்துறை, காங்கேசன்துறை துறைமுகங்களுக்கு விஜயம் செய்த இக்குழுவினர் அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தனர்.

பருத்தித்துறை இறங்குதுறையில் நீண்டகாலமாக சமயாசமய ஊழியர்களாகப் பணிபுரிந்து வரும் 42 பேரையும் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் துறைமுக அதிகார சபைக்குள் உள்வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ-3)





டோக்கியோவில் நேற்று நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுவதையும் அதில் கலந்துகொண்ட அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ்'க்கு பிரதமர் கைலாகு கொடுப்பதையும் படங்களில் காணலாம்.

### இடைக்கால நடைமுறைகளுக்கு

## தற்காலிக நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்

டோக்கியோ,ஜூன்10

ஒஸ்லோவில் அரச குழுவும் புலிகளும் இணங்கியபடி இலக்கை அடைவதற்கு இடைப்பட்ட காலத் தேவைக்கு தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தவேண்டியது அவசியமாகிறது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று டோக்கியோ உதவும் நாடுகள் மாநாட்டில் நிகழ்த்திய தமது ஆரம்ப உரையில் குறிப்பிட்டார்.

புலிகளின் கோரிக்கைக்கு தாங்கள் முன்வைத்த யோசனை குழப்பமானது என்பதும் மக்கள் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதும் இப்போது தமக்குத் தெளிவாகியுள்ளது என்றும் பிரதமர் கூறினார்.

(பிரதமரின் உரையின் முழு விவரம் 3ஆம் பக்கத்தில்)

(ஐ)

## டோக்கியோ மாநாட்டு முடிவுகளுடன் ஜப்பான் குழு கிளிநொச்சி செல்கிறது

வடக்கு, கிழக்கு புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக - புலிகளின் கணிசமான பங்களிப்புடன் கூடிய - தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு (Provisonal Administrative Structure) ஒன்றை வழங்கத் தயார் என்ற சாரப்பட நேற்று டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த அறிவிப்பை அடுத்து, சமாதான முயற்சிகளுக்குத் திரும்புவதற்கு புலிகள் இணங்குவார்கள் என்ற எதிர்பார்ப்பு இங்கு டோக்கியோவில் தங்கியுள்ள அரச உயர்பீடத்தின் மத்தியில் பலமாக நிலவுவதை உணரமுடிந்தது.

பிரதமரின் அறிவிப்பு தமிழர் தரப்பைத் திருப்திப்படுத்துமா என்பதை அறிவதில் பிரதமருடன் தொடர்புடைய வட்டாரங்கள் ஆவலாக இருந்ததையும் காணமுடிந்தது.

டோக்கியோவில் நடைபெறும் உதவும் நாடுகளின் கூட்டத்தில் பிரதிபலித்த கருத்துக்களையும், கூட்ட முடிவில் வெளியிடப்படும் கூட்டுப் பிரகடனத்தில் அடங்கியுள்ள அம்சங்களையும் ஜப்பானிய தூதுக்குழு ஒன்று மிக விரைவில் கிளிநொச்சிக்கு எடுத்துச்சென்று புலிகளின் தலைமைப்பீடத்துக்குத் தெரிவிக்கும் எனவும் -

அதேசமயம், மறுபக்கத்தில் நோ

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விடுதலைப் புலிகளுக்கு ஆர்மிடேஜ் மாநாட்டில் தனிப்பட்ட வேண்டுகோள்

## ஜனாதிபதி ஒத்துழைப்பது குறித்தும் கருத்து

டோக்கியோ,ஜூன்10

டோக்கியோவில் நேற்று ஆரம்பமான இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சரும், மாநாட்டின் இணைத்தலைவர்களில் ஒருவருமான ரிச்சர்ட் ஆர்மிடேஜ் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தனிப்பட்ட வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

"சமாதானத் தீர்வுக்கு நீங்கள் உங்களை அர்ப்பணித்துள்ளீர்கள் என்பதை உங்கள் மக்களுக்கு, இலங்கையின் அனைத்து மக்களுக்கு, உங்களுக்கு உதவி செய்ய விரும்பும் உதவி அளிக்கும் நாடுகளுக்கு நிருபித்துக் காட்டுங்கள். சமாதானப் பேச்சு மேசைக்குத் திரும்பி வருவதன் மூலம் இதனை நிரூபியுங்கள்" என்று அவர் தனது வேண்டுகோளில் குறிப்பிட்டார்.

மாநாட்டில் ஆரம்ப உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கைக்கு மிகவும் நெருக்கடியான ஒரு காலம் இது என்பதை நான் அறிவேன். வடக்கு, கிழக்கிற்கு சிறிதளவு சர்வதேச உதவியே வந்தடைந்திருக்கிறது என்று விடுதலைப் புலிகள் தமது அதிருப்தியை வெளிக்காட்டியுள்ளனர். அவர்களின் அதிருப்தியை நான் புரிந்துகொள்ள முடியும். மக்கள் சமாதான நடைமுறையில் நம்பிக்கை வைக்க வேண்டுமேயானால் அப்பகுதிக்கான உதவிகள் வழங்கப்படுவது சீராகவேண்டும். அரசாங்கம் அதனைப் புரிந்துகொள்ளும் என நான் நம்புகிறேன். சிறப்பாகச் செய்யமுடியும், செய்யுமெனவும் நான் நம்புகிறேன். ஆயினும் அவர்கள் இதனைத் தனித்துச் செய்வது கடினமானதாகும்.

சட்டபூர்வத் தன்மையை அடைய விடுதலைப் புலிகள் மேற்கொள்ளத் தேவை என நாம் நம்பும் நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்க அமெரிக்கா தயாராக இருக்கிறது. ஆயினும் சமாதான முறையில் பங்குகொள்ள அவர்கள் மறுப்பார்களேயானால் அவ்வாறு செய்வதற்கு நாங்கள் சிந்திக்க கூட முடியாது.


இக்கட்டத்தில் முன்னேற்றம் காண சில கடினமான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கமும் மேற்கொள்ள வேண்டும். பொருளாதாரச் சீர்திருத்தங்கள் உட்பட இந்நடவடிக்கைகளில் பெரும்பாலானவை முரண்பாடுகளுக்கு உட்பட்டவையாக இருக்கும். எந்த ஒரு பலகட்சி ஜனநாயகத்திலும், கருத்து முரண்பாடுகள் பெரிதுபடுத்தப்படலாம் அல்லது வெளியாரினால் தப்பான அர்த்தம் கற்பிக்கப்படலாம்.

எனவே அதிகாரத்திலுள்ள கட்சிகளிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் தீர்வு காண்பதில் ஐக்கியம் உண்டு என்பதை விடுதலைப் புலிகளுக்கும் சர்வதேச உதவி வழங்கும் நாடுகளுக்கும் எடுத்துக்காட்டும் சவால் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் உண்டு.

இந்த வகையில் ஜனாதிபதி குமாரதுங்கவின் பங்கு விசேடமாக முக்கியத்துவமானதாகும். பிரச்சினைக்கான சமாதானத் தீர்வு உண்மையிலேயே ஜனாதிபதியின் ஆசீர்வாதத்திலேயே தங்கியுள்ளது. சமாதானத்துக்கு அவர் தன்னை அர்ப்பணித்திருக்கிறார் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

இது போன்ற ஒரு மற்றொரு சந்தர்ப்பம் வாய்க்காது என்பதை நாம் அறிவோம்.

- இவ்வாறு அவர் சொன்னார். (ஐ)





டோக்கியோவில் நேற்று ஆரம்பமான இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ், ஜப்பானியப் பிரதமர் யுனிசிரோ கொய்சுமி ஆகியோர் உரை நிகழ்த்துவதைப் படங்களில் காணலாம்.

# இருதய சத்திர சிகிச்சைக்கு இந்தச் சிறுமிக்கு உதவுங்கள்



அத்தியடி பருத்தித்துறையைச் சேர்ந்த சசிகலா தேவராசா என்ற ஒன்பது வயதுச் சிறுமியையே படத்தில் காண்கிறீர்கள். இந்தச் சிறுமி இருதயத்தில் துவாரம் காரணமாக உயிராபத்தை எதிர்கொண்டுள்ளார்.

கொழும்பு ஜயவர்த்தனபுர மருத்துவமனையில் இவருக்கு அவசர இருதய சத்திர சிகிசசை மேற்கொள்ள வேண்டி உள்ளது.

சத்திர சிகிசசைக்கான மருத்துவ வசதிகள் இருந்தபோதும் அதற்குப் பெருமளவு நிதி செலவிட வேண்டி இருப்பதால் இச் சிறுமியின் பெற்றோர்கள் செய்வதறியாத நிலையில் ஏங்கிக் கொண்டிருக்கின்றனர்.

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட இச்சிறுமியின் குடும்ப நிலைமை மிகவும் பரிதாபகரமாக இருப்பதால் சத்திர சிகிச்சைக்குத் தேவையான நிதியைத் திரட்டி வழங்கும் நன் முயற்சியில் பரோபகார சிந்தனை கொண்ட சிலர் ஈடுபட்டிருக்கின்றனர்.

பருத்தித்துறை தம்பசிட்டி மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நான்காம் வகுப்பிலும் பருத்தித்துறை 'சாயி மந்திர்' நிலையத்திலும் கல்வி கற்றுவரும் இந்தச் சிறுமியின் உயிர் காப்பு நிதியத்துக்கு நிதி உதவி அளிக்க விரும்புவோர் வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் 7215-C என்ற நடைமுறைக் கணக்கு இலக்கத்துக்கு (இலங்கை வங்கி, பருத்தித்துறை) பணத்தைச் செலுத்துவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது.

# தமயனைத் தாக்கிக் கொன்ற தம்பி பொலீஸாரால் கைது!

யாழ்ப்பாணம்,ஜூன்10

நல்லூர் முத்திரைச் சந்தைப்பகுதியில் நேற்று முன்தினம் தனது சகோதரனை அலவாங்கினால் தாக்கிக் கொன்றவர் எனக் கூறப்படும் நபர் நேற்றுப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

இரு சகோதரர்களுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பில் தம்பியின் தாக்குதலில் அவரது அண்ணனான கிருஸ்ண பிள்ளை ஸ்ரீதரன் என்பவர் உயிரிழந்தமை தெரிந்ததே.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தலைமறைவான நிலையில் தேடப்பட்டுவந்த இறந்தவரின் தம்பியே நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

யாழ்நீதிமன்றத்தில் அவர் இன்று ஆஜர் செய்யப்படவிருக்கின்றார்.

இதேவேளை - இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சட்டபூர்வமான மனைவி யாழ்.நீதிமன்றத்தில் மனு ஒன்றை நேற்றுத் தாக்கல் செய்தார்.

சடலத்தைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி அவர் அந்த மனுவில் கோரியிருந்தார்.

இறந்தவரின் இரண்டாவது மனைவியும் அவரது தாயாரும் இதற்கு ஆட்சேபம் தெரிவிக்காததை அடுத்து சட்டபூர்வமான மனைவியிடம் சடலத்தை ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3)

## யாழ்.முதலாம் குறுக்கு வீதியில்

# ஐஸ் தொழிற்சாலையை அமைக்க பலாலி படைத்தலைமை அனுமதியாம்

## சில தினங்களில் அறிவிப்பு வரும் என்கிறார் அமைச்சர் ஜயலத்

யாழ்ப்பாணம்,ஜூன்10

யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ்முதலாம் குறுக்கு வீதியில் ஐஸ் தொழிற்சாலையை அமைக்க பலாலி படைத்தலைமையகம் அனுமதி வழங்குமென எனக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அகதிகள் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று மாலை 'ரான்' அலுவலகத்தில் அவர் நடத்திய பத்திரிகையாளருடனான சந்திப்பின்போதே இத்தகவலைத் தெரிவித்தார். இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

நண்பகல் அளவில் நானும் வடமாகாண மீனவர் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகளும் 512 ஆவது படைப்பிரிவின் கேணல் உடவத்தவைச் சந்தித்து மேற்படி விடயங்கள் தொடர்பாக பேச்சு நடத்தினோம்.

இந்தத் தொழிற்சாலையை உரிய இடத்தில் ஆரம்பிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியிருப்பதை படை அதிகாரியிடம் அப்போது நான் சுட்டிக்காட்டினேன் என்று அமைச்சர் ஜயலத் கூறினார்.

மேற்படி தொழிற்சாலையை அமைப்பதற்கென புனர்வாழ்வு அமைச்சு 60 லட்சம் ரூபாவை ஒதுக்கி 30 லட்சம் ரூபாவை முற்பணமாக வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்ட அமைச்சர் இதற்கான அனுமதியை பலாலி படைத்தலைமையகம் ஒரு சில தினங்களில் வழங்கும் என்றும் கூறினார். (எ-9)

### நால்வருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஜூன்10

யாழ்.பல்கலைக்கழக விடுதிக் கட்டடப் பணிகளுக்கென வைக்கப்பட்டிருந்த சீமெந்து பக்கெற்றுகள் திருடப்பட்டமை தொடர்பாகக் கைதான நால்வரையும் விளக்கமறியலில் வைக்கும்படி யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய பொலஸார் என்நவரெத்தினராசா, அமணிக்குமரன், கேசில்வா, கேகமலதாசன் ஆகியோரைக் கைது செய்திருந்தனர்.

இந்த நால்வரையும் நேற்று முன்தினம் யாழ்.நீதிவான் முன் ஆஜர் செய்த சமயம் நால்வரையும் எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவாளன் உத்தரவிட்டார். (ஐ-3)

# வன்னிக்குளங்கள் புனரமைப்புக்கு போதிய நிதி ஒதுக்கீடு இல்லை

## நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூன்10

வன்னியில் தூர்ந்துபோயுள்ள குளங்களைப் புனரமைப்பதற்கு போதிய நிதி வழங்கப்படவில்லையென முத்தையன் கட்டுப் பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.சண்முகராஜா தெரிவித்துள்ளார்.

தற்போது முத்தையன்கட்டுக் குளத்திற்கு ஒன்பது லட்சம் ரூபாவும், தண்ணீர் முறிப்புக் குளத்திற்கு 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், விசுவமடுக்குளத்திற்கு 7 லட்சம் ரூபாவும் கனுக்கேணிக் குளத்துக்கு 6 லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதிகளைப் பயன்படுத்தி சீரான முறையில் குளங்களைப் புனரமைக்க முடியாது.

- இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டார். (எ-9-ரி)

# அரச வைத்தியசாலைகளில் இன்றுமுதல் 4,000 மருத்துவர்கள் வேலை நிறுத்தம்

## இன்று மாலைக்குள் அரசு தீர்வு தராவிடின் நாளை மேலும் விஸ்தரிப்பு

அரசாங்க பொது வைத்தியசாலைகளிலும் போதனா வைத்தியசாலைகளிலும் கடமையாற்றும் நாலாயிரம் மருத்துவர்கள் இன்றுமுதல் பொது வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிக்கின்றனர்.

மருத்துவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்கு இன்று மாலைக்குள் அரசு உறுதியான பதில் அளிக்காவிட்டால் நாளை 11ஆம் திகதி முதல் நாடெங்கிலும் உள்ள ஆதார வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள் உட்பட அனைத்து அரசாங்க வைத்தியசாலைகளிலும் கடமையாற்றும் எல்லா மருத்துவர்களும் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் கலந்துகொள்வார்கள். நியாயமான தீர்வு கிடைக்கும்வரை வேலைநிறுத்தப் போராட்டம் தொடருமென அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கச் செயலாளர் டாக்டர் திமுத்து சில்வா தெரிவித்தார்.

மருத்துவர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக சுகாதார அமைச்சர் பி.தயரத்ன மூன்று அம்சத் திட்டங்களை முன்வைத்தார். ஆனால், ஆறு மாதமாகியும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அமைச்சர் வாக்குறுதி அளித்தபடி இதனை நடைமுறைப்படுத்தும் வரை வேலைநிறுத்தப் போராட்டம் தொடரும் எனவும் அவர் கூறினார்.

எனினும் புற்றுநோய்சிகிச்சை வைத்தியசாலை, லேடிரிஜ்வே குழந்தைகள் வைத்தியசாலை மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு என்பவற்றில் மனிதாபிமான முறையில் மருத்துவர்கள் பணிபுரிவார்கள் என்றும் டாக்டர் திமுத்து சில்வா மேலும் கூறினார். (ஐ-5-139)

### பாடசாலை பெயர் வளைவு திறப்புவிழா

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் நுழைவாயில் பெயர்வளைவுத் திறப்புவிழா இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு வித்தியாலய அதிபர் சண்முககுமார் தலைமையில் நடைபெறும்.

வித்தியாலய பழைய மாணவன் சிபாஸ்கரன் வளைவைத் திறந்துவைப்பார். (ஐ-3)

# இனப்பிரச்சினை குறித்து 'பவ்ரல்' வினாக்கொத்து

வலிகாமம் வடக்கு,ஜூன்10

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப்பு (பவ்ரல்) இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமான கேள்விக்கொத்தொன்றை தபால்மூலம் சிலருக்கு அனுப்பியுள்ளது.

குடாநாட்டில் பொதுச்சேவைகளில் ஈடுபடுவோர், அரச அலுவலர்கள் சிலர், பொதுஅமைப்புக்களின் நிர்வாகிகள் போன்றோருக்கு இந்தக் கேள்விக் கொத்து கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு யுத்தம் மூலமா அல்லது பேச்சு மூலமா கிட்டும்?

ஐக்கிய இலங்கைக்குள்ளா இல்லது சமஷ்டி அமைப்புக்குள்ளா அல்லது தனிநாடு பெறுவதன் மூலமா தீர்வு ஏற்படமுடியும்?

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வதியும் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்போது விடுதலைப் புலிகளும் பங்காளிகளாக வேண்டுமா?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பு, விடுதலைப் புலிகள், அரசு, எதிர்க்கட்சி, பொதுமக்கள் ஆகியோரில் யாரிடம் உள்ளது?

யுத்தத்திற்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட விருப்பம் உண்டா? ஆகிய கேள்விகள் இந்தக் கேள்விக்கொத்தில் அடங்கியுள்ளன. இந்த வினாக்கொத்துக்கு விடையளித்து தம்மிடம் மீளச்சேர்ப்பிக்கும்படியும் அந்த அமைப்பு கேட்டுள்ளது. (ஒ-86)

# புலிகளின் கோரிக்கைக்கு நாங்கள் முன்வைத்த யோசனை குழப்பமானது என்பது இப்போது எமக்குத் தெளிவாகியுள்ளது

## உதவி வழங்கும் மாநாட்டில் பிரதமர் ரணில் தெரிவிப்பு



**டோக்கியோ நகரில் நேற்று ஆரம்பமான இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரையின் முழு விவரம் இங்கு பிரசுரமாகிறது.**

உலக வரைபடத்தில் இலங்கை ஒரு சிறிய நாடு. முக்கியத்துவமற்றதாகவும் கூட காணப்படுகிறது. இருப்பினும், உலகம் முழுவதிலும் எனது நாட்டில் சமாதானத்தை மீண்டும் நிலைபெறச் செய்ய ஆழ்ந்த கடப்பாடு கொண்டவர்களான குறிப்பிடத்தக்க பல நண்பர்கள் எமக்கு இருக்கிறார்கள் என்பதை இன்றைய மாநாடு எடுத்துக்காட்டுகிறது.

இந்த மாநாட்டை நடத்துவதற்காக ஜப்பான் நாட்டுக்கு நாம் பெருமளவு கடமைப்பட்டிருக்கிறோம். இம்மாட்டை ஏற்பாடு செய்ததற்காகவும், இன்று அதில் பங்குபெறுவதற்காகவும், குறிப்பாக ஜப்பான் பிரதமர் யுனிசிரோ கொய்சுமிக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்கிறேன். வெளிவிவகார அமைச்சர் யொரிகோ கவகுச்சிக்கும் இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷிக்கும் நான் நன்றிகூற விரும்புகிறேன். பல தசாப்தங்களாக ஜப்பானிய மக்களுடன் நாம் கொண்டிருக்கும் நட்புறவை அவர்களது தொடர்ச்சியான ஆதரவும் ஊக்கமளிப்பும் பிரதிபலிக்கின்றன. எதிர்வரும் காலங்களில் அது மென்மேலும் வளரும் என நான் தனிப்பட்ட முறையில் நம்புகிறேன்.

இம்மாநாட்டின் இணைத் தலைவர்களாகச் செயற்படுவதற்காகவும் வாஷிங்ரனில் நடைபெற்ற முன்னோடி கருத்தரங்கிற்கு வழங்கிய ஒத்துழைப்புக்காகவும் நான் அமெரிக்காவுக்கு நன்றி கூற விரும்புகிறேன். அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் பங்குபற்றுவதன் மூலம் இம்மாநாட்டில் அமெரிக்கா வைத்திருக்கும் முக்கியத்துவம் புலப்படுகிறது.

ஐரோப்பிய யூனியனும் நோர்வேயும் மேலும் இரு இணைத் தலைவர்களாக இருப்பது நாம் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இன்று இம்மாநாட்டு மண்டபத்தில இலங்கையின் பல நண்பர்கள் இருந்தாலும், சமாதான முயற்சியின் அனுசரணையாளர் என்ற பங்குப்பணியில் நோர்வே அரசாங்கம் ஆற்றியவற்றை நான் விசேடமாகக் குறிப்பிடவேண்டும். இவ்வாறான பணியில் அவர்களுக்கு சர்வதேச புகழ் உண்டு. சமாதானத்திலுள்ள கடப்பாட்டை அவர்கள் தினமும் பிரதிபலிக்கின்றனர். இந்த முக்கியமான சமாதான முயற்சியில் அனுசரணையாளர்களாக அவர்கள் தொடர்ந்து பங்குபெறுவதைக் காண நாம் விரும்புகிறோம்.

இழந்த வாய்ப்புக்களை மீண்டும் கைப்பற்றிக்கொள்வதற்காக இலங்கை மக்கள் 18 மாதங்களுக்கு முன்னர் ஒரு புதிய அரசாங்கத்துக்கு ஆணை வழங்கினர். சில பெரிய சவால்களைத் தீர்க்கும் பணியை அவர்கள் எம்மிடம் ஒப்படைத்தனர்.

சுதந்திரம் பெற்றபோது நாம் கல்வியறிவுள்ள, சுபீட்சமான, சமாதான நாட்டினராக இருந்தோம். பல விடயங்களில் ஆசியாவில் முன்னோடியாக இருந்தோம். தென்கிழக்கு ஆசியாவிலுள்ள பல நாடுகள் தமது சொந்த பொருளாதாரங்களைக் கட்டியெழுப்புகையில் இலங்கையைப் பின்பற்றுவது குறித்துப் பேசின.

### மக்கள் தந்துள்ள மூன்று பொறுப்புகள்

அன்று இருந்த நாடாக நாம் இன்று இல்லை. ஆயினும் இலங்கை மக்கள் துணிவுடனும் உறுதியுடனும் உள்ளனர். பெருமளவை அவர்கள் சகித்துக்கொள்வர். இருந்தபோதிலும், எமது நாட்டின் குன்றிய வெற்றிகளால் அவர்கள் சோர்ந்துபோயிருக்கின்றனர். எனவே மூன்று முக்கிய விடயங்களில் வெற்றிகாணும் பொறுப்பை அவர்கள் எம்மிடம் ஒப்படைத்துள்ளனர்.

நிரந்தர சமாதானத்துக்கு அத்திபாரமிடுவது முதலாவது விடயமாகும். இனக்குரோதங்கள் பகைமைகள் நிறைந்த ஒரு பிளவுபட்ட நாடாக - தன்னையும் தனது மக்களையும் அழிக்கும் போரில் ஈடுபட்டுள்ள நாடாக நாம் மாறியிருக்கிறோம்.

மண்டியிட்ட நிலையிலிருக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது இரண்டாவது விடயமாகும். எமது முழுப் பொருளாதார வாழ்க்கைமுறையும் மறுசீரமைக்கவும் சீர்திருத்தப்படவும்வேண்டும் என்று மக்கள் ஏற்றுக்கொண்டனர். பெரும் விரயமும், ஆத்தமுமற்ற போரை பொருளாதாரம் இனிமேலும் தாங்கமுடியாது. புதிய உலகமயமாக்கலில் நாம் போட்டியிடவும் சுபீட்சமடையவும் கூடிய ஒரு நிலையில் நம்மை நாம் வைத்திருக்க வேண்டும்.

அரசியல் ரீதியாக ஆழமாகப் பிளவுபட்ட ஒரு சமுதாயத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பது மூன்றாவது விடயமாகும். கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குக் கூடுதலான காலமாக அரசியல் இடைவெளி அதிகரித்துள்ளது. அரசியல் கட்சிகளுக்கிடையிலான கருத்தொற்றுமை செயலைக்காட்டிலும் சொல்லிலேயே கூடுதலாக உள்ளது. தேர்தல்கள் அதிகரித்த வன்முறையாகவும் முரண்பட்டவையாக மாறியுள்ளன.

முன்னைய தேர்தல்கள் போலன்றி பொதுமக்கள் ஐக்கிய முன்னணித் தலைவியான பதவியிலுள்ளதொரு ஜனாதிபதியுடன் ஒரு புதிய அரசாங்கத்தை மக்கள் தெரிவுசெய்யத் தலைப்பட்டனர். அரசியல் கட்சிகள் தமது வேறுபாடுகளைப் புதைத்துவிட்டு ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும் என்று தாங்கள் விரும்புகிறார்கள் என்பதற்கு அவர்கள் தெளிவான சமிக்ஞையை காட்டினார்கள்.

சமாதான நடைமுறையில் ஜனாதிபதி பங்கு விசேடமானதொன்றாகும். துணிச்சலான ஒரு நடவடிக்கையாக சமாதான நடைமுறையை அவர் ஆரம்பித்தார். நோர்வேக்காரர்களை அனுசரணையாளர்களாக நியமித்தார். சமாதான நடைமுறையை கொள்கையளவில் அவர் தொடர்ந்து ஆதரிப்பதை இன்று நாம் பாராட்டுகிறோம். அந்த ஆதரவினாலேயே புரிந்துணர்வுப் பாலங்களைக் கட்டியெழுப்பும் பணியில் நாம் தொடர்ந்து ஈடுபட்டிருக்கிறோம்.

நாம் பதவியேற்றதும், சமாதான நடைமுறை பற்றிய எமது சிந்தனை மனிதாபிமான தேவைகளை அடிப்படையாகக் கொண்டதாகவே இருந்தது. வடக்குக் - கிழக்கைப் புனரமைப்பதற்கு முன் அரசியல் தீர்வொன்றுக்காக காத்திருக்கவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும் என்று நாம் தீர்மானித்தோம். இருதரப்பினருக்குமிடையிலான பகைமையும் அவநம்பிக்கையும் மிகவும் ஆழமானவையாகும். தீர்ப்பதற்கு பல்லாண்டுகள் பிடிக்கும். சமரசப்பேச்சுக்கள் நடைபெறுகையில் - நிதியுதவி கண்டுபிடிக்கப்பட முடியுமேயானால் யுத்தத்தால் அழிந்த பிரதேசங்களில் எமது மக்களுக்கு மீண்டும் வாழ்வளிக்க நாம் முயற்சிக்கவேண்டும் என்று நாம் இணங்கிக்கொண்டோம்.

உண்மையிலேயே இது ஒரு மிகவும் ஆபத்தான தந்திரோபாயமாகும். ஏனெனில், ஏனைய இடங்களில் சமாதான நடைமுறைகளில் நிதியுதவிகளுக்கு உறுதியளிப்பதற்கு முன் சமாதான ஒப்பந்தத்தைக் காணவே உதவி வழங்கும் நாடுகள் எப்பொழுதும் விரும்பின. ஒவ்வொரு சமாதான நடைமுறையிலும் ஏற்றங்களும் இறக்கங்களும் உள்ளன என்பதால் இது கூடுதலான ஆபத்தானதாகும். சமாதானப் பேச்சுக்கள் தேக்க நிலையை அடைந்து முன்னேற்றம் மெதுவானதாகவும் இருக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு. இவ்வாறான நிலையில் உதவி வழங்கும் நாடுகள் எவ்வாறு நடந்துகொள்ளும்?

அவ்வாறான ஒரு தேக்க நிலையில் நாம் தற்போது இருக்கிறோம். அந்த நேரம் மிகவும் துரதிர்ஷ்டமானதாகும். ஆயினும், கடந்த 15 மாதங்களில் அடைந்த முன்னேற்றம் போதுமானது என நான் நம்புகிறேன். நிரந்தர போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது முதல் இரு தரப்பினரும் இறுதிப்பெறுபேறு குறித்து உண்மையாக உள்ளனர் என்பதை நீங்கள் காணமுடியும்.

### புலிகள் இங்கில்லாதது கவலைக்குரிய விடயம்

விடுதலைப் புலிகள் இன்று இங்கிருக்காதது கவலைக்குரிய ஒரு விடயமாகும். ஏனெனில், வடக்கு - கிழக்கு மக்களே இறுதி இழப்பாளிகளாவர். விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் பங்காளி நிகழ்ச்சியாகவே இம்மாநாடு இருக்கிறது. எவ்வாறாயினும் வெகுவிரைவில் நாம் முன்னேறிச் செல்லமுடியும் - செல்வோம் என்பதை நீங்கள் காண சமாதான நடைமுறையின் முதிர்ச்சி போதுமானதென நான் நம்புகிறேன்.

இது ஒரு பொறுப்பான அரசாங்கம் என்பதை இப்பொழுது நீங்கள் அங்கீகரித்திருக்கிறீர்கள். விடுதலைப் புலிகளுடன் பங்குகொண்டு வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு நாம் பணியாற்றுவோம். வடக்கு - கிழக்கிலுள்ள எல்லா சமூகங்களினதும் நலன்களைப் பாதுகாக்கும் பொறுப்பும் எமக்கு உண்டு.

சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமானதும், சமஷ்டி அரசாங்க கட்டமைப்புக்குள் இறுதித்தீர்வு காண்பதற்கான நடைமுறையை நாம் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும். நாங்கள் கூட உணர்ந்துகொள்வதைத் தான் கடந்த சில வாரங்களாக புலிகளின் நடவடிக்கைகளும் வெளிப்படுத்துகின்றன.

நாங்கள் முன்வைத்த கட்டமைப்பு அதிக குழப்பமானதும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குத் தூரமானது அல்லது அவர்கள் வேகமாக ஏற்றுக்கொள்ளப்போதுமானதும் அல்ல என்பது இப்போது தெளிவாகியுள்ளது. அரசால் வழங்க இயன்றதிலும் பார்க்கவும் வேகமான பதில் வெளிப்பாட்டை மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

பலதரப்பு ஏஜென்ஸிகள் மற்றும் உதவும் நாடுகள் சமூகத்துடன் சேர்ந்து நாங்கள் புதிய கட்டமைப்பு ஒன்றை வடிவமைத்துள்ளோம் இரண்டு நல்ல காரணங்களுக்காக இதைச் செய்துள்ளோம்.

முதலாவது - அரசையும் புலிகளையும் போன்று நடைமுறைப்படுத்தலில் உள்ள பின்னடைவு குறித்து உதவும் நாடுகள் சமூகமும் விரக்தியுற்றுள்ளது.

இரண்டாவது - எங்களுடைய குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு உதவும் நாடுகள் சமூகத்தின் பரந்த - சாத்தியமான - பங்களிப்புடனேயே தீர்வுகாண முடியும் என்பதை ஆரம்ப முதலேயே நாங்கள் உணர்ந்திருந்தோம்.

### புலிகளை திருப்திப்படுத்த இதுவரை எம்மால் முடியவில்லை

ஆனாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கருத்துக்கேற்ப எங்களுடைய யோசனைகளை இணக்கப்படுத்திகொள்ள இதுவரை எங்களால் முடியவில்லை என்பது கவலைக்குரியது.

உதவும் நாடுகள் சமூகம் குறித்து பேசும்போது, வடக்கு - கிழக்கு தேவை மதிப்பீட்டு பத்திரத்தை தயாரிப்பதில் இவ்வளவு நேரத்தையும் சக்தியையும் செலவிட்ட முகவர் அமைப்புகளுக்கு நன்றிகூற விரும்புகிறேன். இந்தத் திட்டம் அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் சர்வதேச சமூகம் ஆகியவற்றின் இணைப்பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் செயற்பாட்டு நடைமுறைப்படுத்தலும் இத்தரப்புகளின் பங்களிப்புடனேயே மேற்கொள்ளப்படும்.

இம்மாநாட்டில் பங்குபற்றி சிறப்பிக்கும் ஐநா., உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவையும் இந்த மதிப்பீட்டுக்காக சலிப்பின்றிப் பணியாற்றியுள்ளன. அவை தமது அவதானிப்புகளை இந்த மாநாட்டின்போது சமர்ப்பிக்கும் என்பது எனக்குத் தெரியும்.

அதேவேளை, அதிகளவு அரசியல் வேலைகள் இன்னும் செய்யப்படவேண்டியிருக்கின்றன என்பதும் தெளிவு.

புனரமைப்பு புனர்வாழ்வு, மீள் நல்லிணக்கத் திட்டங்களை நாம் முன்னெடுப்பதற்கு வடக்கு, கிழக்கு தேவை மதிப்பீடு எமக்குச் சந்தர்ப்பம் அளிக்கின்றது.

இந்தத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு தேவைப்படும் மூலவளங்களை வழங்குவது தொடர்பான உங்களின் உறுதி வெளிப்பாட்டின் மூலம் வடக்கு - கிழக்கு மக்களுக்கு அதிகம் தேவைப்படும் நிவாரணத்தை நாங்கள் தரக்கூடியதாக இருக்கும்.

அந்தப் பணத்தைப் புலிகளுடன் இணை மற்றும் கூட்டுப் பங்களிப்புடன், யுத்தப் பாதிப்புப் பகுதியில் உள்ள எமது சகல இன மக்களுக்கும் பயன்படத்தக்க வகையில் கையாள நாம் விரும்புகிறோம்.

அதேசமயம், நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக எங்களிடையேயுள்ள வேறுபாடு அவ்வளவு பெரிய இடைவெளியைக் கொண்டதல்ல.

### அரசு - பு[illegible] ஒஸ்லோ அ[illegible]விப்பு

அரசும் புலிகளும் ஒஸ்லோவில் குறிப்பிடதத்தக்க அறிவிப்பு ஒன்றுக்கு கூட்டாக இணங்கியிருந்தன. அது:-

"தமிழ் பேசும் மக்களின் சரித்திர பூர்வமான வாழிடத்துப் பிரதேசத்துக்கு, ஐக்கிய இலங்கைக்குள் - உள்ளக சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டின் அடிப்படையிலான - சமஷ்டி கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் தீர்வைக்காண முயல்வது என தரப்புக்கள் இணங்கியுள்ளன. தீர்வு எல்லா சமூகத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்றும் தரப்புகள் இணங்கியுள்ளன." - இது தான் அந்தக் கூட்டு அறிவிப்பு.

அங்கு சென்றடைவதற்கான வழிகாட்டிப்படம் (Road Map) ஒன்றை நாம் தயாரிப்பதுதான் இப்போது முக்கியமானது இந்த அடிப்படையில் இடைக்காலத் தேவைக்கு புதுமையான தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பை (Innovative Provisional Administrative Structure) நாங்கள் தயாரிக்கவேண்டியுள்ளது. அது வடக்கு, கிழக்கின் புனரமைப்பு மற்றும் அபி விருத்திக்கும் இடைக்கால மாற்று நடவடிக்கைக்குப் (Administrative Aspects of the Transitional Process) பொறுப்பாக இருக்கவேண்டும்.

அது பின்வரும் இலக்குகளை எய்துவதாகவும் இருக்கவேண்டும்

★ அது செயல்திறன் மிக்கதாகவும், வெளிப்படையானதாகவும், பொறுப்புக் கூறக்கூடியதாகவும் இருக்கவேண்டும்.

★ வடக்கு,கிழக்கில் அனைத்து சமூகங்களின் நலன்களையும் பேண வேண்டும்.

★ புலிகள் குறிப்பிடத்தக்க (Significant Role) பங்களிப்பு அளிக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

★ இலங்கையின் சட்டங்களோடு முரண்படுவதாக இருக்கக்கூடாது.

இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் அதிகாரத்தில் பின் வருவனவும் சேர்க்கப்படவேண்டும்.

★ யுத்தத்தால் பாதிப்புற்ற பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புதல்.

★ புனரமைப்பு

★ மீள்குடியமர்வு

★ மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான அவசிய சேவைகளை வழங்குதல்.

முன்நோக்கிய நகர்வுக்கு, முஸ்லிம்களின் சிரத்தையைக் கவனிக்கத்தக்கதாக சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் பிரதிநிதிகள் குழுவும் பங்குபற்றுவது மிகவும் முக்கியமானதாகின்றது.

இறுதி அரசியல் தீர்வை நாம் பேசி முடிந்ததும் அரசமைப்புச் சீர்திருத்தம் ஒன்றைக் கொண்டுவருவோம். அது குறித்து சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் இறுதித் தீர்மானத்தை வெளிப்படுத்தத்தக்கதாக அதை மக்களிடம் எடுத்துச்செல்வதில் நாம் உறுதியாக உள்ளோம்.

அதற்கு மேலதிகமாக, இரு தரப்புக்களுக்குமிடையில் அரிதாது பரஸ்பர நம்பிக்கை குன்றியிருப்பதால் இந்த நடவடிக்கையை கருத்துள்ள முறையில் உந்தித் தள்ளுவதற்கான வழிகளையும் வசதிகளையும் சர்வதேச உதவும் சமூகம் அடையாளம் காணுவதும் முக்கியமானது. எனவே, டோக்கியோவுக்கு அப்பால் எதிர்காலத்திலும் உதவும் நாடுகள் சமூகம் இதில் எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்க முடியும் என்பதை நாம் சிந்திப்பதும் முக்கியமானதாகின்றது.

சமாதானத்திற்கும் பொருளாதார மீட்சிக்குமான இலங்கையின் தேடலில் டோக்கியோ ஒரு கட்டத்தின் முடிவாகவும் அடுத்த கட்டத்தின் ஆரம்பமாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றது.

அடுத்த சில தினங்களில் - எங்களின் இந்தச் செயற்பாடுகளின் முடிவில் - இங்கு திரண்டிருக்கும் நாம் அனைவரும் புதிய உத்வேகத்துடனும் புதுப்பிக்கப்பட்ட சுறுசுறுப்புடனும் எம்மை மீள அர்ப்பணிக்கத் தயாராவதும் அவசியமானது.

பிரச்சினைகளை தன்னால் இயன்ற முறையிலும் நேர்மையுடனும், உறுதியுடனும் மக்களின் விருப்பை முழுக்கவனத்தில் கொண்டும் அரசு தொடர்ந்து கையாளும். அதற்குக் குறைவான எதுவும் மக்கள் தொடர்பான எமது பொறுப்பை தட்டிக்கழிப்பதாகிவிடும்.

### அடிமட்டத்தில் உள்ள பொருளாதாரம்

பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, சுதந்திரமடைந்த காலத்தில் எங்கள் பொருளாதாரம், ஆசிய பொருளாதார லீக்கில் உச்சத்தில் இருந்தது. இப்போது அது அடி மட்டத்தில் உள்ளது.

துவண்டுவிழும் நிலையில் இருந்த பொருளாதாரத்தை பதினெட்டு மாதங்களுக்கு முன்னர் நாம் பொறுப் பேற்றோம். ஒருநாடு என்ற முறையில் பல வருடங்களாக மரம் வளர்வதற்கு இடமளிக்காமல் அதிலிருந்து கனிகளைப் பிடுங்கிக்கொண்டிருந்தோம்.

நாங்கள் கஷ்டமான முடிவுகளை எடுக்கவேண்டியிருந்தது. பல வருடங்களாக மக்கள் வறுமையாலும் கஷ்டங்களாலும் பெரிதும் பாதிப்புற்றனர். மோசமடைந்த அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தத்தக்க எதுவும் பயன் தந்ததாக அமையவில்லை.

ஆனாலும், ஏனைய பல நாடுகளினதும் விட எமது சமூகக் குறிகாட்டி உயர்ந்தது என்பதுதான் ஒரேயொரு நல்ல செய்தி. சமூகக் குறிகாட்டிக்கும் பொருளாதார நிலைக்கும் இடையில்தான் சமநிலையற்ற தன்மை.

இந்தக் காரணத்தினால்தான குறுகிய காலத்தில் ஆழமான வேதனையையும் நீண்டகாலத்தில் எங்கள் பொருளாதாரத்தை மீள் ஸ்திரப்படுத்தக்கூடிய ஒரு கொள்கையை நாம் முன்வைக்கவேண்டியதாயிற்று.

இது அரசியல்வாதிகளின் கனவு நிலை அல்ல என்பதை நீங்கள் அனைவரும் புரிந்துகொள்வீர்கள். அரசியல்வாதிகள் என்ற முறையில் மக்கள் வேண்டுவன எல்லாவற்றையும் வழங்கவே நாங்கள் விரும்புவோம். ஆனால், எங்களைப் பொறுத்தவரை தெரிவுகள் மட்டுப்படுத்தப்பட்டவை.

பழைமையான, திறமையற்ற அளவுக்கு அதிகமான ஊழியர்களைக் கொண்ட பல நிறுவனங்களை அரசு நடத்திக்கொண்டிருக்கின்றது. இது, கல்வி, சுகாதாரம், வீடமைப்பு போன்ற அவசிய சேவைகளிலிருந்து விலகி - பிணக்கினால் திசை திருப்பப்பட்ட - மூலவளங்களுடன் பிணைக்கப்பட்டுள்ளது. நாம் எமது வருவாய்க்கு (இயல்புக்கு) அப்பாற்பட்ட வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

நிதி தொடர்பான கடும் கொள்கைகளை மீளக்கொண்டுவருவதும் ஒப்பீட்டளவில் மேலும் வலி தருவதாகும். பொருளாதாரத்தை பரவலாக்குவதும் மறுசீரமைப்பதும் அவசியமானது. பூகோளச் சந்தையில் எமது தொழில் முயற்சியாளர்களும் போட்டி போட அனுமதிக்கத்தக்கதான சூழ் நிலை ஏற்படுத்துவதும் கட்டாயமானதாக இருந்தது. எமது மக்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பையும் சுபீட்சத்தையும் கொண்டுவந்தமை மேலும் அவசியமான முக்கிய விடயமாக அமைந்தது.

எமது நாட்டில் வாழும் ஒரு கோடி 90 லட்சம் மக்களில் 54 லட்சம் பேரைக் கொண்டிருக்கும் மேற்கு மாகாணத்தில்தான் இலங்கைப் பொருளாதாரத்தின் மூன்றில் இரு பங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. நாட்டின் ஏனைய பகுதி களில் கட்டுமானங்கள் மோசம்; வசதிகள் மோசம்; மக்கள் ஏழ்மையில் வாடுகின்றனர்.

இதனால்தான் இலங்கையை மீளப்

(10ஆம் பக்கம் பார்க்க)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 18 - 07 - 1949

மறைவு 11 - 05 - 2003

## திருமதி அருளானந்தம் அமல உற்பவம்

(குவம்)

அன்பிற்கு இலக்கணமாம் எங்கள் அம்மா!
அரவணைப்பின் சிகரமாம் எங்கள் அம்மா!
பண்பின் இருப்பிடமாம் எங்கள் அம்மா!
பாரினில் இணையில்லா எங்கள் அம்மா!
இனி எங்கே காண்போம் உங்களை நாம்?
இங்கே ஏங்கித் தவிக்கின்றோம் நீங்களின்றி!
'அம்மா' என்றழைக்க இனி யாருமில்லை எங்களுக்கு!
எங்கும் நிறைந்திருக்கும் இறைவனடி குளிர்ந்திருக்க
இங்கு நாம் இறைஞ்சுகின்றோம் இறைவனையே!

17, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (18933)

உமது பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## சண்டிலிப்பாயில் வீடுகள் அமைக்க நிதி ஒதுக்கீடு

மாதகல், ஜுன்10

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த 37 குடும்பங்களுக்கு வீடுகள் அமைப்பதற்கென அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் 18 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இப்பணமானது தலா 50 ஆயிரம் ரூபா வீதம் 37 குடும்பங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-10-ரி)

## தவறிவிட்டது

நவநீதன் என்பவருடைய கையடக்கத் தொலைபேசி (NOKIYA) தெல்லிப்பழைக்கும் மானிப்பாய்க்கும் இடையில் 08.06.2003 ஞாயிற்றுக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தயவுசெய்து ஒப்படைத்துதவவும்.

மொடேர்ன் புடைவையகம்
நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.
T.P .No: 5191
சன்மானம் வழங்கப்படும். (18937)

## பதவி வெற்றிடம்

நியூட்டன் அக்கடமி
கோண்டாவில்

ஆண்டு 03-05 வரையான வகுப்புகள்
தகுதியான ஆசிரியர்கள் தகுந்த ஆவணங்களுடன் சமுகம் தரவும்.
காலம்:- 11-06-2003 (புதன்)
காலை 8.00-10.00 (18940)

# ஈரவிழிகளுடன் இரண்டு ஆண்டுகள்

25 - 10 - 1985



10 - 06 - 2001

## அமரா ஸ்ரீநிதி கபில்

(மாணவன், யாழ். வயாவிளான் ம.ம. வித்தியாலயம்)

பொங்கிவரும் பெருநிலவாய் புன்னகையின் இருப்பிடமாய்
மங்காத மணிவிளக்காய் எங்கும் பிரகாசித்த கபிலனே!
இந்த இரண்டு ஆண்டுகள் கடந்தும் உன்நினைவு மறக்கமுடியவில்லையே
எங்கு பார்த்தாலும் உன் திருமுகமே தெரியுதடா என் கபிலா!

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். T.P : 070213085

உன்பிரிவால் துயருற்றிருக்கும்:
மகேந்திரம் குடும்பத்தினர். (18949)

# மரண அறிவித்தல்

## வேதர் செல்லையா

தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த வேதர் செல்லையா கடந்த 06-06-2003 வெள்ளிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற பூரணத்தின் அன்புக் கணவரும், வேலாயுதம் (ஜேர்மனி), செல்வச்சந்திரன் (ஆசிரியர்,யா/வேலாயுதம் ம.வி. பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பூரணம், நிர்மலா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜனார்த்தன், கேஜினி, மகாஜன், தனுஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11-06-2003) புதன்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளை தெற்கு பருத்தித்துறை. (18946)

தகவல்
செ.செல்வச்சந்திரன், (மகன்)

# யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி விமலா கணேசரட்ணம் அவர்களின்

## சேவை நலன் பாராட்டு விழா - சிறப்பு மலர் - 10-06-2003

### சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்தவர்



திருமதி வி.கணேசரட்ணம் அவர்கள் நீண்டகால ஆசிரியப் பணியிலிருந்து இன்று இளைப்பாறுகின்றார். 1976ஆம் ஆண்டு ஆசிரிய சேவையில் சேர்ந்துகொண்ட இவர், தனது சேவைக் காலத்தின் பெரும்பகுதியை யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கே ஆற்றியவர். அந்த வகையில், கடந்த நான்கு ஆண்டுகளாக எமது கல்லூரியிலும் சேவையாற்றக்கிடைத்தமை எமது கல்லூரி மாணவர்களின் பெரும்பேறாகக் கருதவேண்டும். இவர் ஒரு கலைப் பட்டதாரி என்ற வகையில், குறிப்பாக புவியியல், சமூகக்கல்வி ஆகிய பாடங்களில் மிகத் தேர்ச்சிபெற்றவராக விளங்கினார். கடந்த மூன்று ஆண்டுகளாக வாழ்க்கைத் தேர்ச்சிப் பாடத்தையும் மிக விருப்போடு கற்பித்து வந்தார். தரம் 7 முதல் 9 வரையான மாணவர்களுக்குப் போதிப்பதில் மிகவிருப்புடையவராக விளங்கியவர். தானாகவே விடயங்களைத்தேடிக் திட்டங்களை வகுத்துக் கற்பிக்கும் திறமை இவருக்குண்டு.

இவர் தனது அர்ப்பணிப்பான சேவையினால் மாணவ சமுதாயத்தில் நன்மதிப்பையும், நற்பெயரையும் பெற்றுக்கொண்டவர். அத்துடன் தனது அமைதியான போக்கினாலும், அடக்கமான பேச்சினாலும் ஆசிரிய சகோதரர்களிடம் காட்டிய அன்பு, பரிவு என்பவற்றினாலும் நற்பெயரைப் பெற்று விளங்கினார்.

இவ்வாறு சிறப்புப் பெற்று விளங்கிய இவர், எமது கல்லூரியின் பழைய மாணவி என்பதைக் கூறிக்கொள்வதிலும் பெருமையடைகின்றேன். கல்லூரித் தாயும் மகிழ்வடைகின்றாள்.

இவரது ஓய்வுகாலம் மகிழ்ச்சிகரமாகவும் சுபீட்சமாகவும் அமைய வேண்டுமென எங்கள் குலதெய்வமாகிய கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

பொ. கமலநாதன்
(அதிபர்)

### கடமையே கண்ணெனத் திகழ்ந்தவர்



திருமதி விமலா கணேசரட்ணம் அவர்கள் ஓய்வு பெறுகின்றார்கள் எனக் கூறப்பட்டதும் அதனை என்னால் நம்பவே முடியவில்லை. அவரின் இளமை மாறாத் தோற்றமும் சுறுசுறுப்பும் அதற்குக் காரணமாகும். கடமையில் கண்ணும் கருத்துமாகவும் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் திறமையாகவும் செயற்பட்ட திருமதி விமலா அவர்கள் மாணவர்களினதும் பெற்றோரினதும் நன்மதிப்பினைப் பெற்றுத்திகழ்ந்தார் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமேயில்லை.

ஒருவருக்கு அவர் கல்வி கற்ற பாடசாலையிலேயே ஆசிரியராகக் கடமையாற்றும் பேறு கிடைப்பது அவரின் பாக்கியமாகும். இப்பேறு கிடைத்ததையிட்டு திருமதி விமலா நிச்சயமாக மகிழ்ச்சியுற்றிருப்பார்; மனநிறைவும் அடைந்திருப்பார். அவர் ஓய்வுபெற்றபோதிலும் அவரின் சேவை தொடர்ந்தும் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் கிடைக்கும் என நம்பலாம்.

அ.பஞ்சலிங்கம்
(முன்னாள் அதிபர்.)



### சேவை விவரம்

| | |
|---|---|
| ஆரம்பக்கல்வி: | கொக்குவில் நாமகள்வித்தியாசாலை |
| இடைநிலைக்கல்வியும் உயர்கல்வியும்: | கொக்குவில் இந்துக்கல்லூரி |
| பட்டப்படிப்பு: | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| 1966 - 1969: | பொதுக்கலைப் பட்டதாரி |
| 1987 - 1990: | பட்டமேல் கல்வி டிப்ளோமா திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொடை |
| ஆசிரியப்பணி: | |
| 1976 - 1979: | அநுராதபுரம் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயம் |
| 1979 - 1998: | யா/கொக்குவில் இராமகிருஸ்ண வித்தியாசாலை |
| 1999 - இன்றுவரை - | யா/கொக்குவில் இந்துக்கல்லூரி |

### கடமை உணர்வு மிக்கவர்



அகவை அறுபதில் தனது ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வுபெறும் ஆசிரியை திருமதி விமலாதேவி கணேசரட்ணம் அவர்களின் பணிநிறைவில் அவரை வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகிறேன். "செய்யும் தொழிலே தெய்வம்" என்ற மகுட வாசகத்தை தன்பணி நாளில் சிரமேற்கொண்டு செயலாற்றியவர் அவர்.

34 வருடங்களுக்கு முன்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில், கலைமாணிப் பட்டத்தை அவர் நிறைவு செய்தாரெனில் - அவரின் கல்விப் பற்றுறுதியும், அறிவுத் திறனும் எத்துணை மேலாண்மை கொண்டதென்பதை எளிதில் உணர்ந்தறிய முடியும்.

கொக்குவில் இந்துக்கல்லூரியின் மூத்த பழைய மாணவியான ஆசிரியை அவர்கள், தனது ஓய்வுகாலத்தில் தான்கற்ற கல்லூரியிலேயே ஆசிரியப் பணியை ஆற்றி ஓய்வுறுவது அவர் செய்த பெரும்பேறு என்றே கூற வேண்டும்.

கல்வியியல் செயற்பாட்டில் அவரின் பட்டறிவும், கடமையில் அவர் காட்டிய அக்கறையும் கல்விப்புலத்தின் புதுவரவுகளுக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகும். நல்ல மாணவ சமூகத்தை உருவாக்கிய பெருமையோடு, வைரம் பாய்ச்சிய அகவை அறுபதில் ஓய்வுபெறும் ஆசிரியை திருமதி விமலாதேவி கணேசரட்ணம் அவர்களின் ஓய்வுகாலம் சிறப்பாகவும், சுகநலமாகவும் அமைய கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர் கழகத்தின் சார்பில் அவரை வாழ்த்தி எல்லா நலனும் அவருக்குக் கிடைக்க இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அ. தனபாலசிங்கம்
தலைவர்,
ஆசிரியர் கழகம்.

கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்.

### கசடறக் கற்றவை...



நான் மாணவனாக இருந்த காலத்தில் "கசடறக் கற்றல்" பற்றிய நல்ல விளக்கத்தினை என் மதிப்பிற்குரிய தமிழாளன் பண்டிதர் செல்லத்துரை மூலம் பெற்றுக்கொண்டேன். மாணவர்களுக்கு அறிவையூட்ட தேவையானவற்றை நாளாந்தம் தேடிக்கற்று, மாணவருக்கு கசடறக் கற்பித்த பெருமை திருமதி விமலா கணேசரட்ணம் அவர்களுக்கு உரியதாகும். இடம்பெயர்ந்து இன்னலுற்ற இடருற்ற காலத்திலும் வவுனிக்குளம் கோட்டக் கல்விப் பகுதியில் பாண்டியன்குளத்தில் மாணவருக்கு மிகுந்த அக்கறையோடு கல்வி புகட்டியவர்.

சமூகக்கல்வி தொடர்பான பாடக்குறிப்புகளைத் தயாரிப்பதில் வல்லவராகவும், அதேநேரத்தில் ஏனைய ஆசிரியர்களுக்கு அத்திறமைமூலம் சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர் திருமதி விமலா. சுருங்கச் சொன்னால் திருமதி விமலா "நல்லாசிரியர்". அவரும் அவரது குடும்பமும் நலமுற வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

கூடர். இ.மகேந்திரன்
(முன்னாள் அதிபர்)

உதயன்

# புனர்நிர்மாணத்துடன் நல்ல சூழலும் வேண்டும்

இப்போது எல்லோருடைய கவனமும் டோக்கியோவின் பக்கம் திரும்பியிருக்கிறது. அங்கே உதவி வழங்கும் நாடுகள் மற்றும் நிதி அமைப்புகளின் மாநாடு நேற்று ஆரம்பமாகி இன்றும் (இறுதிநாளாக) நடைபெற்று வருகிறது.

இந்த மாநாட்டில் இலங்கைக்கு எவ்வளவு நிதி உதவி கிடைக்கும்? விடுதலைப் புலிகள் மாநாட்டில் கலந்துகொள்ள மறுத்துவிட்டதால் வடக்கு - கிழக்கு புனரமைப்புக்கும் அபிவிருத்திக்கும் இந்த மாநாட்டில் நிதி வழங்கப்படுமா?

வழங்கப்படுமானால் எவ்வளவு நிதி வழங்கப்படும்? வழங்கப்படும் நிதி முழுவதையும் வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு அரசு பயன்படுத்துமா? அல்லது முந்திய காலங்களைப் போல் 'டிமிக்கி' கொடுத்துவிடுமா?

இப்படியான கேள்விகளைப் பலரும் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

இரண்டு தசாப்த காலக்கொடும் போரினால் நாட்டில் மிகக் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட பகுதி வடக்குத்தான். ஆகவே, வடபகுதி மக்கள் டோக்கியோ மாநாட்டில் கிடைக்கப் போகும் நிதி உதவியில் மற்றெல்லோரையும் விட அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள்.

ஏனெனில், வடக்கை முற்றாக மீளக் கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது. புனரமைப்பு, புனர்நிர்மாண, அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அவற்றைச் சர்வதேச சமூகத்தின் நிதி உதவியுடன் தான் சீராகச் செய்து முடிக்கலாம்.

அது உண்மைதான். இடிந்து தகர்ந்து போன கட்டடங்களுக்குப் பதிலாக மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் வானுயர் கட்டடங்களையும் நிர்மாணித்தால் போதுமா?

இவை எல்லாம் இருந்தும் சுற்றுப்புறச் சூழல் நன்றாக அமையாவிட்டால் மக்களின் வாழ்க்கை சிறக்காது. போரினால் வடக்கிலே உயிர் இழப்புகள் ஏற்பட்டன; பொருள்கள் அழிந்தன; கட்டடங்கள் தரை மட்டமாகின; மக்கள் அகதிகளாக அவல வாழ்விற்குத் தள்ளப்பட்டார்கள். இவற்றோடு வடக்கின் சுற்றுப்புறச் சூழலும் மாசடைந்து மோசமான நிலைக்குச் சென்று விட்டது.

வடக்கிலே மக்களின் அரசியல், சமூக, பொருளாதார எழுச்சிகளுக்கெல்லாம் ஊற்றுக்கண்ணாக விளங்குவது யாழ்.பல்கலைக்கழகம்.

உலகச் சூழல் தினத்தை முன்னிட்டு யாழ்.பல்கலைக் கழக கேட்போர் கூடத்தில் முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடந்த கருத்தரங்கில் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸும் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும், யாழ்.மாவட்டத்தில் சுற்றுப்புறச் சூழல் எவ்வளவு பாதிப்படைந்திருக்கிறது என்பதை அனைவரின் உள்ளத்தையும் தொடும்படியாக எடுத்துக் கூறினார்கள்.

கடந்த கால யுத்தங்களினால் நமது பிரதேசங்களில் 12 லட்சம் பனை மரங்களும், 12 லட்சம் தென்னை மரங்களும், 6 லட்சம் ஏனைய மரங்களும் அழிக்கப்பட்டுள்ளன என்று இளம்பரிதி தெரிவித்தார்.

படைமுகாம்கள் அமைப்பதற்காக மரங்கள் பெருந்தொகையில் தறிக்கப்பட்டது போக ஷெல்கள் மற்றும் வெடிகுண்டுகள் வெடித்த அதிர்வுகளாலும் வெடிபொருள்களின் நச்சுத் தன்மையினாலும் பல மரங்கள் பட்டுப் போயின.

படை அரண்களில் மண் மூடைகளை அடுக்குவதற்காக பல இடங்களிலும் மண் அள்ளப்பட்டதால் அப்பகுதிகளில் மரங்கள் வேரோடு சாய்ந்துவிட்டன.

விளை நிலங்கள் பசளைத் தன்மையை இழந்துவிட்டன. விதைத்தால் முளைகள் வந்து கருகி விடுகின்றன. அதனால், பல இடங்களில் பயிர்செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலை.

அரியாலை போன்ற பகுதிகளில் நன்னீர் உவர்நீராக மாறி வருகிறது.

மரங்கள் அதிக அளவில் இல்லாததால் மழை குறைந்து வருகிறது. வெப்பம் அதிகரித்து வருகிறது. அசுத்த காற்றை சுவாசிக்க வேண்டியிருக்கிறது.

இப்படிப் பல வழிகளில் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்பட்டுவிட்டது என்பதை இளம்பரிதி சுட்டிக்காட்டினார்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸும் மரங்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவை எடுத்துக் கூறி ஒவ்வொருவரும் மரங்களை நட்டு வளர்ப்பதில் முனைப்புடன் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மரங்களைப் பேணிப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். தமது உறுப்பினர் ஒருவர் மரம் ஒன்றை வெட்டினார் என்ற காரணத்துக்காக அவர் வீட்டுக்கு அனுப்பப்பட்டார் என்ற தகவலையும் இளம்பரிதி தெரிவித்தார்.

யுத்தம் ஓய்ந்திருக்கும் இன்றைய சூழ்நிலை சுற்றுப்புறச் சூழலை பாதுகாப்பதற்கு மிகவும் உகந்தது.

மீள்கட்டமைப்பு, புனரமைப்பு, புனர்வாழ்வு, அபிவிருத்தி போன்ற பணிகளுக்குத்தான் சர்வதேச சமூகத்தின் உதவி தேவைப்படுகிறது. சூழல் பாதுகாப்பை நாம் ஒவ்வொருவரும் நினைத்தால் மற்றவருடைய கையை எதிர்பார்க்காமல் செய்து முடித்து விடலாம். அதற்குத் திடசித்தம் வேண்டும், அவ்வளவுதான். வேறு என்ன இருந்தாலும் சூழல் சரியாக இல்லாவிட்டால் சுபீட்சம் இல்லை என்பதை மறந்து விடக்கூடாது.

# பாஷையூர் அந்தோனியார் தேர்ப்பவனி கடற்கரை வீதியால்

## படையினர் அனுமதி வழங்கினர்

கொழும்புத்துறை,ஜூன்10

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா தேர்ப் பவனியை யாழ்.கடற்கரை வீதி வழியாக நடத்துவதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

மேற்படி அந்தோனியார் ஆலயத் திருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.கடற்கரை வீதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியாக இருப்பதனால் கடந்த பல வருடங்களாக இவ்வீதியூடாக அந்தோனியாரின் தேர்ப் பவனியை நடத்துவதற்குப் படைத் தரப்பு அனுமதி மறுத்து வந்தது.

எனினும், இம்முறை இவ்வீதியூடாக தேர்ப்பவனியை நடத்துவதற்கு அனுமதிக்குமாறு ஆலய பங்குத் தநதையும், ஆலய நிர்வாகமும் படைத் தரப்பிடம் கோரிக்கையை விடுத்ததை அடுத்து இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஆலயப் பங்குத் தந்தை அருட்திரு.எம்.யேசுரட்ணம் அடிகள் தெரிவித்தார்.

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத் தேர்ப்பவனி எதிர்வரும் 13ஆம் திகதி மாலை 5மணிக்கு ஆரம்பமாகி பாஷையூர் கடற்கரை வீதி, கொய்யாத்தோட்டம் புது வீதி, பழைய பூங்கா வீதி, ஈச்சமோட்டை வீதி, சென்.அன்ரனிஸ் வீதி வழியாக ஆலயத்தை வந்தடையும்.

இதேவேளை -

நற்கருணைத் திருவிழா 12ஆம் திகதி மாலை 5.30 மணிக்கும், 13ஆம திகதி திருவிழாத் திருப்பலி காலை 7மணிக்கும் இடம்பெறும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-8-30)

# நாட்டு நடப்பு

## குமரனும் கிழடனும்

அப்பியாசக் கொப்பி கொண்டு
அன்று பள்ளிக்கூடம் சென்றவன்;
கொப்பி கொண்டு பொல்லு மூண்டி
குளிகை வாங்கப் போகிறான்
அப்பியாசக் கொப்பி கொண்டு
அநேக கிழடு அவனோடு
கொப்பி காட்டி குளிகைவாங்க
காத்திருக்கு வாங்கினில்
கொப்பி வாங்கி அடுக்கி வைத்து
குளிகை எண்ணிக் கொடுக்கிறார்
கொப்பியில்லா கிழடுகளை
கொதித்து விரட்டிக் கலைக்கின்றார்
கொப்பிகொண்டு பள்ளி செல்லும்
குழந்தைகளே! கேளுமின்
கொப்பியோடு பொல்லூண்டும் நாள்
கொஞ்ச ஆண்டில் வந்திடும்.

- விகடகவி.

## குடாநாட்டுப் பொலீஸ் நிலையங்களில்

# பொதுமக்கள் விரும்பிய மொழியில் முறைப்பாடு செய்ய நடவடிக்கை!

## பொலீஸ்மா அதிபர் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்10

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகியவற்றில் முறைப்பாட்டுக்காரர் விரும்பிய மொழியில் முறைப்பாட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு சகல பொலீஸ் நிலையங்களுக்கும் பொலீஸ்மா அதிபர் ரி.ஆனந்தராஜா சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

குடாநாட்டில் அநேக பொலீஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை பொலீஸார் சிங்கள மொழியிலேயே பதிவு செய்து வருகின்றனர். சிங்கள மொழியில் எழுதப்பட்ட முறைப்பாட்டு விண்ணப்பங்களிலேயே முறைப்பாட்டுக்காரர்களிடம் கையொப்பமும் பெறப்படுகிறது.

இதனால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் தொடர்பாக தமிழ் நாடாளுமன்ற தமிழ் உறுப்பினர்கள் கல்வி சார் பிரதிநிதிகள் நீதிவான்கள் உட்பட பலரும் சுட்டிக்காட்டியிருந்தனர். இந்நிலையிலேயே பொலீஸ்மா அதிபர் இச்சுற்றறிக்கையை அனுப்பியுள்ளார்.

இதன்படி தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகியவற்றில் விரும்பிய மொழியில் உள்ள விண்ணப்பப்படிவத்தை முறைப்பாட்டுக்காரர் பெற்று அதனை பூர்த்தி செய்து பொலீஸாரிடம் ஒப்படைக்கலாம். அதனைப் பொலீஸார் முறைப்பாட்டுப் புத்தகத்தில் ஒட்டிவிட வேண்டும். இந்த முறை உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் சுற்றுநிருபத்தில் பொலீஸ்மா அதிபர் வலியுறுத்தியுள்ளார். (ஒ-9-180)

# மாம்பழம் சந்திப் பகுதியில் இளைஞர் குழு அட்டகாசம்!

வலி.வடக்கு,ஜூன்10

அரியாலை, மாம்பழம் சந்திப் பகுதியில் இளைஞர் குழு ஒன்று அட்டகாசம் புரிந்துவருவதாக அப்பகுதி பொதுமக்கள் கூறுகின்றனர்.

வீதியில் செல்லும் பாடசாலை மாணவிகள் உட்பட பெண்கள இந்த இளைஞர் குழுவால் அவமானத்தையும் துன்பங்களையும் எதிர்கொள்ள நேரிடுவதாகவும் கூறப்படுகின்றது.

பாடசாலைக்கு மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்லும் மாணவிகளை பின் தொடரும் இந்த இளைஞர்கள் தம்மைத் திருமணம் செய்ய வேண்டும் அல்லது கடத்திச் செல்வதாகப் பயமுறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பெண்கள் இருக்கும் வீடுகளுக்கும் இக்கும்பல் சென்று அச்சுறுத்தி வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேபோன்ற குழுக்கள் மல்லாகம், சுன்னாகம் ஆகிய பகுதிகளிலும் அட்டகாசம் புரிந்து வருவதாகத் தெரியவருகின்றது. (ஒ-86-30)

# உரும்பிராயில் பாதீனியம்

உரும்பிராய் மேற்கு மூன்று கோயிலடிப் பகுதியில் பரவலாக பாதீனியம் செடி வளர்நதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏக்கர் கணக்கில் விவசாய நிலங்களைக் கொண்ட இந்தப் பகுதியில் பாதீனியம் செடிகள் பெருகியிருப்பது விவசாய நடவடிக்கைகளை வெகுவாகப் பாதித்து விடும் அபாயம் தோன்றியிருப்பதாக விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.

பாதீனியச் செடிகளை அழிக்கும் பணி வருடம் தோறும் இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும -

எனினும், பாதீனிய ஒழிப்பு நடவடிக்கைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமையே மீண்டும் பாதீனிய அபாயம் ஏற்படக் காரணம் என்றும் -

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இது குறித்து விரைவில் நடவடிக்கை எடுத்து, தமக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றுத் தரவேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-49)

# சங்கானை நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளோர் போராட முஸ்தீபு!

வலி.வடக்கு,ஜூன்10

சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தேவாலய வீதியில் அமைந்துள்ள அமைதிமுகாம் நலன்புரி நிலையத்தில் வசிக்கும் மக்கள் பிரதேச செயலகத்தின் முன்னால் மறியற் போராட்டத்தில் ஈடுபடுவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

வலி.வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் இந்த நலன்புரி நிலையத்தில் வாழ்கின்றனர். 38 குடும்பங்கள் தற்பொழுது இந்த முகாமில் வசித்து வருகின்றன. இவற்றில் சுமார் 15இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெண்களைக் குடும்பத் தலைமையாகக் கொண்டவை ஆகும்.

இம்முகாமில் உள்ள ஏழு மலசலகூடங்களில் ஐந்து மலசலகூடங்கள் சேதமுற்று எட்டு மாதங்களாகிய போதிலும் இன்று வரை திருத்தப்படவில்லை என்றும் - மழைபெய்யும் காலங்களில் இங்கு மக்கள் குடியிருக்க முடியாது ஓடுவதுடன் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது என்றும் - நலன்புரி நிலையவாசிகள் கூறுகின்றனர்.

இவற்றைத்திருத்தித் தரும்படி கிராம அலுவலர், பிரதேச செயலாளர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை பல தடவைகள் கோரிய போதிலும் இது வரை எந்த வகையான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. (ஒ-86)

## நாளை

வைகாசி 28
புதன்கிழமை
11.06.2003
திதி : துவாதசி
நள்ளிரவு 12.16 வரை
நட்சத்திரம் : சுவாதி
பின்னிரவு 12.34 வரை
சுபநேரம் : 4.22-5.52
ராகுகாலம் : 11.52-1.22
(பழைய நேரப்படி)

## உதய வாக்கு

வழக்குத் தொடுப்பது என்பது பூனைக்காக பசுவை இழப்பது போலாகும்.

# பிரான்பற்றில் 14 குடும்பங்களுக்கு பொதுசன ஓய்வுக் கொடுப்பனவு

பண்டத்தரிப்பு - பிரான்பற்று கிராம அபிவிருத்தி ஒன்றியம், வறிய குடும்பங்களைச் சேர்ந்த 14 பேருக்கு பொதுஜன மாதாந்த ஓய்வுக்கொடுப்பனவை வழங்கி வருகிறது.

மாதாந்தம் தெரிவுசெய்யப்படும் மிகவும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 14 பேருக்கு ரூ.200 வீதம் இந்த உதவி வழங்கப்பட்டு வருவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நிதியை லண்டனில் இயங்கும் பிரான்பற்று கிராம அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் நடராஜா விஜேந்திரன் வழங்கியுள்ளார் என்று - கூறப்பட்டது.

மேற்படி கொடுப்பனவு மூன்று பேர் கொண்ட குழுவின் பரிந்துரையுடன் வழங்கப்படுகிறது. (எ-185)

# சண்டிலிப்பாய் ஆலயத்தில் விக்கிரகங்கள் திருட்டு!

## ஏழு மாதத்தில் இரண்டாவது சம்பவம்

சண்டிலிப்பாய்,ஜூன்10

சண்டிலிப்பாய் ஐயனார் ஆலயத்தில் இரவுவேளையில் முன்பக்க கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த மூன்று விக்கிரகங்களை திருடிச் சென்றுள்ளனர்.

ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த வெங்கலத்தில் செய்யப்பட்ட சந்தான கோபாலர் விக்கிரகம், சண்டேஸ்வரர் விக்கிரகம், புஷ்பகலா அம்மன் விக்கிரகம் ஆகியனவே இவ்வாறு திருட்டுப் போயுள்ளன.

கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்ற இத் திருட்டுச் சம்பவம் பற்றி மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் ஆலய பரிபாலன சபையினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனை அடுத்து பொலீஸார் ஆலயத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

இந்த ஆலயத்தில் கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் குதிரை வாகனம் ஒன்று இரவு வேளையில் திருடப்பட்டிருந்ததும் - பின்னர் திருடர்கள் ஒரு வாரத்தின் பின்னர் அதனை ஆலயத்திற்கு தெற்குப் புறத்திலுள்ள வயல் வெளி காணியில் கொண்டு வந்து வைத்து விட்டு சென்றதும் - குறிப்பிடத்தக்கவை. (எ-135)

# கண்ணீரில் நினைவலைகள்

7ஆம் ஆண்டு நினைவு | 31ஆம் நாள் நினைவு





**பத்மநாதன் நர்ஜினி** | **தம்பிராசா பத்மநாதன்**

26-01-1977 → தோற்றம் ← 26-04-1945

27-06-1996 → மறைவு ← 11-05-2003

நெஞ்சில் மூண்டதோர் சோகம் முனைப்புற வளர்ந்து பொங்க ஆறாத்துயரில் நாமிருக்க அப்பாவும் சேர்ந்து கொண்டார் உன்னுடனே நாம் தவிக்க. இறைஞ்சுகின்றோம் இறைவனிடம் உங்கள் ஆத்ம சேமத்திற்காய்.

இன்று (10.06.2003) செவ்வாய்க்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியம் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மதிய போசனம் ஆகியவற்றில் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*குருசுமதவடி லேன்,*
*வண்.வடமேற்கு,*
*ஆனைக்கோட்டை* (18872)

# கலந்துரையாடல்

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வலிகாமம் வலயப் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சுற்றாடல் அபிவிருத்தி பற்றிய அதிபர்களுடனான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (எ-152)

# சூழல் தின விழிப்புணர்வு நிகழ்வு

வட்டுக்கோட்டை,ஜூன்10

உலக சூழல் தினத்தை முன்னிட்டு வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் விழிப்புணர்வு நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விசேட கருத்துரைகளை பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. கணேஸ்வரராஜா ஆகியோர் நிகழ்த்துவர். (எ-160)

# நிறுத்தல் அளவைகள் முத்திரையிடல்

சாவகச்சேரி பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்திலுள்ள பல நோ.கூ. சங்கங்கள், சந்தை வியாபாரிகள், வியாபார நிறுவனங்கள் என்பவற்றில் உள்ள அளவைகள் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடப்படவுள்ளன.

இன்றும் எதிர்வரும் 12ஆம், 13ஆம், 16ஆம்,19ஆம் திகதிகளிலும் காலை 9.00 மணி முதல் 1.30மணிவரை சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாமம் உப அலுவலகத்திலும் எதிர்வரும் 19ஆம், 20ஆம், 23ஆம, 24ஆம் திகதிகளில் காலை 9மணி முதல் 1.30 மணிவரை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்திலும் வைத்து முத்திரையிடப்படும் என பிரதேச சபை செயலாளர் ந.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார். (எ-74)

# ஆத்மஜோதியின் ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம்,ஜூன்10

ஆத்மஜோதி முத்தையாவின் 86 ஆவது ஜெயந்தி விழாவும், அறநெறிப் பாடசாலை ஆண்டு நிறைவு விழாவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 7மணி முதல் ஏழாலையில் உள்ள ஆத்மஜோதியான மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளன.

திருவாசக முற்றோதல், அபிஷேக ஆராதனை, ஆத்மீக உரை என்பன இடம்பெற்று தொடர்ந்து பாராட்டு வழங்கல் நிகழ்வு இடம்பெறும். இந்து சமய விவகார அமைச்சின் யாழ். பிராந்திய உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் சிறப்புரை நிகழ்த்துவார். (எ)

# நாடகப் போட்டிகள்

தென்மராட்சி,ஜூன்10

தென்மராட்சிப் பிரதேச மகளிர் அபிவிருத்தி சங்கங்களுக்கிடையிலான நாடகப் போட்டிகள் எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளன.

பெண்களின் உரிமைகள் தொடர்பான இந்த நாடகப் போட்டியினை யாழ்.சமூக மேம்பாட்டு நிறுவனத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

பிரதேச போட்டிகளில் வெற்றி பெறும் மூன்று நாடகங்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

# ஜி.சீ.ஈ.சாதாரண பரீட்சைக்கு விண்ணப்பம்

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன. பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் சகல பாடசாலைகளுக்கும் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-152)

## பேராசிரியர் அழகையா துரைராஜா

அவர்களின்

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம்

*இடம்:* உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
*காலம்:* 11.06.2003 புதன்கிழமை மு.ப. 9.30 மணி
*நினைவுப் பேருரை வழங்குபவர்:* பேராசிரியர் சு.மோகனதாஸ் (துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

பேராசிரியரின் அன்பர்கள், அபிமானிகள் அனைவரும் மேற்படி நிகழ்விற்குச் சமுகம் தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டப்படுகிறீர்கள்.

பழைய மாணவர்கள் சங்கம்,
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

(18938)


## இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ். வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வு காணலாம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!

**மணிசாமி,**

*யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி (பழைய லிங்கம் கூல்பார் அருகில்).*
*இல. 54, மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).*
பார்வையிடும் நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை. (18922)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 18 - 07 - 1949



உதிர்வு 11 - 05 - 2003

## திருமதி அ.அமலஉற்பவம்

(தவம்)

*அன்பின் பிறப்பிடமாய்*
*பாசத்தின் உறைவிடமாய்*
*தியாகத்தின் செம்மலாய்*
*குணத்தின் குல விளக்காய்*
*எம்முடன் வாழ்ந்திட்ட அன்னையவள்*
*அன்பு முகம் காணாது ஆவலுடன்*
*திக்கெட்டும் தேடுகிறோம்*
*எம் உயிர் உள்ளவரை*
*என்றும் உள்ளத்தில் நிறைத்திருப்பாய் "அம்மா".*

உங்கள் அன்பை மீண்டும் காணத்துடிக்கும:
பெறாமகன்: ரஞ்சன் (பாலு)
குடும்பத்தினர்.

(18925)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 - 02 - 1930



மறைவு 22 - 05 - 2002

## அமரர் சிவகுரு செல்லத்துரை

(ஓய்வுபெற்ற ஆசிரியர், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி)

திதி: பூர்வபக்க ஏகாதசி

வடிந்த கண்ணீர் காயவில்லையே
வருடம் ஒன்று போன போதும்
உங்கள் இழப்பின் வேதனையை
தாங்கும் சக்தி எம்மிடம் தான்
இல்லை அப்பா!
வாழ்வே சொர்க்கமாகத் தோன்றியது
உங்கள் அருகில் வாழ்ந்தபோது - இன்று
வாழ்வை நரகமாக உணர வைக்கிறதே
உங்கள் இழப்பு தந்த காயங்கள்
ஆண்டு தான் போகிறது
போகவில்லையப்பா உங்கள் நினைவுகள்!

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மாகியம்பிட்டி சந்தி,
சண்டிலிப்பாய். (18900)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 - 06 - 1971



மறைவு 10 - 06 - 1998

அமரர்

## சானைக்குட்டி யோகபாலசிங்கம் (யோகன்)

திதி: பூரணை

வானம் விடியு மென்று
வையகத்தைப் பார்த்து நிற்க
வையகமே இருளுண்டு போனது போல்
எம் வாழ்வின் ஒளி மறைந்தத்யா!
தாய் சென்று மூன்றாண்டு தனில்
மகனே நீ எங்கு போனாய்
உன்னுறவுகள் கலங்கி யழ
இவ்வுலகு விட்டு எங்கு போனாய்?
ஆண்டு ஐந்து மறைந்தாலும்
உன் நினைவு மட்டும்
மறையவே மறையாது.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நிரந்தர முகவரி:
கீரிமலை வீதி,
கொல்லங்கலட்டி.
தற்காலிக முகவரி:
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, சகோதரர்கள்,
மைத்துனர்கள், மருமக்கள்,
பெறாமக்கள் மற்றும்
தம்பி ஈசன், உறவினர்கள், நண்பர்கள்.

(18905)


# MEDECINS SANS FRONTIERES (FRANCE)

## மெடிசின்ஸ் சான்ஸ் (F)புரன்றியஸ் (பிரான்ஸ்)

## அழைப்பு

அன்புடையீர்!

எமது நிறுவனத்தின் பிரியாவிடை விழா எதிர்வரும் (29.06.2003) ஞாயிறு காலை 10.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெறவுள்ளது. தெமட்டக்கொட, பேஸ்லைன் வீதி, மவுண்ட்மேரி வரவேற்பு மண்டபத்தில் (ரயில்வே விளையாட்டு மைதானத்துக்கு முன்னால்) நடைபெறவுள்ள இந்த விழாவுக்கு எம்.எஸ்.எவ். (பிரான்ஸ்) இலங்கை நிறுவனத்தில் சேவையாற்றிய அனைத்து ஊழியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

☞ விழாவில் கலந்துகொள்வோர் எதிர்வரும் ஜூன் 15ஆம் திகதிக்கு முன் கொழும்பு தலைமைக் காரியாலயத்துடன் தொலைபேசியூடாகத் தொடர்புகொள்ளவும்.

T.P. இல.: 01 691052, 01 693350, 01 679769.

✪ அன்றைய தினம் ஊழியர்களுக்கு சேவைச் சான்றிதழ் வழங்கப்படும்.

7, KYNSEY TERRACE,
COLOMBO - 08. (சி-28297)

- நிறுவனத்தினர்.
M.S.F.

# குறுகிய நோக்குடன் செயற்படுவது நீடித்த சமாதானத்துக்கு உதவாது!

## சமாதானத்துக்கான ஊடக அமைப்பு அறிக்கை

கொழும்பு,ஜூன்10

குறுகிய அரசியல் கோட்பாடுகளையும், இனரீதியாக தீர்மானங்கள் எடுப்பதையும் கைவிட்டு நிரந்தர சமாதானத்தை அடைவதற்காக நீண்டகால நோக்கில் செயற்பட அனைவரும் முன்வரவேண்டும்.

- கொழும்பைத் தளமாகக் கொண்டு செயற்படும் சமாதானத்துக்கான ஊடகவியலாளர் அமைப்பு இவ்வாறு தெரிவித்திருக்கிறது.

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பான விவகாரத்தால் சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டிருப்பது பற்றி அந்த அமைப்பு பத்திரிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு, மனிதாபிமானப் பணிகளை முன்னெடுக்க உயர்சபை ஒன்றை அரசு உருவாக்கியிருக்கிறது. அதில் அரசாங்க அதிகாரிகள் அங்கம் வகிப்பதும் விடுதலைப் புலிகளுக்கு எவ்வித பங்கும் இல்லாதிருப்பதும் தெளிவாகி உள்ளது.

போதிய அதிகாரமும், பங்களிப்பும் உள்ள ஓர் இடைக்கால கட்டமைப்பை விடுதலைப் புலிகள் கேட்டிருந்தபோதிலும் அரசின் உயர் சபையில் அவர்களுக்குப் பங்களிப்பின்றி இருப்பது நகைப்புக்குரியது.

வடக்கு - கிழக்கு மக்கள் மீண்டும் அரசின் அழுத்தங்களும் தொல்லைகளும் இன்றி வாழ்வதற்கான வழிகள அதில் இல்லாததால் அந்த உயர்சபை அமைப்பை அவர்கள் நிராகரித்ததில் ஒன்றும் வியப்பு இல்லை.

குறுகிய நோக்கத்துடன் இனரீதியான அரசியல் தீர்மானங்கள் எடுப்பதை மறந்து, நீடித்த சமாதானத்துக்காக உழைப்பது அவசியமாகும்.

- இவ்வாறு சமாதானத்துக்கான ஊடகவியலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

(ஐ)



தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் ஆறு பெண்களுக்குத் தையல் இயந்திரங்களை அன்பளிப்பாக வழங்கியது. தையல் இயந்திரங்களைப் பெற்றுக்கொண்ட பெண்களை தையல் இயந்திரங்களுடன் காணலாம்.

*(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

# துன்பத்தின் மத்தியில் வாழ்வை நகர்த்தும் நெடுந்தீவு மக்களின் ஏக்கம் அகலுமா?

இயற்கையின் எழில் கொஞ்சும் நெடுந்தீவு, வரலாற்றுப் பாரம் பரியம் மிக்கது. ஆனால், இன்று அது பல வழிகளிலும பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

நெடுந்தீவு மக்கள் பல ஆண்டுகளாகவே பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளாகி வருகின்றனர். சில சந்தர்ப்பத்தில் எவ்வித நிவாரணமும், நிதி உதவியும் இன்றி சிரமங்களின் மத்தியில் அவர்கள் வாழ்ந்த சந்தர்ப்பங்களும் உண்டு.

நெடுந்தீவு, யாழ்.குடாவிலிருந்து கடல் கடந்து இருப்பதாலும், மக்கள் தொகை குறிப்பிடத்தக்களவில் மட்டுமே இருப்பதாலும் அரசாங்கத்தினாலும், அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் வழங்கப்படும் உதவிகள் மட்டுப்படுத்தப்பட்டனவாகவே உள்ளன.

இந்த மக்கள் அடிப்படை வசதிகளைக் கூட பெரும் சிரமங்களின் மத்தியிலேயே பெற நேரிடுகின்றது.

கட்டடவசதி என்னவோ அளவுக்கதிகமாகக் கொண்ட வைத்தியசாலை ஒன்று காணப்படுகின்ற போதிலும்

**செய்திக் கட்டுரை**
**செந்தூர்ராஜ்**

மருந்து வகைகள், மருத்துவ உபகரணங்கள் மட்டுமின்றி வைத்தியர்களும பற்றாக்குறையாகவே உள்ளனர். தற்போது அங்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் 'திலீபன் ஞாபகார்த்த மருத்துவமனை' இயங்கிவருவது தமக்குப் பெரும் உதவியாக இருப்பதாக அங்குள்ள மக்கள் கூறுகின்றனர்.

இங்கு மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகமும் குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டுமே விநியோகிக்கப்படுகின்றது. தொடர்ச்சியாக குடிதண்ணீர் கிடைக்கக் கூடிய வசதி இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை. காலையில் இரண்டு மணித்தியாலங்களும் மாலையில் குறிப்பிட்ட நேரத்திற்குள்ளும் குடிதண்ணீர் பெறத் தவறினால் மக்கள் குடிதண்ணீர் பெறுவதற்குப் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதனால் எந்தவொரு நிகழ்வாக இருந்தாலும்கூட பிரதான கடமைகளை விடுத்து தண்ணீர்பெறும் நேரத்தைப் பயன்படுத்தியே ஆகவேண்டும்.

இந்த நீர் விநியோகம் கூட குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது. நெடுந்தீவு தெற்கிற்கும் கிழக்கில் பல இடங்களுக்கும் இன்னமும் மின் விநியோகமோ அல்லது தண்ணீர் விநியோகமோ சீராக இல்லை. வீதி விளக்குகள் இன்மையால் மக்கள் இரவில் நடமாட அஞ்சவேண்டியுள்ளது.

நெடுந்தீவுப் பிரதேசத்தின் பெரும் பகுதி இருளில் மூழ்கிக் கிடப்பதால் அவசரதேவைகளுக்குக்கூட இரவில் மக்கள் வெளியே செல்ல முடியவில்லை.

இங்கு கல்விகற்கும் மாணவர்கள் அடிப்படையில் பல வசதியீனங்களை எதிர்கொள்கின்றனர். கடந்த ஆண்டு இடம்பெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் 5ஏ தரச்சித்தியைப் பெற்ற ஒரு மாணவன் உயர்தரத்தில் கணிதப் பிரிவில் கற்க விரும்பினால் நெடுந்தீவில் அதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில், நெடுந்தீவுப் பாடசாலைகள் எதிலும் கணிதப்பிரிவு இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. அம் மாணவன யாழ்ப்பாணம் வந்து உயர் தரத்தில் கணிதப்பிரிவில கல்வி கற்பதற்கு அவனது குடும்பத்தின் வருமானம் போதியளவு இல்லாவிட்டால் அவனது எண்ணம் நிராசை ஆகிவிடும்.

இதேவேளை, நெடுந்தீவில் உள்ள அரசதிணைக்களங்கள், பாடசாலைகளில் புதிதாக நியமனம் செய்யப்படும் அலுவலர்கள், ஆசிரியர்கள் சிலர் சிறிது காலத்தில் எப்படியோ மாற்றம் பெற்று அங்கிருந்து வெளியேறி விடுகின்றனர்.

அண்மையில்கூட யாழ்.கல்வியியல் கல்லூரியிலிருந்து பயிற்சி பெற்று வெளியேறிய சில ஆசிரியர்கள் இப்பகுதிப் பாடசாலைகளில் கடமைக்கு அமர்த்தப்பட்டார்கள். அவர்களில் இன்று பலர் ஏதேனும் ஒரு காரணத்தைக் காட்டி இடமாறிச் சென்றுவிட்டனர்.

இந்தப் போக்கு தடுக்கப்படாவிட்டால் நெடுந்தீவு மாணவர்களின் கல்வி பெரும் பாதிப்பினை அடையும்.

இங்கு பிரதான வீதிகள்கூட சரியான முறையில் திருத்தப்படாத நிலையிலேயே உள்ளன.

இங்குள்ள ஒரேயொரு பஸ்ஸும் நீண்டகாலமாகப் பயன்படுத்தப் படாதுள்ளது. குடிதண்ணீர் விநியோகத்துக்கு பயன்படுத்தப்படும் நீர்த்தாங்கி சீரான பராமரிப்பின்றி உள்ளது. இதனால் இங்கு விநியோகிக்கப்படும் குடிதண்ணீர் மாசுபடும் நிலை உருவாகியுள்ளது.

உதவி அரசாங்க அதிபரினால் சகல நடவடிக்கைகளையும் தனித்துப் பேணப்படும் இத்தீவில், சுகமான வாழ்வை மக்கள் அனுபவிக்கக் கூடியதான ஒரு சூழல் எப்போது ஏற்படுமென இப்பகுதி மக்கள் ஏங்குகிறார்கள். அவர்களது ஏக்கம் அகல நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா? ◆

# செஞ்சிலுவை யாழ். அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டோர் பெயர்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்10

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ்.அலுவலகத்துடன் ,பின்வருவோர் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

அவர்களது பெயர் விவரம் வருமாறு:-

தேவதாசன் வனஜா, 25 எழிலூர், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,

சாந்தி தங்கராஜா, 63, புதிய வீடமைப்புத் திட்டம், குருநகர், யாழ்ப்பாணம்

மரியதம்பி, பரிசுத்த சிலுவை சுகாதார நிலையம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

சவரிமுத்து மரியகிலேஸ்வரி, 21, நாவலர் வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

சின்னப்பு சின்னத்தம்பி, கொட்டபுலம், காரைநகர் கிழக்கு, காரைநகர்.

நாகராஜா நாகலஷ்மி, முதலாம் வட்டாரம், அல்லைப்பிட்டி.

(ஒ)

## இராணுவம் தங்கியிருந்த

# சனசமூக நிலையக் கட்டடம் நிர்வாகத்திடம் கையளிப்பு

வலி.வடக்கு,ஜூன்10

புத்தூர் தமிழ் ஆலய சனசமூக நிலையக் கட்டடம், கந்தையா கலையரங்கக் கட்டடம் என்பவற்றில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் இக் கட்டடங்களை நாளை புதன்கிழமை காலை நிர்வாகத்திடம் கையளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சனசமூக நிலைய நிர்வாகத்தினர் நீண்டகாலமாக மேற்கொண்ட முயற்சியையடுத்தே இப்பகுதியின் ஒரு பகுதியில் இருந்து வெளியேற இராணுவம் நடவடிக்கையெடுத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, இக்கட்டடங்களுடன் இணைந்துள்ள கலாசார மண்டபத்தில் இராணுவம் தொடர்ந்து நிலைகொண்டுள்ளது. இதனால் சனசமூக நிலையம் மற்றும் முன்பள்ளி என்பனவற்றை இயக்குவதில் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் உள்ள எட்டு வீடுகளில் இராணுவம் நிலை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஓ-86)

# எமது நிதி எமக்கே செலவிடப்பட புலிகள் கையில் நிர்வாகம் தேவை!

## ஊர்திச் சேவைச் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன்10

எமக்கென வழங்கப்படும் நிதி எமக்கே செலவிடப்பட வேண்டும். இதற்கு புலிகளின் கையில் முழு அதிகார அலகு வேண்டும்.

-இவ்வாறு வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அச்சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவை தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவைப் பெற்றதுடன் சமாதானம் பற்றிய எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியிருந்தன.

ஆனால், இலங்கை அரசு உதவும் நாடுகளிடம் பெரும் நிதியைப் பெற்றுக் கொள்ள மட்டுமே புலிகளைப் பயன்படுத்த முயற்சிப்பது அம்பலமாகிவிட்டது.

எமது மக்களின் அபிவிருத்திக்கென வழங்கப்படும் நிதி புலிகளின் முழுமையான நேரடிக் கண்காணிப்பில் இங்கு செலவிடப்பட வேண்டும். இதற்கு புலிகளின் கையில் முழுமையான அதிகார அலகு வேண்டுமென்பது யதார்த்தமே.

தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கை இன்றுவரை ஏற்படாது அவல வாழ்க்கையே தொடர்கின்றது. இவற்றையெல்லாம் சீர்செய்ய வேண்டுமானால் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு புலிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டியது அவசியம். சமாதானப் பேச்சுக்கள தொடர இதுவே வழி - என்றுள்ளது.

# கோண்டாவில் பொது நூலகத்தின் கட்டுமானப்பணி முடிவது எப்போது?

கோண்டாவிலில் உள்ள பொது நூலகக் கட்டடத்தின் கட்டுமானப்பணி இழுத்தடிக்கப்படுவது அப்பகுதி மக்களுக்கு கவலையளிக்கிறது. இரண்டு



வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பணி இதுவரை முழுமை பெறவில்லை.

1999ஆம் ஆண்டு பிற்பகுதியில் நல்லூர் பிரதேச சபையினால் அமைக்கப்பட்டதுதான் கோண்டாவில் பொது நூலகம். இந்தப் பொது நூலகத்தை தற்போது அமைந்திருக்கும் இடத்தில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் - கோண்டாவில் சந்திக்கு அருகில் - இடம்மாற்றுவதற்கு அதிகாரிகள் மட்டத்தில் முயற்சி செய்யப்பட்டதாக அப்போது பேசப்பட்டது.

அப்பகுதிப் பொது மக்களின் நெருக்குதலால் அத்திட்டம் கைவிடப்பட்டதாகவும் கூறப்பட்டது. பின்னர் நூலக கட்டடம் கோண்டாவில் வடக்குப் பகுதியில் நிறுவப்பட்டது.

அதன் பிற்பாடு இடவசதியின்மையால் ஸ்ரீ. வாகீஸ்வரி சனசமூக நிலையத்தால் நூலகப் பாவனைக்கென வழங்கப்பட்ட கட்டடத்தில் நூலகம் இயங்க ஆரம்பித்தது.

இந்நிலையில், நூலகம் இயங்கிக் கொண்டிருந்த கட்டடத்தின் மேல் நூலகத்தின் மேலதிக பாவனைக்கென கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்காக அப்போதிருந்த புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் 15லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. இதனால் கட்டட வேலைக்காக தரைத்தளக் கட்டடத்தின் கூரை பிரிக்கப்பட்டது. இதன் காரணத்தால் நூலகமானது இக்கட்டடத்திற்குப் பின்னால் உள்ள சிறிய கட்டடத்தில் செயற்படத் தொடங்கியது. அன்றிலிருந்து கட்டடப்பணி தொடர்ந்து இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மேற்படி நிதியைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணியும் தரமற்றதாக உள்ளதாக பொது மக்கள் தரப்பில் இருந்து முறைப்பாடுகள் எழுகின்றன.

**செய்திக் கட்டுரை**
**இணுவில் செய்தியாளர்**

இதுவரை செய்து முடிக்கப்பட்ட வேலையில், கீழ்க்கட்டடத்தையாவது சீரமைத்து பாவனைக்குப் பயன்படுத்தலாம் என்பதே அப்பகுதி மக்களின் கருத்தாகும். நல்லூர் பிரதேச சபை இனியாவது மக்கள் கருத்துக்கு செவிசாய்க்குமா?

★



நியாப் திட்டத்தின் கீழ் காரைநகர் சாம்பலோடையில் அமைக்கப்பட்டு வரும் உவர்நீர் தடுப்பணையை பார்வையிடுவதற்காக சமீபத்தில் காரைநகருக்கு வந்திருந்த உலக வங்கிப் பிரதிநிதிகள் அத்திட்டம் தொடர்பாக பொதுமக்களுடன் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம். .(ஓ-73)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அளவெட்டியில் (சென்ஜோசப் தேவாலயத்திற்கு அருகில்) பிரதான பஸ் பாதையில் இரண்டு வீதி முகப்புகளுடன் ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மிகக் கூடியவிலை கொடுக்கப்படும். மேலதிக விவரங்களுக்கு மேற்படி தேவாலய பங்குத் தந்தையோடு அல்லது இல.108, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் 12ஆம், 13ஆம் திகதிக்கு முன்பதாக தொடர்புகொள்ளவும். T.P. 074-20 2937. (சி-28336)

பாவித்த நல்ல நிலையிலுள்ள வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 71, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (18915)

## கார் விற்பனைக்கு

கொழும்பிலிருந்து அண்மையில் கொண்டுவரப்பட்ட, குளிரூட்டப்பட்ட, 12 ஸ்ரீ6648 தொடர் இலக்கமுடைய Dat-Sun Sunny கார் சகல ஆவணங்களுடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ந.சூரியகுமார், சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். பார்வை நேரம் 2.30இற்குப் பின். (18924)

## தவறிவிட்டது

626,நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறையைச் சேர்ந்த செல்வராசா சுசீலா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 848381110V), விசேட அடையாள அட்டை (இல.0901007003) என்பன கச்சேரி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். (18942)

உதயகுமார் பேபி என்பவரது விசேட அ.அ. (0901030460), காப்பு, சங்கிலி என்பவற்றுடன் பேர்ஸ் ஒன்று யாழ். மத்திய கல்லூரிக்கு அருகில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் ரஞ்சன் சீதா, 215/9, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (18928)

அச்சுவேலி கல்லூரி வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் காண்டீபன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.790663055V) ஒமந்தைக்கும் புளியங்குளத்துக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (18913)

## வாடகைக்குத் தேவை

யாழ். நகருக்குள் இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திற்கு Lecture hall (10'x20') ஒன்றும் அலுவலக பாவனைக்கு இரண்டு அறைகள் (10'x15') உள்ளடங்கியதாக வீடு கட்டத் தொகுதிகளும் தேவை. தொடர்பு: T.P: 021 2223642 (8 a.m. - 4 p.m.) (18923)

## கல்வி

Computer Typing (Keyboard, Speed, Letters, Statements, Ms Word, Print out உட்பட) 40 மணித்தியால ஒருமாத பயிற்சி. தொடர்பு: 37(149), சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (18939)

## மருதங்கேணியில் 31குடும்பங்களுக்கு காணி 'பெமிட்'

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள போக்கறுப்பு கிராம அலுவலர் பிரிவில் அரச காணிகளில் குடியிருந்த 31பேருக்கு பெமிட் வழங்கப்பட்டுள்ளது. ஜி.ரி.இசற் நிறுவனத்தினால வழங்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்தில மேற்படி 31 பேருக்கும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தவப்பேறு 01 - 08 - 1937



சிவப்பேறு 12 - 05 - 2003

### அமரர் ஐயாத்துரை ஸ்ரீரங்கம்

-ஓய்வுபெற்ற நுணுக்குக்காட்டி ஆய்வாளர்-
(கண்ணகை அம்மன் கோவிலடி, வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டை)

**அன்பின் பிறப்பிடமாய் ஆதரவாய் வழிகாட்டி**
**பண்பின் சிகரமாய் வாழ்ந்தீர்!**

**ஆத்மா சாந்தி பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

நாளை (11-06-2003) புதன்கிழமை நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் என்பவற்றில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும் பல வழிகளில் உதவியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கண்ணகை அம்மன் கோயிலடி,
வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டை. (18952)

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமகள்.

## 11ஆவது ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 19 - 12 - 1943



மறைவு 11 - 06 - 1992

### அமரர் மாணிக்கம் தங்கவடிவேல்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்- P.W.D.)

திதி: 10-06-2003

**அன்புமொழி பேசியெம்மை அரவணைத்த தெய்வமே!**
**அவனியிலே நின்பிரிவால் ஆறுதலை யாமிழந்தோம்!**
**நல்வழியில் யாம்வாழ வேண்டுமென்ற அப்பாவே!**
**நானிலத்தே உங்களையாம் என்றென்றும் மறவோமே!**

"தங்கத்தாமரை"
அல்வாய் தெற்கு,
அல்வாய். (18944)

பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்.**

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

01. கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 2003.06.25 நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். குறிப்பிட்டவேலைகளுக்கெதிரே உள்ள வைப்புப் பணத்தினையும், படிவக்கட்டணத்தையும் செலுத்தி கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்படிவங்களை நகராட்சிமன்ற அலுவலகத்தில் 2003.06.20 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

02. கேள்விப்படிவத்தின் ஒரு பிரதியைக் கடித உறையிலிட்டு, அரக்கு முத்திரை வைத்து *'செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை'* என்ற முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத தபால் மூலமும் 2 ஆவது பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்' எனும் முகவரிக்கும் அனுப்புதல் வேண்டும். இரண்டு பிரதிகளும் 2003.06.25 மு.ப 11.00 மணிக்கிடையில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

03. கேள்விகள் 2003.06.25 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்குத் திறக்கப்படும்.

04. மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொடர் இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புக்கள் | மீளளிக்கப்படாத கேள்வி படிவக் கட்டணம் வற்வரி உட்பட |
|---|---|---|---|
| 01 | உந்துவத்தை வீதி திருத்தம் | 2500.00 | 275.00 |
| 02 | கெருடாவில் வீதி திருத்தம் | 2500.00 | 275.00 |
| 03 | வாவினிவீதி மதகு திருத்தம் 1 | 750.00 | 111.00 |
| 04 | வல்வெட்டி மல்லியோடை வீதி திருத்தம் | 2850.00 | 275.00 |
| 05 | நெற்கொழு மீனாட்சியம்மன் கோவில் வீதி திருத்தம் | 1400.00 | 150.00 |
| 06 | வாவினி மதகு திருத்தம் 11 | 1400.00 | 150.00 |

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை. 2003.06.05.

(C/28339)

ஏ.எம்.ஜோசெப்,
செயலாளர்.


## 12,500/- இலிருந்து கணனிகள் விற்பனைக்கு



**Pentium I, II ,III**

**DOT MATRICS PRINTER 7,500/=**

தரமான கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும் மலிவு விலையில் உங்கள் பட்ஜெட்க்குள் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு நிறுவனம் **SUN**

**SUN COMPUTERS**
**No. 316, Hospital Road , Jaffna.**
**Tel. 222 5208**


# மரண அறிவித்தல்கள்

## திருமதி தங்கம்மா வேலுப்பிள்ளை

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் தற்போது கிளிநொச்சி, உருத்திரபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா வேலுப்பிள்ளை அவர்கள் 05-06-2003 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் சுப்பிரமணியம் - சின்னாச்சி தம்பதிகளின் அருமை மருமகளும் விசாலாட்சி, சீவரத்தினம், அமரர் யோகம்மா, லெட்சுமி, அமரர் நடராசா, தில்லையம்பலம், சண்முகம் (சரவணை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தருமலிங்கம் (சுவாமிநாதன்), நவரத்தினம், அருளானந்தம், சுப்பிரமணியம், ஐயம்பெருமாள், விமலாதேவி, அமரர் நடேசபிள்ளை, பரமேஸ்வரி, சாரதா, குமணன் ஆகியோரின் அன்புத் தாயாரும் வள்ளியம்மை, சபாரத்தினம், விமலராணி, செல்லம்மா, தனலெட்சுமி, பாலசந்திரன், கலாரஞ்சினி, குமாரசாமி, குணரத்தினம், கலாநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவனேஸ்வரி, மலர்மதி, சசிகலா, கிருஸ்ணலீலா, மோகனா, சிபாசினி, அரிகரன்,சிவராணி, ரேணுகா, பங்கையற்செல்வி, சிவசொருபா, ரேவதி, அருள்மாறன், அருள்வாணி, கார்த்திகா, உசன், தீபா, உதயா, சேசிகா, தயாளன், கோமகள், ஜயந்தி, நிர்மலன், அமரர் காஞ்சனா,பவானி, கலைச்செல்வி, சுபாசினி, பிரியதர்சினி, பரமேஸ்வரன், மேனகா, கௌசல்யா, கார்த்திகாயினி, நளாயினி, விஸ்னு, கோபிகா, அனுசியா, உதயணன், ரஜீவன், குருபரன், பவித்திரா, மயூரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நிமலன், கீரன், மயூரன், சரிகா, ஆரணி, வருண், அஞ்சனா, மீரா, சித்தாத், துசானி, ஆதிகா, சர்வதன், சிந்துசா, காயத்திரி, கோகுலன், அபிராமி, தர்மிகா, விஸ்ணுகா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11-06-2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக கிளிநொச்சி, உருத்திரபுரம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**வே.ஐயம்பெருமாள்**
(மகன்)
பிரதேச முகாமையாளர், (வன்னி)
இலங்கை வங்கி.

10ஆம் வாய்க்கால்
உருத்திரபுரம்,
கிளிநொச்சி, (18945)

## திருமதி பாக்கியரத்தினம் சபாரத்தினம்

தொண்டமனாற்றைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியரத்தினம் சபாரத்தினம் 07.06.2003 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம் (உதவி நில அளவை அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், வசந்தாதேவி,(Colombo), செல்வேந்திரா, (Botswana), Dr.தெய்வேந்திரா(U.K), ரத்தினாதேவி (Colombo), Dr.மகேந்திரா(Canada) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குமரகுரு, சரஸ்வதி, லஷ்மி, காலஞ்சென்ற அழகேந்திரன், தங்கலதா ஆகியோரின் அன்பு மாமி யாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.06.2003) திங்கட்கிழமை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் அன்று மாலை 3.30மணியளவில் கல்கிசை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, 4.00மணிக்கு தகனக்கிரியைகள் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
Dr. தெய்வேந்திரா
39 3/4, வன்டவற் பிளேஸ்,
தெஹிவளை.
Tel: 01-738862.

(18953)

### திருமதி
## எலிசபேத் பூமணி ஆபிரகாம் சின்னத்துரை

மல்லாகம் தேவாலய வீதியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சுண்டுகுளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி எலிசபேத் பூமணி ஆபிரகாம் சின்னத்துரை 08-06-2003 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆபிரகாம் சின்னத்துரையின் அன்பு மனைவியும் விக்டோறியா, காலஞ்சென்ற மாக்கிரட் மற்றும் நவரெட்ணம் (FORUT), ஜெயரெட்ணம், சௌந்தரநாயகி, காலஞ்சென்ற தர்மரெட்ணம் மற்றும் செல்வரெட்ணம்; காலஞ்சென்ற வேஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும் மார்க்கண்டு, சின்னராஜா அமலதாஸ், பவளம்மா, வில்லியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் விக்ரர் தர்மலிங்கம், அஞ்சலினா சுசீலா, அரியமலர், பத்மநாதன், சுகிர்தமலர், வனஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் பற்றிக் தர்சன், நிலுஜா(கனடா), போல் கிருபன் தேனாள்(அமெரிக்கா), ரொக்ஸ்சன் ஆன்(கனடா), ஜெயகுமார் நியோனி (சவூதி), டலக்ஸ்ரா (மாணவன், பத்திரிசியார் கல்லூரி), கொண்சி (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), மேசி, ஜென்சி(மாணவிகள், திருக்குடும்ப கன்னியர் மடம்), சாம்சன், செபஸ்ரோன்(மாணவர், சென்ஜோசப் கல்லூரி, மருதானை), ஜேம்ஸ், ஜெனாத்தன், ஜெனி(இந்தியா), பிரதீபன், றோமியன் (மாணவர், சென் ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் லுடிசன், சுஜிகாவின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10-06-2003) செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு(பு.நே) யாழ். மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆராதனையின் பின் மல்லாகம் கத்தோலிக்க சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக கொள்ளவும்.

தகவல்:
நவரெட்ணம்,
ஜெயரெட்ணம்,
செல்வரெட்ணம்.

*48/2 பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*T.No. 222-2880.* (18956)

# தரமான காய், கனிகள் பெற வீட்டுத்தோட்டமே இலகுவழி

வெளிநாட்டுத் தொடர்புகளால் எமது வாழ்க்கை முறையில் பெரும் மாறுதல்களை நாம் எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளோம். அதேவேளை, உடல்நலக்குறைவும் போட்டி போட்டுக் கொண்டு எம்மைப் பாதிக்கின்றன.

தற்போது உடல் நலப்பாதிப்புகள அதிகரித்து வருவதற்கு பிரதான காரணம், நாம் உண்ணும் காய்,கனி வகைகளில் அதிகளவில் இரசாயனங்கள் கலந்திருப்பதே என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். வர்த்தக நோக்கத்துடன் பயிர்களுக்குக் கட்டுப்பாடின்றி இடப்படும் செயற்கை உரங்களும், கிருமிநாசினிகளுமே காய், கனிகளில் இரசாயனங்கள் சேரக் காரணமாகும். ஆகவே, தரமான காய், கனிகளைப் பெற இலகுவான வழி வீட்டுத்தோட்டமாகும்.

வீட்டுத் தோட்டச் செய்கையை மேற்கொள்ளும்போது குடும்பச் செலவு குறையும். திட்டமிட்டு வீட்டுத்தோட்டச் செய்கையை மேற்கொண்டால் நாளாந்த தேவைக்கு காய், கனிகள் கிடைப்பதுடன், வீட்டில் சேரும் கழிவுகளை அகற்றுவதும் எளிதாகும். தவிர, வீட்டுத்தோட்டச்செய்கையில் ஈடுபடுவது உடற்பயிற்சியாகவும் உள்ளது.

வீட்டுத் தோட்டத்தில் பயிரிடுவதற்கான தரமான விதைகளை திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம் வழங்குகிறது. இந்த விதைகளை கமநல சேவை நிலையங்களில பெற்றுக்கொள்ளலாம். வீட்டுத்தோட்டத்துக்கான ஆலோசனைகளையும் கமநலசேவை நிலையங்கள் வழங்குகின்றன.




வீட்டுத்தோட்டம் அமைப்பது தொடர்பான சில அடிப்படைகளை இங்கு பார்ப்போம்.

பெரும்பாலான மரக்கறிப் பயிர்களுக்கு போதிய சூரியவெளிச்சம் தேவை. மழைகாலத்தில் இலைகளில் இருந்து வடிந்து விழும் நீர் மரக்கறிப் பயிர்களுக்குப் பாதகமாக அமையுமாதலால், மரக்கறிப் பாத்திகளுக்கு நேரடியாக மேலுள்ள மரங்களில் கிளைகளை வெட்டி அகற்றுதல் வேண்டும்.

### தரை தயாரித்தல்

மரக்கறிப் பயிர்களின நடுகையை உயர்ந்த மேடைகளில் அல்லது தாழ்ந்த பாத்திகளில் அல்லது தனி நடுகைக் குழிகளிலும் மேற்கொள்ளலாம். களித்தரைகளிலும் நீர் வடிப்புக் குறைந்த தரைகளிலும் உயர்ந்த மேடைகளில் நடுகையை மேற்கொள்வது அவசியம். சாதாரணமாக மேடைகளுக்கிடையே ஓர் அடி அகலத்தில கான்களை அமைத்து அம்மண்ணைக் கொண்டு அரை அடி உயரத்தில் மேடைகளை அமைக்கலாம். நீர்வடிப்பு மிகக்குறைவாகக் காணப்படுமானால் கான்களை மேலும் ஆழமாக்கி, மேடையை உயர்த்துதல வேண்டும். ஒரு மீற்றர் அகலத்தில் வசதியாக மேடையை அமைத்துக்கொண்டால் மேடையைச் சேதப்படுத்தாமல் கான்களிலிருந்தே களைகட்டல், பசளையிடல், நீர் ஊற்றல் போன்றவற்றை மேற்கொள்ளலாம். நிலத்தின் அமைபபைப்பொறுத்து மேடையின் நீளத்தை அதிகரிக்கலாம்.

மேடைகளை எந்த முறையில் தயாரித்தாலும் அவற்றை ஏறக்குறைய ஓர் அடி ஆழத்திற்கு மண் வெட்டியினால் நன்கு கொத்திக் கிளறுதல் வேண்டும். அப்போது கற்களையும் வேர்களையும் அகற்றுதல் அவசியம். அத்துடன் மேடைகளிலுள்ள களைகளையும் உக்காத பயிர மீதிகளையும் அகற்றவேண்டும். மேடைகள் நடுகைக்கு மூன்று அல்லது நான்கு வாரங்களுக்கு முன் தயாரிக்கப்படுமானால் களைகளையும், மறையப் பயிர் மீதிகளையும் தரையைத் தயாரிக்கும்போது மண்ணுள் புதைக்கலாம்.

### பசளைப் பிரயோகம்

தொடர்ச்சியாகப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு தரைகள் இயற்கை வளமுடையதாகத் தொடர்ந்து இருப்பதில்லை. அதனால் - பயிர்கள் வீரியமாக வளர்வதற்கு தாவர உணவுகளை வழங்குவது அவசியமாகின்றது. மரக்கறிப் பயிர்ச் செய்கையில் தாவரக் கழிவுகளை மண்ணுட் சேர்ப்பதற்கு குறைவான சந்தர்ப்பமே கிடைக்கின்றது. அதனால் போகத்திற்கு ஒரு முறையாவது போதியளவு மாட்டெரு, ஆட்டெரு, கூட்டெரு, இலைச் சருகுகள், நன்கு உக்கிய தோழியெரு போன்றவற்றைச சேர்த்துக்கொள்ளல் வேண்டும். குறிப்பாக மணல் தரைகளில் ஈரப்பற்றைப பேணுவதற்கும், தாவர உணவை வழங்குவதற்கும் இப்பசளைகள் அவசியமாகின்றன. அத்துடன் இப்பசளைகள் களித்தரைகளில் நீர் வடிப்பையும், காற்றோட்டத்தையும் அதிகரிக்கின்றன.

சேதனப் பசளைகள், வளரும் பயிர களுக்கு தாவர உணவுகளை வழங்குவதுடன் மண்ணில் "உக்கல்" ஆக மாறி, சிறந்த மண்ணின் ஓர் அங்கமாக விளங்குகின்றது. உக்கல் என்பது தாவர,மிருகக் கழிவுகள் அழுகி, இறுதியில் கபிலநிறத் துணிக்கைகளாக உருமாறிவரும் பொருள் ஆகும்.

கூட்டெரு என்பது உக்கிய சேதனப் பசளைகளே. இது ஓர் பூரண தாவர உணவாகும். நிலத்தில் உர மிடுவது பற்றி கமநல சேவை நிலையங்களில் தகுந்த ஆலோசனைகளைப் பெறமுடியும்.

### எப்போது நடுவது?

எமது நாட்டில் இருபருவப் பெயர்ச்சிக் காலங்களுமே மரக்கறி பயிரிடும் வேலையை நிர்ணயிக்கின்றன. இதனடிப்படையில் ஆண்டு தோறும் இருபெரும் நடுகைப் போகங்கள் காணப்படுகின்றன. நடுகையின் போதும், பூத்துக் காய்க்கும் போதும் பெருமழை உகந்ததல்ல. அதனால் ஒவ்வொரு பருவப் பெயர்ச்சிக் காலத்திலும் பெருமழையின் பின் நடுகையை ஆரம்பிக்கலாம். வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காலத்தில் (பெரும் போகக் காலத்தின் போது) நடுகையை நவம்பர் முதல் ஜனவரி வரை மேற்கொள்ளலாம். தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காலத்தில் (சிறுபோகக் காலத்தில்) ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் மரக்கறிப் பயிர்களின் நடுகையை மேற்கொள்ளலாம்.

### நடுகை

வெண்டி, புடோல், முள்ளங்கி, பீர்க்கு போன்ற பயிர்களை நேரடியாகத் தோட்டத்திலேயே நடலாம். இதேவேளையில், சிறிய விதைகளைக் கொண்ட மிளகாய், கத்தரி, கோவா, பூக்கோவா ஆகிய பயிர்களை முதலில் நாற்று மேடைகளில் வளர்த்து 4-6 வாரப் பருவமடையும் போது தயாரிக்கப்பட்ட தரையில் மாற்றி நடுதல் வேண்டும். ஏறக்குறைய இரண்டு வாரங்களின் பின் ஒவ்வொரு மேடைக்கும் கூட்டெரு போன்ற நன்கு உக்கிய சேதனப் பசளையில் 3கூடை சேர்க்கவும். நாற்றுமேடையானால் மண்கட்டிகள் உடைக்கப்பட்டு மண் நன்கு தூர்வையானதாக மாற்றப்படுதல் வேண்டும். அத்துடன், நாற்றுமேடையில் 2அங்குல உயரத்துக்கு நெல்லுமியைப் பரப்பி எரிக்கவும். நெல் உமி பெறுவது கடினமானால், காய்ந்த இலைகள், ஓலைகள் போன்றவற்றை பரவி எரிக்கவும். இவ்வாறு செய்வதனால் நுண்கிருமிகள் அழிக்கப்பட்டு, நாற்று மேடையில் நாற்றுக்கள் அழிவது தவிர்க்கப்படுகின்றது.

விதைகளை நாற்றுமேடையில் ஐதாக விதைக்கலாம் அல்லது 4அங்குல இடைவெளியில் வரிசையில் விதைக்கலாம். வி[illegible]களை விதைத்த பின் மெல்லிய [illegible] மண்ணினால் மூடி, அகன்ற பலகையினால் மெதுவாக அமத்திவிடவும். உடனே மேடைக்கு விதைகள் சிதறாதவாறு கவனமாக நீரூற்றவும். அதனைத் தொடர்ந்து மேடைகள் ஈரமாக இருக்கக் கூடியவாறு தொடர்ந்து ஒழுங்காக நீரூற்றி வருதல் வேண்டும். முதல் 3 - 4 நாள்களும் விதைகள் முளைகொள்ளும் வரை மேடையை பழைய கிடுகினால் அல்லது வைக்கோலினால் அல்லது மெல்லிய சாக்கினால் மூடிவிடவும். விதைகள் முளைகொள்ள ஆரம்பித்தவுடன் இவற்றை அகற்றிவிடலாம். காலநிலை நிச்சயமற்றதாகக் காணப்படுமானால் பெருமழையினின்றும் மேடையைப் பாதுகாப்பதற்கு மேடைகளுக்கு மேல் பந்தல் ஒன்றை அமைக்கவும். கிடுகினால் அல்லது பொலித்தீனினால் அமைக்கப்பட்ட பதிந்த பந்தல் இத்தேவைககுப் போதுமானதாகும். பந்தல் அமைககப்படுமானால் நாற்றுக்களுக்கு சூரியஒளி பட்டு அவை வைரமடையக் கூடியவாறு வசதியுள்ளதாக இருக்க வேண்டும். நாற்றுக்களைப் பிடுங்குவதற்கு முன் பந்தலைப் படிப்படியாக அகற்றல் வேண்டும்.

பூச்சாடிகளில், பெட்டிகளில், நாற்றுமேடைகளில் வளர்க்கப்படும் நாற்றுக்களின் வேர்களும், தண்டுகளும் சேதமுறாதவாறு அவற்றைக் கவனமாகப் பிடுங்குதல் வேண்டும். நாற்றுகளைப் பிடுங்குவதற்கு முதல் நாள் நாற்றங்காலிற்கு நன்கு நீர் ஊற்றவும்.

### திட்டமிடப்பட்ட ஒரு வீட்டுத்தோட்டம்

★ போஷாக்குத் தேவைக்கேற்றவாறு குடும்பத்தின் நாளாந்தத் தேவையை உற்பத்தி செய்ய வேணடும்.

★ பசளி, வல்லாரை, பொன்னாங்காணி, அகத்தி போன்ற இலைக்கறி வகைகளில் முடிந்தளவு தன்னிறைவு அடைதல் வேண்டும்.

★ மிளகாய், வெங்காயம், றம்பை, கருவேப்பிலை, சீரகம், கடுகு போன்ற வாசனைப் பொருள்களின் தேவையில் ஒரு பகுதியையாவது பூர்த்தி செய்தல் வேண்டும்.

★ ஓர் எலுமிச்சை மரம் அவசியம்.

★ இறுதியாக சூழலுக்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும். ◆

## சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு விழா

மாதகல் இந்துசமய அபிவிருத்திச் சங்கம் அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே மாதகல் அரசடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்திய சமய அறிவுப் போட்டியின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது.(எ-135)

## ஆலயப் புனரமைப்புக்கு நிதிவழங்குமாறு கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஜுன்10

சுழிபுரம் சோழர்புரத்திலுள்ள புராதன சிவன் ஆலயமான சம்புநாதேஸ்வரம் ஆலயத்தின் கட்டடப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு நிதி உதவி வழங்குமாறு, ஆலய பரிபாலன சபையினர் இந்து சமய விவகார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுவரை இப்பகுதி மக்களிடமிருந்து நன்கொடையாக பெறப்பட்ட 7 லட்சத்து 65 ஆயிரம் ரூபாவைக் கொண்டு அறநெறிப் பாடசாலை, பாலஸ்தாபனம், ஆதிமூலத்தின் பத்து தூண்கள் ஆகியன நிறுவப்பட்டுள்ளதாகவும் -

கட்டட வேலைகளை முற்றாக நிறைவேற்றுவதற்கு மேலும் நிதி தேவைப்படுவதாகவும் - இது குறித்து அவர்கள் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ-135)

## நீர் விநியோகத் திட்டத்தை விஸ்தரிக்க ஏற்பாடு

வலி.மேற்கு,ஜுன்10

பொன்னாலை, அராலி வடக்கு, முதலிகோவிலடி ஆகிய பிரதேசங்களிலுள்ள நீர்விநியோகத் திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளது.

மேற்படி மூன்று நீர்விநியோகத் திட்டங்களையும் விஸ்தரிப்புச் செய்வதற்கு வடக்கு - கிழக்கு அவசர புனர்வாழ்வு நிதியத்தில் இருந்து 10லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (எ-175)

## வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

வலி.மேற்கு,ஜுன்10

வலி.வடக்கு பிரதேச சபையில் அலுவலக சிற்றூழியர்கள், வருமான மேற்பார்வையாளர், மருந்துக் கலவையாளர் ஆகியவற்றுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சபையில் பணியாற்றும் சிற்றூழியர்களிடையில் இருந்து இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-10-86)

## கைதடிப்பாலம் புனரமைப்பு ஆரம்பம்

தென்மராட்சி,ஜுன்10

யுத்தத்தினால் பலத்த சேதமடைந்த கைதடிப் பாலம் புனரமைக்கப்படவுள்ளது.

இந்தப் பாலம் திருத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் கடந்த வெள்ளியன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

300வருடங்கள் பழைமை வாய்ந்த இப்பாலம் 2000ஆம் ஆண்டு இடம் பெற்ற யுத்த நடவடிக்கைகளின் போது பலத்த சேதமடைந்தது. பின்னர் தற்காலிகமாகப் பாலம் திருத்தம் செய்யப்பட்டு போக்குவரத்து நடைபெற்று வந்தமை தெரிந்ததே. (எ-117)

# நூலகர் செயலமர்வில் பங்கேற்க அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்10

ஆசிரிய நூலகர்களுக்காக இன்று செவ்வாய்க்கிழமை முதல் யாழ் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள செயலமர்வில் பின்வரும் ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

வலிகாம வலயத்தில் இருந்து அழைக்கப்பட்டோர் விபரம் வருமாறு:-

கே. லோகநாதன்(வட்டு.திருஞானசம்பந்தர் வித்தியாலயம்), ஜே. சாந்தலிங்கம்(ஸ்கந்தவரோதயக் கல்லூரி), எஸ். சிவாஜினி(இராமநாதன் கல்லூரி), திருமதி விஸ்ரீஸ்கந்தராஜா (இணுவில் மத்திய கல்லூரி), எஸ். சிவநாதன் (மல்லாகம் ம.வி.), திருமதி எஸ். சீதா (வசாவிளான் ம.ம.வி.),

திருமதி வி. செல்வரஞ்சன் (யூனியன் கல்லூரி), வி.ஜெயக்குமார் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), திருமதி ஆனபல்லி ரொலன்ஸி(இளவாலை புனித ஹென்றீஸ்), திருமதி வி.ஸ்ரீசக்திவேல் (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி),

திருமதி ஜேமதிவதனா (விக்ரோரியாக் கல்லூரி), திருமதி எஸ்.கேவி.ஜெயக்குமார்(வட்டு. இந்துக்கல்லூரி), என்.சாமினி(இணுவில் இந்துக்கல்லூரி), திருமதி ஆர்.சுசிகலா(ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்),

திருமதி எஸ்.ரட்ணகோபால் (பண்ணாகம்-மெய்கண்டான் வித்தியாலயம்), திருமதி எஸ்.கிருபாகரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), திருமதி ரி.சிவகுமாரன் (சுன்னாகம் மயிலணி சைவவித்தியாலயம்), திருமதி எஸ். அருந்தவராஜா(உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்).

ஜ். சேதுநாதன் (தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயம்), கே. யசோதரன்(அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்), திருமதி எஸ். பாலசுந்தரம் (கட்டுவன்புலம் ம.வி.), வி. ஜெயகுமரன் (இளவாலை ஆர்.சி. ரி. எம். எஸ்.),

திருமதி எஸ். விக்னேஸ்வரன் (மாதகல் சென். யோசப்), திருமதி வி.சிவஞானசுந்தரம்(மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்), வி. பாலசந்திரன்(அராலி இந்துக்கல்லூரி), திருமதி ஜே.முருகராஜன்(சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி)...

[illegible]

திருமதி ஜே.முருகராஜன்(சுந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்), ஏ.யோகநாதன்(நவாலி ம.வி.).

தீவகவலயத்தில் இருந்து அழைக்கப்பட்டோர் விபரம் வருமாறு:-

திருமதி ச.தியாகராசா (கரம்பொன் சண்முகநாத மகா வித்தி.), ஜ. தேவ கிருபாகரன்(கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வித்தி.), கே.சுமதி(வேலணை சேர் வை. துரைச்சுவாமி ம.ம.வித்தி.), எஸ். நித்தியானந்தன்(கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தி.),

சுட்வின் சுமந்திரன்(வேலணை மேற்கு நடராசா வித்தி.), எஸ். பரராஜசேகரம்(நயினாதீவு மகாவித்தி.), திருமதி கே.சோதிநாதன்(நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி.), வை.சிவநிதி (வேலணை கிழக்கு மகாவித்தி.) மற்றும் யாழ்ற்றன் கல்லூரி, புங்குடுதீவு மகாவித்தி., நெடுந்தீவு மகாவித்தி, அனலைதீவு சதாசிவ மகாவித்தி. ஆகியவற்றின் ஆசிரிய நூலகர்கள்.

கிளிநொச்சி வலயத்தில் இருந்து அழைக்கப்பட்டுள்ளோர் விபரம் வருமாறு:-

பி.முருகதாஸ்(கிளிநொச்சி மத்திய கல்லூரி), கே.தியாகராஜா (கிளிநொச்சி இந்துக்கல்லூரி), எஸ்.சங்கரி(புனித திரேசா மகளிர் கல்லூரி), ரி.சிவரூபன் (வட்டக்கச்சி ம.வி.),

வி.நந்தினி(இராமநாதபுரம் ம.வி.), ஏஏ.அன்பழகன்(உருத்திரபுரம் ம.வி.), பி.செல்வராணி(பரந்தன் இந்துக்கல்லூரி), கே.கமலராணி (கண்டாவளை ம.வி.), ஜ.ஜெயகுமாரி (பிரமந்தனாறு அ.த.க.பாடசாலை), பி. கேதீஸ்வரன் (பூநகரி),

பி.ஆனந்தராஜா (வீரவில் இ.த.க. பாடசாலை), சி.மகேந்திரநாயகம்(பளை மத்தியகல்லூரி), என். சுரேஷ்குமார் (பூநகரி நல்லூர் த.க. பாடசாலை), கே.மங்களேஸ்வரி(ஜெயபுரம் த.க. பாடசாலை),

என்.ரவீந்திரன் (வேம்பொடுகேணி சி.சீ.த.பாடசாலை), ரி.கண்ணபிரான் (வெண்ணேரிக்குளம் ம.வி.), எஸ். செல்வகாந்தன்(தாமரைக்கேணி த.க. பாடசாலை),

எஸ். கேதீஸ்வரன் (இரணைதீவு, இ.த.க. பாடசாலை, கனகபுரம் மகா வித்தியாலயம்), ஏ.பரமேஸ்வரி (புனித பத்திமா றே.க.த.பாடசாலை), எஸ். ஜெயந்தன்(கனகாம்பிகை குளம் த.க.பாடசாலை),

எஸ்.விக்னராஜா(கனகபுரம் ம.வி.), வி.நடராஜா(பளை றோ.க.த. பாடசாலை), என்.சாந்தினிதேவி (கிளிநொச்சி ம.வி.), என்.சந்திரமோகன் (திருவையாறு ம.வி.), ஈ.கந்தசாமி (அக்கராயன் த.க. பாடசாலை),

எம். விஜயராணி (ஊற்றுப்புலம் த.க.பாடசாலை), எல்.தேவிபிரகாசம் (தருமபுரம் ம.வி.), எஸ்.ஞானமலர் (இராமநாதபுரம் மேற்கு த.க.பாடசாலை), வி.ஞானசந்திரன்(அக்கராயன்ம.வி.), எம்.அமிர்தலிங்கம்(ஆனைவிழுந்தான் குளம் த.க.பாடசாலை), பி. நந்தினி (செளியதீவு த.க. பாடசாலை).

(எ-9)

## கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்கள் 9 பேர் நியமனம்

அச்சுவேலி,ஜுன்10

யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களில் கடமை புரிவதற்கு ஒன்பது கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மா.இராகவன், பேரின்பசிவம் ஆகிய இருவரும் வேலணைப் பிராந்திய அலுவலகத்திலும், செல்வி வளர்மதி கோப்பாய் பிராந்திய அலுவலகத்திலும், பி.கோபிநாத், செல்வி அபிஜிதா ஆகியோர் சாவகச்சேரி பிராந்திய அலுவலகத்திலும், செல்வி மேகலா கரவெட்டி பிராந்திய அலுவலகத்திலும், செல்வி ந.டிலானி உடுவில் பிராந்திய அலுவலகத்திலும், செல்வி த.தர்சினி தெல்லிப்பழை பிராந்திய அலுவலகத்திலும், லத்தீவ் யாழ்.பிராந்திய அலுவலகத்திலும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கால்நடை அபிவிருத்தி சுகாதார போதனாசிரியர் பதவிக்கு விசேட பயிற்சி பெற்றவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-11)

# புலிகளின் கோரிக்கைக்கு....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறல்' திட்டத்தை நாம் ஆரம்பித்தோம். பல காரணங்களினால், வடக்கு, கிழக்கில் உள்ளோருக்கு மாறான புதுமையான விதத்தில் தெற்கில் உள்ள நமது மக்களும் பாதிப்புற்றனர். ஆனாலும், அந்தப் பாதிப்பின் வலி எந்தவகையிலும் குறைந்ததல்ல.

இதனால்தான் வடக்கு, கிழக்குக் குறுகிய மற்றும் இடைக்கால உதவிகளை உங்களிடம் நாம் கோருகின்றோம் - வடக்கு, கிழக்கு தேவை மதிப்பீட்டின் மூலம் யுத்தத்தால் பாதிப்புற்ற நமது பிரதேசங்களைப் புனரமைப்பதற்கு.

ஒருபுறம் குறுகியகால, இடைக்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேசமயம் இதுவரை பெரும் பாதிப்புற்ற நமது மக்களின் வாழ்க்கையை அவர்களுக்கு மீள வழங்குவதற்காக "இலங்கையை மீளப் பெறல்" திட்டம் ஊடாக முழு நாட்டையுமே மீளக்கட்டுகின்றோம்.

### கையேந்தவில்லை, கைதாருங்கள்

நாங்கள் கையேந்திவரவில்லை. எங்கள் கைகளைத் தூக்கிவிடக் கோரியே வந்துள்ளோம்.

உங்கள் உதவியின் மூலம் எங்கள் நாட்டை சுபீட்சமானதாகவும், நவீன சமூகமாகவும் ஏழ்மையை மிகத் தாழ்ந்த அளவுக்குக் குறைத்து எமது மக்கள் வசதியாக வாழத்தக்கதாகவும் மாற்றுவதற்குத் தேவையான வளத்தைத் திரட்டி மீளக்கட்டமுடியும் என நாம் நம்புகிறோம்.

நான் இங்கு குறிப்பிட்ட மூன்றாவது விடயம் அரசியல் ரீதியாகப் பிரிந்துள்ள சமூகம் பற்றிய கேள்வியாகும்.

எந்த இலங்கையரை நீங்கள் கேட்டாலும் அவர்கள் தாம் சில அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள் மற்றும் போக்கினால் அசௌகரியப்பட்டிருப்பதைக் கூறுவர். எல்லோருக்கும் எல்லாவற்றையும் வழங்குவதாக உறுதி கூறுவதற்காக வாய்ப்பான சந்தர்ப்பமாகவே தேர்தல்கள் மாறிவருகின்றன. வழங்க முடிந்த இயல்பை மீறியதாகவே அரசியல் வாக்குறுதிகள் எப்போதும் உள்ளன. தேர்தல்கள் வன்முறை விடயங்களாக மாறிவருவதுடன், மீள் தெரிவை உறுதிப்படுத்துவதற்காக அரச இயந்திரத்தைப் பயன்படுத்துவதும் அடிக்கடி நிகழ்வாகிவருகின்றது.

இரு பிரதான அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான கசப்புணர்வும் பகை உணர்வும் கடந்த காலங்களில் பல தடவைகள் மாறி மாறி உமிழப்பட்டிருக்கின்றன.

புதிய அரசுகள் பதவிக்கு வரும்போது - அதிகாரத்துக்கு வரும்போது - அரசியல் நியமனங்களுக்கு இடமளிப்பதற்காக தேர்ச்சி பெற்ற நிபுணத்துவ ஆள்கள் அவர்களது பதவிகளில் இருந்து தூக்கி வீசப்பட்டு வருகின்றார்கள். ஆனால், இந்த அரசில் அப்படியல்ல.

எனவே, நிலைமையில் மாற்றம். எதிரணியும் அதன் போக்குப் பொறுப்பு. ஆம், தங்களை அசௌகரியமான நிலைக்குத் தள்ளுகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தும் கேள்விகளையும் அவர்கள் அரசிடம் எழுப்பவேண்டும். கொள்கைகள், கோட்பாடுகள் தொடர்பான விடயங்களை அவர்கள் எதிர்க்கலாம். ஆனால், வெறுமனே ஓர் அரசைக் கவிழ்ப்பதற்காக அரசை எதிர்ப்பது என்பது மக்களைக் காட்டிக்கொடுப்பதும் ஏற்கனவே நெருக்கடியில் உள்ள முறைமையை மேலும் குழப்புவதுமாகும்.

அரசும் கூட பொறுப்புணர்வுடன் செயலாற்றவேண்டும். நாடாளுமன்ற நடைமுறைகளுக்கு ஊடாக ஆராயும் கௌரவமான பொறுப்பு அவர்களுக்கு உள்ளது. எதிரணி கேள்வி எழுப்பவும் விசாரிக்கவும் அவர்கள் நேரம் வழங்கவேண்டும். இயன்ற சந்தர்ப்பங்களில் எல்லாம், முடிவு செய்யும் நடவடிக்கைகளில் எதிரணியை அவர்கள் சம்பந்தப்படச் செய்யவேண்டும்.

எமது அண்மைக்கால அறிவிப்பின் மூலம் அதை நாம் செய்யத் தொடங்கலாம் என நான் நம்புகிறேன். அரசின் செயற்பாடுகளை ஆய்வு செய்யும் குழுக்களைத் தலைமை வகித்து நடத்துவதற்கு எதிரணி உறுப்பினர்களைக் கொண்டுவரவுள்ளோம். ஊடகங்களுக்கு முழு சுதந்திரமளித்து, மக்களின் ஆய்வுக்காக அரசைத் திறந்துள்ளோம்.

### ஜனாதிபதியுடன் முடிந்தளவு பரந்த கலந்தாலோசனை

என்னுடைய பங்குக்கு நான் பரந்த - இயன்ற - அளவில் ஜனாதிபதிக்கு விடயங்களை அறிவித்து கலந்தாலோசித்து வருகிறேன்.

வேறுபட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த இரண்டு தலைவர்களுக்கு இடையில் அதிகளவு இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கு எங்களுக்கு இடையிலான ஒழுங்கான கலந்தாலோசனை உதவும் என நான் நம்புகின்றேன்.

இதைக் கட்டி வளர்த்து எங்கள் அரசியல் முறைமைக்கு மதிப்பும் கௌரவத்தையும் மீண்டும் கொண்டு வரமுடியும் என நான் நம்புகின்றேன். என்றாலும், பண்பையும் அணுகுமுறைகளையும் மாற்றுவதற்கான பாதை நீண்டதாயும் கடுமையானதாகவும் இருக்கும்.

ஒரேயொரு விடயத்தில் மட்டும் எங்கள் அரசியல்வாதிகளின் ஆதரவை நான் பகிரங்கமாகக் கோருகின்றேன். சமாதான நடவடிக்கைகளுக்குத் தீர்வுகாண்பது தனியுரிமைக்குரிய விடயம் அல்ல. யுத்தமும் சமாதானத்துக்கான தீர்வும் அரசை செயலிழக்கச் செய்வதற்கான சந்தர்ப்பங்களாக மாற்றப்படக்கூடாது. அப்படிச் செய்வது மக்களை ஏமாற்றுவதும் அவர்களின் உயிர்களை நெருக்கடிக்குள் ஆழ்த்துவதுமாகும். அதன் முடிவான பெறுபேறு பயங்கரமானதாக இருக்கும். தங்கள் வேறுபாடுகளை இந்த விடயத்தில் ஒதுக்கிவைத்துவிட்டு, நிரந்தரத் தீர்வு காண்பதற்கான பாதையில் முன்னேறுவதற்கு அரசுக்கு ஆதரவு தரும்படி எங்களின் அரசியல்வாதிகள் அனைவரையும் நான் வேண்டுகிறேன்.

உங்கள் அனைவரினதும் உயர் சிரத்தைக்குரிய முக்கிய விடயத்தை கடைசியாகக் கவனிக்க விரும்புகிறேன். கடந்த காலத்தில் கிடைத்த வெளிநாட்டு உதவிகளை நடைமுறைப்படுத்தும் எமது திறமை பாதிப்புக்குள்ளானமை பற்றிய பிரச்சினையே அது.

உதவிகள் உரிய - திறமையான - முறையில் பயன்படுத்தப்படும் என்பதில் நாம் உறுதியாக இல்லாவிட்டால் இலங்கை அதிகளவு உதவியை ஏன் கோருகின்றது?

நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளில் உள்ள குறைபாடுகள்தான் புலிகளுடனான எமது பேச்சுக்களில் முக்கிய தடைகளுள் ஒன்றாக உள்ளது. நிரந்தரத் தீர்வை உருவாக்குவதற்கும் நாடு முழுவதிலும் பொருளாதார முயற்சிகளை மேம்படுத்தி ஏழ்மையைக் குறிப்பிடத்தக்களவு குறைப்பதற்கும் இந்தப் பிரச்சினையை நாம் தாண்டியாகவேண்டும்.

திட்ட நடைமுறைப்படுத்தல் முறையை மேம்படுத்துவதற்கு அரசு முக்கியமான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், நாம் கடந்த 18 மாத காலத்தில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தையும் கண்டுள்ளோம்.

என்றாலும், நடவடிக்கை முறைகளில் ஒட்டுப்போடமுடியாத ஓட்டைகள் இன்னும் அடிப்படைப் பிரச்சினைகளாக உள்ளன.

எங்கள் பொதுச் சேவைத்துறையானது அதிகரித்துவரும் திட்ட வடிவமைப்பு மற்றும் நடைமுறை தொடர்பான அதிகரிப்பு வீதத்தைக் கையாள்வதற்குத் தேவையான கொள்ளவின்றியும் மிகப் பெரியதாகவும் குறைந்தளவு வேதனம் பெறுவதாகவும் உள்ளது.

### புற மூலவளத் திணைக்களம்

எனவே, அரசு புற மூலவளத் திணைக்களம் என்ற முற்றிலும் புதிய அமைப்பு ஒன்றை அறிமுகப்படுத்துகின்றது என்பதை இன்று என்னால் உங்களுக்குக் கூறமுடியும். வெளிநாட்டு உதவி மூலமான திட்டங்களை நடைமுறைப்படுத்தும் இலக்கு அதுவே பொறுப்பாக இருக்கும். உரிய நேரத்தில் நிபுணத்துவ கேள்விப் பத்திரமுறையை அது உறுதிசெய்யும். அத்தோடு, திட்டங்களை முகாமைத்துவம் செய்து நடைமுறைப்படுத்துவதற்காக அரசுக்கு வெளியில் தேர்ச்சியும் தகைமையும் பெற்ற தனியாட்களையும் நிறுவனங்களையும் கொண்டு வருவதற்கான அதிகாரம் அதற்கு இருக்கும். வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை ஆகியன குறிப்பிடத்தக்களவு மேம்படுத்தப்படும்.

வடக்கு - கிழக்கு மற்றும் பிணக்கினால் அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வளித்தல் ஆகியவற்றுக்காக தேவைகளைப் பயன்படுத்துவதில் குறிப்பிடத்தக்க மேம்பாட்டுக்கான அடிப்படையை இந்தப் புதிய முறை வழங்கும்.

நாடு முழுவதிலும் வருமானத்தை உயர்த்தி ஏழ்மையைக் குறைக்கும் பொருளாதார மாற்றத்துக்கான அடிப்படையையும் அது தரும்.

இந்த மாற்றங்கள் இலகுவானவை அல்ல என்பதும் அதேவேளை, எல்லோர் மத்தியிலும் வரவேற்புப் பெறக்கூடியவை அல்ல என்பதும் எமக்குத் தெரியும். தற்போதைய அணுகுமுறையில் சில பொறுப்புமிக்கவைக்கு இலங்கையைப் பொறுத்தவரை இந்தப் பொறுப்புகள் மேற்படி அத்தியாவசிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அவற்றை வேகமாகச் செய்வதற்கும் மிகவும் தடையாக உயர்ந்து நிற்கின்றன.

புதிய நடைமுறை இந்த வருட முடிவுக்குள் கொண்டுவரப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

என்றாலும், அடுத்த ஏழு மாதங்களுக்குள் இந்தப் புதிய நடைமுறையை வடிவமைத்து அறிமுகப்படுத்துவதற்கு உதவும் சமூகத்தின் முழு ஆதரவும் ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றது.

உதாரணத்துக்கு செயல்திறன் மிக்க நடவடிக்கை முறைகளையும் சர்வதேச ரீதியில் சிறந்த நடைமுறைகளையும் அடையாளம் காண்பதற்கு ஆலோசனைகள் தேவைப்படுகின்றன. இந்தப் புதிய நடைமுறையில் செயற்படுவதற்கான அலுவலர்களைப் பயிற்றுவிப்பதற்கும் அவர்களுக்குரிய வசதிகளையும் வழங்கவும் எங்களுக்கு உதவிகள் தேவைப்படுகின்றன.

அடுத்த இரண்டு நாள்கள் உங்கள் ஆராய்வுகளின் போது இந்தத் திட்டம் செயற்படுத்துவதற்கான உறுதிப்பாடுகளை நீங்கள் வெளிபடுத்துவதை நான் எதிர்பார்க்கிறேன்.

சமாதானத்தைப் பொறுத்தவரை நாம் அதை விட்டுவிடமாட்டோம். அதில் எமது நேர்மை சந்தேகத்துக்கு அப்பாற்பட்டதாகவே இருக்கும்.

பொருளாதாரத்தைப் பொறுத்தவரை - நாங்கள் எங்கள் திட்டப்படி முன்னேறிவருகிறோம். அதனைக் கடந்த வருடத்தில் எங்களின் செயற்பாடுகளின் மூலம் நீங்கள் அவதானித்திருப்பீர்கள்.

அரசியல் ரீதியில் - பல சவால்களை நாங்கள் எதிர்கொள்கின்றோம். அவை ஒவ்வொன்றையும் முறையான வழியில் நாம் கையாண்டுவருகிறோம்.

நடைமுறைப்படுத்தலில் - எமக்கு ஏற்பட்டுள்ள விரக்தியே புதிய தீர்வை நாட எம்மைத் தள்ளியுள்ளது.

மக்கள் சுதந்திரமாக, சுபிட்சத் தன்மையுடனும் சமாதானமான சமூகத்தில் வாழும் இலங்கை குறித்து எனக்குத் தெளிவான பாதை உண்டு. அதுவே நீண்ட பல வருடங்களாக நான் எதிர்பார்க்கும் இலங்கை ஆகும்.

அந்த இலங்கையில்தான் சுபீட்சமான பொருளாதாரத்தின் நன்மையை ஒவ்வொருவரும் தமக்குள் பங்கிட்டுக் கொள்ளமுடியும்; அதில்தான் எங்கள் கலாசாரங்களின் விழுமியங்கள் பிரகாசிப்பதை உலகம் காணமுடியும்.

18 மாதங்களுக்கு முன்னர் எனது பிரதமர் பதவியின் ஆரம்பத்தில் எனது மக்களுடன் பேசிய நான் முட்கள் நிறைந்த தோட்டத்தில் புதிய மலர்களைப் பூக்கச்செய்யும் பெரும் சவால் குறித்துக் குறிப்பிட்டிருந்தேன்.

எமது பிள்ளைகளுக்காக மீண்டும் ஒரு தடவை அந்த மலர்களை மலர்விப்போம்.

உங்கள் உதவியுடன் அதைச் செய்விக்கமுடியும் என நான் நம்புகிறேன் - என்றார் பிரதமர். ★


## கண்ணீர் அஞ்சலி



### திருமதி கலாவல்லி சிவகுமார்

*ஈரைந்து ஆண்டுகள் சேவையிலிருந்தார்*
*நூறைந்து மாணவர்கள் இங்கு தேவை நீயென்றனர்*
*காலுலைந்து அலைந்தாலும் கூட வருவது உன் சேவையன்றோ*

எமது சங்க உறுப்பினரும் பாடசாலை ஆசிரியருமான
திருமதி கலாவல்லி சிவகுமார்
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
*சங்கானை.* யா/சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம்.



## கண்ணீரில் நனைந்த கவிதை

மண்ணின் மடியில் 28 - 01 - 1919



விண்ணின் மடியில் 02 - 06 - 2003

### திருமதி திரேசம்மா அடைக்கலமுத்து

(முன்னாள் உப அதிபர்,
புனித என்றியரசர் தமிழ் வித்தியாலயம், இளவாலை)

வானம் மழை பொழியும் வானமதி பொன்சொரியும்
தேனாய்த் தமிழ் சொரியும் தென்றல் தெருக்கூட்டும்

வாழை பலா மாமரங்கள் வளம்சொரியும் இளவாலை
நாளெல்லாம் செபதபங்கள் நடக்கும் திருக்கோயில்

கற்றோர் குவித்திருக்கும் கரைகாணாக் கல்விநிதி
சிற்றாறு அள்ளிவந்த முத்தமிழர் சந்நிதியில்
பிறந்த திரேசம்மாவே பிரிந்தனையோ இவ்வுலகம்

இளையோர்க்குத் தமிழ்மொழியில் ஏடுகளை விரித்துவைத்து
மழைமொழிந்த மேகம் ஒன்று வான்நோக்கிச் சென்றதம்மா

முத்துக்கள் பத்தளித்த மோனத்திருவுருவம்
சித்தம் கலங்கிடவே தேவுலகம் சென்றதம்மா

கோயில் மணியடிக்க ஓடும் நதியாகி
கடலிற் கலந்து விட்ட கண்மணியே போனாயோ?

உடலைத் திரியாக்கி உள்ளத்தை நெய்யாக்கிக்
கடமை புரிந்திட்ட கைவண்ணம் யாரறிவார்?

திங்கள் முகத்தில் திரு அருளைக் கொண்டவளே
செவ்வாய் இதழில் சிரிப் பேந்தும் திருக்குறளே

புல்லும் தலைவணங்க மெல்ல நடந்தவளே
எல்லார்க்கும் பண்புகளின் ஈரம் தெளித்தவளே

வானம் வெடித்துப் புயலே அழுதாலும்
ஞானபரன் அடிமறவா தேன்கனியும் பூமகளே!

வாழ வழியிழந்து வாழ்விழந்து சோர்ந்து விட்ட
ஏழைகளைக் கண்டுவிட்டால் இதயம் திறப்பவளே

அன்பரங்கம் என்ற பெயர் அமைந்த உன் இல்லத்தில்
பொன் ஒளியின் தீபத்தைப் பகலிரவாய் ஏற்றி வைத்தாய்.

*நல்லவர்க்கு மரணமில்லை, நிலைத்து நீ நீடு வாழ்வாய்.*

இளவாலை, இங்கிலாந்து, கனடா, ஜேர்மனி,
பிரான்ஸ் ஆகிய நாடுகளில் வாழும்
இளவாலை மக்கள்.

(C/28345)



## OUR HEART FELT SYMPATHIES

TO

## Mr. ADAIKALAMUTHU AND CHILDREN

*As sorrow quietly slips away,*
*it's yesterday's memories of the day-to-day*
*that find that place that's set apart,*
*where love lives on within the heart.*

*Sincere thoughts of sympathy and understanding.*

RAVI RAVISHANKAR
SATHEES BALACHANDRAN
For
TAMIL STUDENTS
*CONCORDIA UNIVERSITY, MONTREAL, QUEBEC*
*UNIVERSITY OF TORONTO*
*UNIVERSITY OF OTTAWA*
*WATERLOO UNIVERSITY*
*Mc MASTER UNIVERSITY, HAMILTON - ONTARIO, CANADA*



## கண்ணீர் அஞ்சலி

எமது அன்பான பேராசிரியர்
அருட்கலாநிதி ஜோசப் சந்திரகாந்தன் அடிகளாரின்
தாயார் இளைப்பாறிய
உதவித்தலைமை ஆசிரியை

### திருமதி திரேசம்மா அடைக்கலமுத்து

அவர்களின் மரணச் செய்தி
கேட்டு துயர் அடைந்துள்ளோம்.
பேராசிரியரின் தந்தை அவர்கட்கும்
சகோதர சகோதரிகளுக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

திரு.குலதீரன் அம்பலவாணர் B.Eng. (Peradaniya)
தலைவர்
சைவத் தமிழ் மறுமலர்ச்சி மன்றம்
அலுவலகம் # 1110
180 LEES Ave.
OTTAWA - ONTARIO
Tel. : 613 5697074

(C/28346)

# பலஸ்தீன போராளிக் குழுக்களுக்கு இஸ்ரேலியப் பிரதமர் எச்சரிக்கை!

## சமாதானத்திட்டம் குழம்பும் அறிகுறி

டெல்அவிவ்.ஜூன்10

இஸ்ரேலியப் படையின் போன்று உடையணிந்து எமது படையினரைத் தாக்கிய பலஸ்தீன போராளிகள் மீது கடுமையான - உரிய - நடவடிக்கை எடுக்கப்படும் என்று இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷெரோன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காஸா பகுதியில் உள்ள இஸ்ரேலிய இராணு முகாம் பகுதிக்குச் சென்ற பலஸ்தீனப போராளிகள் மூவர், அங்கு நின்ற இஸ்ரேலியப் படையினரை குறிவைத்து சரமாரியாகச் சுட்டத்தில் நான்கு இஸ்ரேலியப் படையினர் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேலியப் படையினர் திருப்பித் தாக்கியதில் பலஸ்தீனப் போராளிகள் மூவரும் உயிரிழந்தனர். இச்சம்பவத்தை கண்டித்த இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இஸ்ரேல் - பலஸ்தீனத்தின் பகையை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா முன்வைத்துள்ள மத்திய கிழக்கு சமாதானத் திட்டம் முக்கிய கட்டத்தை எட்டியுள்ள நிலையில் இந்த சண்டை நடைபெற்றுள்ளது.

இஸ்ரேலுடனான சமாதானப் பேசசுக்களை விரும்பாத பலஸ்தீன போராளிக்குழுக்கள் சமாதானத் திட்டத்திற்கு தமது ஆதரவு கிடைக்காது என்பதை வெளிப்படுத்தும் வகையில இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளன.

பலஸ்தீன போராளிகளின் இந்த நடவடிக்கை காரணமாக அவர்களை தீவிரவாதிகள் என்று கூறிவரும் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன், மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்




திற்கு தீவிரவாதிகள் குந்தகம் விளைவிக்கின்றனர் என்றும் கூறியுள்ளார்.

பலஸ்தீன போராளிக் குழுக்களில பிரதானமானதாகக் கருதப்படும் ஹமாஸ் இயக்கம் சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பது பெரிய நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் முன்னிலையில் ஜோர்டானில் பலஸ்தீனப் பிரதமர் மஹ்மூட் அப்பாஸும் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனும் நேரடியாகப் பேசி, சமாதானத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பது என்று ஒப்புக் கொண்டனர்.

ஆனால், அமெரிக்காவின் நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டு பலஸ்தீன உரிமைகளை பிரதமர் அப்பாஸ் இஸ்ரேலுக்கு வாரி இறைத்துள்ளார் என்று ஹமாஸ் இயக்கம் குற்றஞ்சாட்டி போர்நிறுத்தத்திற்கு உடன்படப்போவதில்லை என்று அறிவித்துவிட்டது.

இஸ்ரேலியப் படையினர் மீதும், இஸ்ரேலியர்கள் மீதும் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தி வரும் ஹமாஸ் இயக்கம், போர்நிறுத்தத்திற்கு ஒப்புக்கொள்ளாதது பலஸ்தீன தரப்பிற்கு சிக்கலை உருவாக்கியுள்ளது. போராளிகளை கட்டுப்படுத்த வேண்டி கட்டாயத்திற்கு பலஸ்தீன நிர்வாகம் தள்ளப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் தாக்குதலை நடத்த ஆரம்பித்துள்ளனர்.

மேற்குக்கரையையும், காஸாவையும் இஸ்ரேல் இராணுவத்தின் பிடியில் இருந்து விடுவித்து பலஸ்தீனத்தின் கட்டுப்பாட்டுக்கு அளிக்கும் அமெரிக்காவின் திட்டத்தை தங்களுக்குத் கிடைத்த சிறந்த பிடியாக பலஸ்தீன நிர்வாகம் கருதிவந்த நிலையில் காஸாவில் சண்டை நடந்தது சமாதான முயற்சிகளில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. (ஒ)

## கிளர்ச்சியாளர் முற்றுகையால்

# லைபீரியத் தலைநகரிலிருந்து வெளிநாட்டவர் வெளியேற்றம்!

மண்ரோவியா,ஜூன்10

கிளர்ச்சியாளர்களால் முற்றுகையிடப்பட்டுள்ள லைபீரியத் தலைநகர் மண்ரோவியாவிலிருந்து அமெரிக்க, ஐரோப்பிய குடிமக்களை அழைத்துச செல்லும் பணி நேற்று ஆரம்பமானது.

லைபீரிய அதிபர் சாள்ஸ் டெய்லரை பதவி விலகக் கோரும் 'தார்மீக மீளமைப்புக்கான ஐக்கிய லைபீரியர்கள்' என்ற கிளர்ச்சி அமைப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை தலைநகரை முற்றுகையிட்டது. அப்போது அதிபர் பதவியிலிருந்து விலக டெய்லருக்கு 72 மணித்தியாலங்கள் அவகாசத்தை கிளர்ச்சியாளர்கள் வழங்கினர். தாம் வழங்கியுள்ள அவகாசத்துக்குள் டெய்லர் பதவி விலகாவிட்டால் அவர் மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் கிளர்ச்சியாளர்கள் எச்சரித்திருந்தனர்.

கிளர்ச்சியாளர்களை எதிர்கொள்ள முடியாது லைபீரிய இராணுவம் திணறி வருகிறது.

இந்நிலையில், தலைநகர் மண்ரோவியாவில் உள்ள சுமார் 3லட்சம் மக்களில் பெரும்பாலானவர்கள் நகரை விட்டு அகதிகளாக வெளியேறி வருகின்றனர்.

இதேவேளை, அங்கு தங்கியிருந்த அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் குடிமக்கள் நேற்று ஹெலிகொப்டர்கள் மூலம் வெளியேற்றப்பட்டனர். இவர்கள் தூதரகங்களிலும், பன்னாட்டு நிறுவனங்களிலும், பணியாற்றியவர்களாவர். (ஒ)



லைபீரிய தலைநகரிலிருந்து பாதுகாப்புத்தேடி வெளியேறும் மக்களையும் இராணுவ வீரர் ஒருவரையும் படத்தில் காணலாம்.

# இந்தியாவில் இராணுவத்தளம் அமைக்க அமெரிக்கப் படைத்தலைமை விருப்பம்!

தனது ராணுவ தளத்தை இந்தியாவில் அமைக்க அமெரிக்கா விரும்புகிறது.

அமெரிக்க ராணுவத் தலைமையகமான பென்டகன் சமீபத்தில் விடுத்த 'இந்திய அமெரிக்க ராணுவ உறவு: எதிர்பார்ப்பும் புலப்பாடும்' என்ற தலைப்பிலான அறிக்கை இதைத் தெரிவிக்கிறது.

அமெரிக்கப் பாதுகாப்புத்துறை நிபுணர் ஜோன் இ கார்பாக்கின் இணையத்தளத்தில் இது குறித்து கூறப்பட்டுள்ளதாவது:

இந்தியாவில் ராணுவத்தளத்தை ஏற்படுத்தவும் ராணுவ கட்டமைப்புகளைக் கோரவும் அமெரிக்க ராணுவ அதிகாரிகள் விரும்புகின்றனர்.

ஆசியாவின் மையப் பகுதியில் இந்தியா அமைந்துள்ளதும் கிழக்கு ஆசியா, மத்திய கிழக்கு ஆசியா ஆகியவற்றின் இணைப்புப் பகுதியாக இந்தியா விளங்குவதும் அமெரிக்காவை ஈர்த்துள்ளது.

ஆசியப் பிராந்தியத்தில் நேரிடும் சிக்கலைக் கவனிப்பதற்கும் பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கும் ஏதுவாக ஆசியாவிலுள்ள தனது தளங்களின் எதிர்காலம் குறித்து பென்டகன் யோசித்து வருகிறது.

இந்தியாவில் தளத்தை ஏற்படுத்துவது என்ற கருத்து பெரும்பாலான அமெரிக்க ராணுவ அதிகாரிகளுக்கு ஏற்புடையதாகவே உள்ளது.

மத்திய கிழக்கில் தனது நடவடிக்கைகளுக்கு ஆதரவும் துறைமுகம் உள்ளிட்ட உதவிகளையும் தந்துவக் கூடிய நடுநிலையான நாடு தேவை என்று அமெரிக்கக் கடற்படை விரும்புகிறது.

இந்த வகையில் அனைத்துக் கட்டமைப்பு வசதிகளும் இந்தியா கொண்டிருப்பதால் அங்கு தளத்தை நிறுவ கடற்படை அதிகாரிகள் விரும்புகின்றனர்.

அமெரிக்க விமானப் படை அதிகாரிகளும் இக் கருத்தையே தெரிவித்துள்ளனர்.

ஆசியப் பிராந்தியத்தில் சீனாவைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தியாவும் அமெரிக்கவும் நீண்டகால பாதுகாப்பு உடன்பாட்டைச் செய்துகொள்ள வேண்டும் என்று பென்டகன் விரும்புகிறது. இவ்வாறு இணையத்தளத்தில் கூறியுள்ளார் கார்பாக். (ஒ)

# மொரிடானியாவில் ராணுவக் கிளர்ச்சி

மேற்காபிரிக்க நாடான மொரிடானியாவின் தலைநகரில் அதிபர் மௌரிய ஓல்ட் ரயாவுக்கு ஆதரவான இராணுவத்தினருக்கும், பழங்குடி இனத்தைச் சேர்ந்த இராணுவ வீரர்களுக்கும் இடையேயான மோதல் வெடித்துள்ளது.

தலைநகர் நௌகோட்டில் பொலீஸ நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்த பழங்குடி இனத்தவர் மீது இராணுவம் சுட்டதில் பலர் உயிரிழந்தனர். இதனையடுத்து இராணுவத்தில் பணியாற்றிய பழங்குடி இனத்தைச் சேர்ந்த வீரர்கள் அதிபருக்கு எதிராக கிளர்ச்சி செய்தனர். இதனையடுத்தே போர் முண்டுள்ளது. (ஒ)



சார்ஸ் நோய் பரவல் காரணமாக சீனாவில் சுற்றுலாப் பயணிகள் வருவது அறவே நின்றுபோய் இருந்தது. இப்போது சார்ஸ் நோய் முற்றிலும் ஒழிக்கப்பட்டதைத் தொடர்ந்து சுற்றுலாப் பயணிகள் வருகையும் அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது. பீஜிங் நகரில் ஒரு வணிக வளாகத்தில் இளம் அழகிகள் நடனமாடியபடி வாடிக்கையாளர்களை கவரும் காட்சி.

# நாஸாவின் 'ரோவர்' பயணமாவது காலநிலை சீரின்மையால் தாமதம்

கேப்கெனவரல்,ஜூன்10

செவ்வாய்க்கிரகத்தை ஆராயவென அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு மையம் ரோவர் விண்கலத்தை அனுப்பத் தயாராகியுள்ளது.

ரோவர் விண்கலம் நேற்று செவ்வாய்க் கிரகத்திற்கு செலுத்தப்படவிருந்தது. ஆனால், அது செலுத்தப்படத் தயாராக இருந்த கேப்கெனவரல் பகுதியில் கருமையான மேகக் கூட்டங்கள இருந்ததனால் ரோவர் செலுத்தப்படுவது தாமதடைந்துள்ளது. இன்று அது செவ்வாய்க்கிரகத்திற்கான தனது பயணத்தை ஆரம்பிக்கும் என்று நாஸா அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த 2 ஆம் திகதி ஐரோப்பிய விண்வெளி நிலையத்தின் 'செவ்வாய் எக்ஸ்பிரஸ்' என்ற விண்கலம் பீகிற் - 2 என்ற தரையிறங்கியுடன் செவ்வாய கிரகத்தை நோக்கி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

செவ்வாய்க் கிரகத்தில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவென மூன்று பிரிவுகளாக விண்கலங்களை அனுப்பத்திட்டமிடப்பட்டது. அதன்படி முதலாவது விண்கலமான 'செவ்வாய் எக்ஸ்பிரஸ்' கடந்த 2 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது. தற்போது இரண்டாவதாக ரோவர் விண்கலம் செலுத்தப்படவிருக்கிறது. மூன்றாவதாக அடுத்துவரும் வாரங்களில் ஜப்பானின நோஸோமி விண்கலம் செலுத்தப்படவிருக்கிறது.

சூரிய குடும்பத்தில் ஒன்றான செவ்வாய்க் கிரகத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் பல்வேறு நாடுகள் ஈடுபட்டுள்ளன. இந்தக் கிரகத்தில் தண்ணீர் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. ஏற்கனவே செவ்வாய்க்கிரகத்தைச் சுற்றிவரும் அமெரிக்காவின் இரண்டு விண்கலங்கள் தண்ணீர் குறித்த தடயங்களை படம்பிடித்து அனுப்பியுள்ளன. அதில் செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் ஓடிய சுவடுகள் நிறைய இடங்களில் காணப்படுகிறது. சில இடங்களில் தண்ணீர் உறைந்த நிலையில் இருப்பதாக கூறப்படுகிறது.

எனவே, இதைப் பற்றி தீவிர ஆராய்ச்சி செய்வதற்காக அமெரிக்காவின் நாஸா மையம் 'ரோவர்' என்ற விண்கலத்துடன் இரண்டு இயந்திர மனிதர்களையும் அனுப்புகிறது. நாஸாவின் டெல்டா 2 விண்கலத்தில் ஏற்றி ரோவர் விண்ணில் செலுத்தப்படவிருக்கிறது.

செவ்வாய்க் கிரகத்தின் மேற்பகுதியில் காணப்படும் கல், மண் மற்றும் தண்ணீர் குறித்த ஆதாரங்களை சேகரிக்கும் பணியில் இந்த ரோபோக்கள் ஈடுபடும். 1998 ஆம் ஆண்டு தண்ணீர் குறித்த ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்ட விண்கலங்கள் தொழில்நுட்பக் கோளாறினால் எங்கோ மாயமாக மறைந்து விட்டன. இந்தமுறை அதிநவீன வசதியுடன் கூடிய ரோவர் விண்கலங்கள் செவ்வாய்க்கிரகத்துக்கு செலுத்தப்படுகின்றன.

ரோவர் மற்றும் ரோபோக்களுக்காக நாஸா ஆராய்ச்சி மையம் 8 ஆயிரம் கோடி ரூபா செலவிட்டுள்ளது. வழக்கமாக செவ்வாயக்கிரகத்தைச் சென்றடைய முந்தைய விண்கலங்கள் ஒன்பது முதல் 10 மாதங்கள் எடுத்துக் கொண்டன. ஆனால், இந்த ரோவர் விண்கலம் ஏழு மாதத்தில் செவ்வாய்க் கிரகத்தைச் சென்றடைந்துவிடுமாம்.

தண்ணீர் இருக்கும் இடத்தில் உயிரினங்களும் இருக்கும் என்பதால அதைப் பற்றிய ஆராய்ச்சியிலும் ரோவா ஈடுபட உள்ளது. செவ்வாய்க் கிரகத்தில் ஏரிவடிவில் புவி அமைப்புக் கொண்ட பகுதியில்தான் ரோவர் தரையிறங்குகிறது. தரையிறங்குவதற்கு முன்பாக ரோவரைச் சுற்றிலும் பலூன்கள் விரிந்து கொள்ளும். பாதுகாப்பான இடத்தில் தரையிறங்கும் ரோவர், நாஸாவிலிருந்து வரும் சமிஞ்ஞைகளைப் பெற்றுத் தேவையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் என்று கூறப்படுகிறது. (ஒ)

# அணு ஆயுதம் தயாரிப்போமென வடகொரிய அரசு எச்சரிக்கை!

பியாவ்ங்,ஜூன்10

அமெரிக்க அச்சுறுத்தலுக்கு எதிராக அணுஆயுதம் தயாரிக்கப் போவதாக வடகொரியா எச்சரித்துள்ளது.

அரசு செய்தி நிறுவனம் இந்த எச்சரிக்கை குறித்த செய்தியை வெளியிட்டுள்ளது.

வடகெரியாவை மிரட்டும் போக்கை அமெரிக்கா கைவிடாவிட்டால் வடகொரியா அணுஆயுத உற்பத்தியில் ஈடுபடுமென்றும் - ஆனால், பிற நாடுகளை அச்சுறுத்துவது வடகொரியாவின் நோக்கமில்லை என்றும் -

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது. அணு ஆயுதம் தொடர்பாக பகிரங்க எச்சரிக்கையை வடகொரியா வெளியிட்டிருப்பது இதுவே முதற்றடவையாகும்.

நேற்று வெளியிடப்பட்ட இந்த எச்சரிக்கை கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை மேலும் அதிகரிக்கும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதேவேளை, வடகொரியா சில ஆண்டுகளின் முன்னர் அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபடத் தொடங்கி விட்டதாகவும் -

தற்போது அதன் கைவசம் சில அணுகுண்டுகள் இருக்கக்கூடும் என்றும் -

மேற்குலக இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.(ஒ)

## கரப்பந்தாட்டம்

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் நல்லூர் சட்டநாதர் ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள சங்கமைதானத்தில் இடம்பெறும் ஆடடங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

*ஆண்கள் பிரிவு*

பிற்பகல் 3 மணி - நீர்வேலி ஐக்கிய வி.க. எதிர் திருநெல்வேலி ஞானவைரவர் வி.க.

பாஷையூர் சென்.அன்ரனீஸ் வி.க. எதிர் உடுப்பிட்டி இமையாணன் வி.க.

அச்சுவேலி விக்னேஸ்வரா வி.க. எதிர் இளவாலை இளஞ்சுடர் வி.க.

*பெண்கள் பிரிவு*


பிற்பகல் 5.00 மணி - காங்கேசன்துறை ஐக்கியவி.க. எதிர் நாயன்மார்கட்டு பாரதி வி.க. (ஒ-5-86)


**விற்பனையாகின்றது!**

★சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள். கவிஞர் த.துரைசிங்கம். புதிய பாடத்திட்டம் தரம்-5
★இசையியல்விளக்கம் பாகம்-3 வட. இலங்கைசங்கீதசபை 5ஆம் தரத்திற்கு அமைவானது. மீராவில்வராயர்
★சமூகக்கல்வியும் வரலாறும். தரம்-10 கமலா குணராசா
★தொழிற்படும் விலங்கு க.பொ.த.உ/த உயிரியல் வி.ச.சிவகுமாரன்
★தமிழ் வைத்தியம் சித்தஆயுள் வேத நூல்கள்
★அண்மையில் வெளிவந்த ராணி முத்து, ராணிகாமிக்ஸ்

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (18951)
T.P 2573


# சந்தனவின் அதிரடி ஆட்டத்தால் தொடரை வென்றது இலங்கை அணி



பிரிஜ்டவுன், ஜூன் 10

இலங்கை - மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற - பரபரப்பான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இலங்கை அணி 4விக்கெட்டுக்களால் அபார வெற்றியீட்டித் தொடரைக்கைப்பற்றியது.

மேற்கிந்திய தீவுகள் அணி குவித்த 312ஓட்டங்களை 49.3 ஓவர்களில் விளாசி வெற்றிக்கு வழி சமைத்த சகலதுறை ஆட்டக்காரர் உபபுல் சந்தன ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற மேற்கிந் திய தீவுகள் அணித் தலைவர் பிரையன் லாரா தமது அணி முதலில் துடுபெடுத்தாடப் போவதாக அறிவித்தார்.

களம் நுழைந்த கைல், ஹைன்ட்ஸ் ஆகியோர் நிதானமாக ஓட்டங்களை உயர்த்திக் கொண்டிருந்த வேளை ஹைன்டஸின் விக்கெட்டை வீழ்த்தினார் வாஸ். பின்னர் கைல் 94 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை முரளிதரனின் நேரடித்தாக்குதலில் ரண் அவுடாகி திரும்பினார்.

லாரா106 பந்துகளில் 116 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை ஆட்டமிழந்தார். 50 ஓவர்கள் நிறைவில் மேற்கிந்திய அணி 312 ஓட்டங்களைப்பெற்றது.

பதிலுக்குக் களமிறங்கியது இலங்கை அணி. அதிரடி ஆட்டக்காரர்களான ஜயசூரிய - களுவிதாரண சோடி ஆடடத்தை தொடங்கியது.

ஜயசூரிய 35 பந்துகளில் 41 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை ஆட்டமிழந்தார். அதையடுத்து, அத்தபத்து, களுவிதாரண ஆகியோர் முறையே 47, 34 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது சர்வான், பவல் ஆகியோரின் நேரடித் தாக்குதலில் ரண அவுட்டாகி வெளியேறினர்.

ஒரு நிலையில் வெற்றி பெறுவதற்கு 10 ஓவர்களில் 92ஓட்டங்கள் தேவையாக இருந்தது. இலங்கை அணிக்கு 42ஆவது ஓவரில் உப்புல் சந்தனவின் அதிரடியால் 17ஓட்டங்கள் கிடைத்தன. 43ஆவது ஓவரில் மழை பெய்ததால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

ஆனால், சொற்ப நேரத்திலேயே ஆட்டம் மீண்டும் ஆரம்பமானது.

71 பந்துகளில் 4சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் அடங்கலாக 89 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை உப்புல் சந்தன ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மஹேல ஜயவர்த்தனவும் - தேவையற்ற முறையில், ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கினார் டில்ஷான். மறுமுனையில் தர்மசேன.

கடைசி ஓவரில் 4 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஒரு அகலப்பந்து உதிரியாக ஓட்ட எண்ணிக்கையுடன் சேர்ந்து கொண்டது. பின்னர் 3 பந்துகள் மீதம் இருந்த நிலையில் இலங்கை அணி வெற்றி பெற்றது.



மண்டைதீவுக்கடலில் 10.06.1986 இல் படையினரால் 'தூயஒளி' படகில் வைத்து படுகொலை செய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களின் ஞாபகார்த்தமாக இன்று பிரான்ஸில் ஆரம்பமாகவுள்ள 'தூய ஒளி' வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு வழங்கப்படவுள்ள வெற்றிக்கிண்ணத், தைப்படத்தில்காணலாம்.

# பிரெஞ்சு டெனிஸ்: ஃபெரீரோ சம்பியன்



பாரிஸ், ஜூன் 10

பாரிஸில் நேற்று முன்தினம் முடிவடைந்த பிரெஞ்சு பகிரங்க டெனிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை ஸ்பெயின் வீரர் ஜுவான் கார்லோஸ் ஃபெரீரோ வென்றார்.

ரோலண்ட் காரோஸில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் தரவரிசையில் மூன்றாம் இடத்தில் இருந்த ஃபெரீரோ 2 மணி 4 நிமிடங்களில் 6-1, 6-3, 6-2 என்ற நேர் செட்களில் தரவரிசையில் இடம்பெறாத ஹொலந்து வீரர் மார்டின் வெர்கொர்க்கை வீழ்த்தினார்.

ஃபெரீரோ வென்றுள்ள முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் இதுவாகும்.


உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் வைகாசி மாதம் 28ஆம் நாள் (11.06.2003) புதன்கிழமை முற்பகல் 08.00 மணிமுதல் 11.00 மணி வரையுள்ள கர்க்கடக லக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்

எமது புத்திரன் திருநிறை செல்வன் **லிங்கநாதன் (லிங்கம்)** அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி **பாமா (பவா)** அவர்களுக்கும்

இறையருளால் மணமகள் இல்லத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து வாழ்த்திச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பு:பசாரம் மணமகன் இல்லத்தில் 12.06.2003 வியாழன் மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்:

சண்முகம் குடும்பம்,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம். (18965)

(இரு வீட்டார் அழைப்பு)

நா.சின்னத்தம்பி குடும்பம்.
காளிகோயிலடி,
சங்கானை.



உ
சிவமயம்
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் வைகாசித் திங்கள் 28ஆம் நாள் (11.06.2003) புதன்கிழமை பிற்பகல் 01.29 மணிமுதல் 02.17 மணி வரையுள்ள சித்தயோகமும் சுவாதி நட்சத்திரமும் கூடிய கன்னிலக்கின சுபமுகூர்த்த வேளையில்

பொன்னுத்துரை தம்பதிகளின் செல்வப்புதல்வன் திருவளர் செல்வன்



**சிவகுமார்** அவர்களுக்கும்

திரு.திருமதி சி.விநாயகமூர்த்தி தம்பதிகளின் செல்வப்புதல்வி திருவளர் செல்வி



**சூரியமாலா** அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமணம் நடத்தப்பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து புதுமணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு: மேற்படி திருமாங்கல்யதாரண வைபவம் தனிப்பட்ட அழைப்பிதழில் குறிப்பிட்டபடி அல்லாது மணமகள் இல்லத்தில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டு கோப்பாய் மத்தி வேள்ளெருவைப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் உள்ள திரு.மா.அங்கலிங்கம் (கலிசெல்லையா) அவர்களின் இல்லத்தில் நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

தயவு செய்து இந்த இடமாற்ற அறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்:

(18955)

திருமதி ம.பொன்னுத்துரை,
காளிகோவிலடி, சங்கானை.

(இரு வீட்டார் அழைப்பு)

திரு.திருமதி விநாயகமூர்த்தி,
மடத்தடி வீதி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.



**நன்றி நவில்கிறோம்**

கற்பக விநாயகனின் திருவருளால் 01.06.2003 ஞாயிற்றுக்கிழமை கொழும்பு மயூரபதி கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற எமது திருமண வைபவத்தில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பி ஆசீர்வதித்த அன்பு உள்ளங்களுக்கும் உரும்பிராய் அரிமாக்கழக உறுப்பினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

*அரச வீதி,*
*உரும்பிராய்.* (18974)

திரு.திருமதி Dr.பிரதீபன்,
சிவசாந்தி,
தம்பதிகள்.


**கண்ணீர் அஞ்சலி**



நீர்வளசபை வட பிராந்திய காரியாலய ஊழியர்

**சின்னத்துரை சுந்தரலிங்கம்**

அவர்களின் (09.06.2003) திடீர் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்

*நீர்வள சபை,*
*601,நாவலர் வீதி*
*யாழ்ப்பாணம்.* (18969)

- பொறுப்பதிகாரி அவர்களும் ஊழியர்களும்.

**மரண அறிவித்தல்**

**திருமதி திரேசம்மா அடைக்கலமுத்து**

**(முன்னாள் உப அதிபர், இளவாலை றோ.க.ஆண்கள் தமிழ் வித்தியாலயம்)**

இளவாலை, திருமதி திரேசம்மா அடைக்கலமுத்து அவர்கள் (முன்னாள் உப அதிபர், இளவாலை றோ.க.ஆண்கள் தமிழ் வித்தியாலயம்) லண்டனில் காலமானார்.

இவர் இளவாலையைச் சேர்ந்த அமரர் மார்சலின் செல்லையா தம்பதிகளின் அன்பு மகளும் புலவர் மணி, அமுது என அழைக்கப்பெறும் முன்னாள் ஆசிரியர் அடைக்கலமுத்து அவர்களின் அருமைப் பாரியாரும் நேசம்மா, ஞானப்பிரகாசம், அன்னம்மா, சவரிமுத்து, எலிசம்மா, சுவாம்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை ஸ்ரெல்லா ஆகியோரின் சகோதரியும் பானுமதி, இந்துமதி, காந்திமதி, ஜெயமதி, அமுதகுமாரி, செபஸ்ரியன்நேரு, பேராசிரியர் அருள்திரு.சந்திரகாந்தன், கலாநிதி வசந்தகுமாரன், இளஞ்செழியன், அமுதரசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கீர்த்திசிங்கம், சாம்சன்றோய், விஜயகுமார், முரளீதரன், சிந்தியா, யூடித்தா, சுமித்திரா, ஜொவித்தா ஆகியோரின் அன்பான மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி மரியாதைக்காக இன்று(10.06.2003), செவ்வாய்க்கிழமை காலை தொடக்கம் பிற்பகல் 3மணிவரையும் இளவாலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டு தொடர்ந்து இரங்கல் உரைகளின் பின்னர் புனித அன்னம்மாள் ஆலயத்தில்அவரது மகன் அருட்திரு. கலாநிதி சந்திரகாந்தன் அடிகளின் தலைமையிலான கூட்டுத்திருப்பலியுடன் மரணச்சடங்குகள் நிறைவேறியதும் அன்னம்மாள் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அன்பரங்கம்,*
*கல்லூரி வீதி,*
*இளவாலை.* (18960)

தகவல்:
பேராசிரியர்
அருட்திரு.சந்திரகாந்தன்
அடிகளார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 14 01 1942



இறப்பு 11 05 2003

### அமரர் மாரிமுத்து சோமரட்ணம்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (08.06.2003) வில்லூன்றித் தீர்த்தக்கரையில் நடைபெற்றன. இன்று (10.06.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிடாரி கோவிலடி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (18983) - குடும்பத்தினர்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 - 11 - 1954



உதிர்வு 18 - 05 - 1997

### செல்லத்துரை மனோரஞ்சன்

(ரஞ்சன்)

*எதிலுமே ஔடதமாய் மொழி பகர்ந்து*
*எம்முறவை விட்டகன்று ஆறாண்டு ஆகிடினும்*
*பொன்போல் நீங்கள் தந்த பண்பு நெறியும் பாசமும்*
*பொக்கிசமாய் நிறைந்திருக்கும் எம்நெஞ்சினிலே*

*சங்குவேலி தெற்கு,*
*மானிப்பாய்.* (18970) -மனைவி,பிள்ளைகள்.

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 - 03 - 1971



உதிர்வு 10 - 06 - 1992

### செல்வன் ஶ்ரீபாலகணேசமூர்த்தி சுஜீந்திரன்

திதி: 10.06.2003

*உறவின் பிரிவில் சங்கமித்து*
*ஆண்டுகள் பதினொன்று மறைந்திடினும்*
*உம் நினைவுகள் எம் உள்ளத்தில்*
*நிலைத்துக் கொண்டே இருக்கும்*

உமது ஆத்மா சாந்திக்காகப்
பிரார்த்தித்து நிற்கும்...

மம்மி, ம்ம்மா, தம்பிமார், தங்கை, மாமாமார், அன்ராமார், மாமி, சித்தப்பாமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்

தகவல்:
சி.சுதாகர்
திருமகள்வாசா, வட்டுவத்தை,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.
(18954)

## மூடப்பட்ட பாடசாலை மீண்டும் இயங்குகிறது

தென்மராட்சி,ஜூன்10

எழுதுமட்டுவாழ் ஶ்ரீகணேசா வித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவுகள் கடந்த 2 ஆம் திகதி முதல் உசன் இராமநாதன் வித்தியாலயத்தில் இயங்கி வருகின்றன. எழுதுமட்டுவாழ், கரம்பகம்,ஒட்டுவெளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மிருசுவில், உசன். விடத்தற்பளை ஆகிய இடங்களில் தற்காலிகமாக தங்கியுள்ளதால் எழுதுமட்டுவாழ் ஶ்ரீகணேசா வித்தியாலய ஆரம்பப்பிரிவினை உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் ஆரமபித்துள்ளதாகவும் -ஆரம்பப்பிரிவுக்கு அதிபராக எஸ்.சோதிலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எழுது மட்டுவாழ் ஶ்ரீகணேசா விததியாலயம் படையினரின் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளதால் கடந்த மாதம் தொடக்கம் இவ வித்தியாலயம் மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்டமை தெரிந்ததே.

(எ-117)

## கசிப்பு வழக்கில் மூவருக்கு ரூபா 36 ஆயிரம் அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்10

கசிப்பு வைத்திருந்தமைக்காக மூவருக்கு எதிராக யாழ்.நீதிமன்றம் 36 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

சுண்டுக்குளியைச்சேர்ந்த சந்திரன் வினோதினி என்பவரை 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குலேந்திரன் கௌரிதரன் என்பவரை 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும்,2 ஆயிரம் ரூபா தர்மப்பணமும்-

கொட்டடியைச்சேர்ந்த செல்லத்துரை இளம்திரையன் என்பவரை 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 2 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுததுமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா நேற்று உத்தரவிட்டுள்ளார்.

(எ-8)


### உடன் விற்பனைக்கு

சுண்டுக்குளி- மகளிர் கல்லூரிக்கு அருகில் பழைய பூங்கா வீதியில் 3 பரப்புக் காணியும் சகல வசதிகளுடன் இரண்டு வீடுகளும், கடையும் உடனடி விற்பனைக்குண்டு. நேரில்தொடர்பு கொள்ளவும்.

ம.ராஜலஷ்மி,
132,பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.
(18979)

### லஷ்சுமி சினிமா
இணுவில்



விஜய், சினேகா மற்றும் பலர் நடிப்பில்
வசீகரா (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(18926)

### நாகம்ஸ் சுன்னாகம்
சரத்குமார் (இருவேடம்) தேவயானி.
ஆனந்தராஜ் நடித்த
சூரிய வமசம (ரீல்ஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு விசேடகாட்சி 7.00 (பு.நே)
அடுத்த வெளியீடு 'கீதை'

### ராஜா யாழ்ப்பாணம்
சில தினங்கள் மட்டும்
அஜித், வசுந்தராதாஸ், நக்மா, மீனா
நடித்த
சிட்டிசன் (ரீல்ஸ்)
10.30, 2.30, 6.30.
(C/28324)

### லிபேட்டி அச்சுவேலி



அஜித், கிரண், மீனா, ரமேஷ்கண்ணா
நடித்த
வில்லன் (ரீல்ஸ்)
தினசரி காட்சி நேரம்11.00, 4.00, 7.00
(புதிய நேரம்)

### நிலாஞ்சனாஸ்
விஜய், ஷாலினி, ராதாரவி நடித்த
காதலுக்கு மரியாதை (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
THE ROCK THE SCORPION KING
(C/28211)


## காரை[illegible]கர் ப.நோ.கூ.சங்கம் (வ-து) கிராமிய வங்கி மீதி உறுதிப்படுத்துதல்

மேற்படி ப.நோ.கூ.சங்கத்தின் கீழ் இயங்கும் கிராமிய வங்கியில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தங்களது

நிலையான வைப்பு
நிலையான வைப்பு மாதவட்டி
சேமிப்பு வைப்பு
பராயமடையாதோர் சேமிப்பு வைப்பு

மீதிகளை இன்று (10.06.2003) ஆம் திகதி தொடக்கம் 13.06.2003 ஆம் திகதி வ..ர சங்கக்கடமை நேரத்தில் உறுதிப்படுத்திக்கொள்ளவும.

**குறிப்பு:**
**01.09.2001 - 31.08.2002 நிதியாண்டு எண்பார்வையின் பொருட்டு மேற்படி மீதிகள் உறுதிப்படுத்தப்படுகின்றது.**

பொதுமுகாமையாளர்,
ப.நோ.கூ.சங்கம்,
காரைநகர்.
(C28343)

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் சட்டநாதர் வீதியைச் சேர்ந்த

### கணபதிப்பிள்ளை குருநாதன்

(முன்னாள் லேக் ஹவுஸ் பத்திரிகை முகவர்)
மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*சட்டநாதர் வீதி.* (18985) - நண்பர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை குருநாதன்

சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட (முன்னாள் லேக்ஹவுஸ் முகவர், கொடித்தேர் மடம் உரிமையாளர்) கணபதிப்பிள்ளை குருநாதன் அவர்கள் 09.06.2003 நேற்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 10.06.2003பி.ப. 3.00மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*திருநெல்வேலி* (18984) தகவல்: மனைவி, பிள்ளைகள்.

### சின்னத்துரை சுந்தரலிங்கம்

(நீர்வள சபை, யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை, வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் கண்ணன் லேன்,இராச வீதி, கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சுந்தரலிங்கம்(பால்காரசுந்தரம்) அவர்கள் நேற்று (9-6-2003)திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை-தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் சாந்தரூபியின் அன்புக் கணவரும் யசோதன், தர்சிகா, வத்சலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி தவமலர், சுப்பிரமணியம், குணரத்தினம், நடேசபிள்ளை, திருமதி ரேவதி குணரத்தினம், திருமதி கலாவதி கிருஸ்ணகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(10-6-2003) செவ்வாய்க் கிழமை பி.ப. 2மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கட்டை ஆலடி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கண்ணன் லேன்,*
*இராச வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.* (18977) தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி கலாவல்லி சிவகுமார்

(ஆசிரியை,யா/சாங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்)

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கலாவல்லி சிவகுமார் 08.06.2003 ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் க.சிவகுமார் அவர்களின் அன்புத் துணைவியும், இளைப்பாறிய ஆசிரியர் ஆறுமுகம் - உமாதேவி தம்பதிகளின் அன்பு மகளும், கணபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் அபிராமி (உடுவில் மகளிர்கல்லூரி - மாணவி), காயத்திரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பஞ்சாயுதன், மாணிக்கவல்லி, இலகுப்பிள்ளை, குணதேவி (சுவிஸ்) , உமாமுகன் (சுவிஸ்), சிவகுமார் (சுவிஸ்), மங்களதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவகலா, அற்புதநாதன், சிவபாலன், சசிகலா, மீனலோஜினி, கணேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.06.2003) திங்கட்கிழமை பண்ணாகத்தில் நடைபெற்று, பூதவுடல் திருவடிநிலை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*"பழமுதிர்சோலை",*
*பண்ணாகம்,*
*சுழிபுரம்.* (18975) தகவல்: குடும்பத்தினா.

### டாக்டர் சிவகுமார் *(லண்டன்)*

நுணாவில் மேற்கைச் சேர்ந்த டாக்டர் சிவகுமார் 8.6.2003 ஞாயிற்றுக் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சக்கடத்தார் சின்னத்தம்பி மற்றும் அன்னமுத்து(ஓய்வு பெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்பு மகனும் டாக்டர் ரஞ்சிதாவின்(லண்டன்) அன்புக் கணவரும் டினேஸின்(லண்டன்) அன்புத் தந்தையும் நந்தகுமாரின்(லண்டன்) அன்புச் சகோதரனும் லலிதாவின்(லண்டன்) அன்பு மைத்துனரும் பிருந்தா, கோகுலன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

இந்த தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"பிருந்தாவனம்"*
*நுணாவில் சந்தி,*
*சாவகச்சேரி.* (18982) தகவல்: திருமதி சிவராசா கிருஸ்ணவேணி *(சகோதரி)*

# அடுத்த மூன்று வருடங்களில் ஜப்பான் 100 கோடி டொலர் உதவி வழங்கும்

டோக்கியோ,ஜுன்10

இலங்கை மக்கள் தமது சொந்த முயற்சியில் நிலையான சமாதானத்தைப் பெறுவதற்கு சர்வதேச சமூகம் இலங்கை மக்களுக்கு கூடுதலான உதவிகளை வழங்கவேண்டும் என்று ஜப்பானின் வெளியுறவு அமைச்சர் யொஷிக்கோ கவாகுச்சி நேற்று டோக்கியோ மாநாட்டில் உரை நிகழ்த்துகையில் வற்புறுத்தினார்.

ஜப்பான் அரசு அடுத்த மூன்று ஆண்டுகளில் 100 கோடி அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்கும் என்றும் அவர் அறிவித்தார்.

இந்த மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்குபற்றாமல்விட்டது பற்றி எங்களுக்கெல்லாம் பெரும் கவலை. இந்த மாநாடு நடக்கவில்லை என்றால் இலங்கை மக்களுக்கு அது ஈடுசெய்யமுடியாத நட்டமாக அமைந்திருக்கும் என்றும் அவர் சொன்னார்.

அவர் தமதுரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

ஜப்பானும் சர்வதேச சமூகமும் இலங்கைக்கு உதவி வழங்கும் போது சில விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. அவை யாவன:-

★ சுயமாக உதவி கிடைக்கும் என்று எந்தத் தரப்பும் எண்ணக்கூடாது. கிடைக்கும் உதவிக்கு ஏற்ப சமாதான முயற்சியில் முன்னேற்றம் காட்டவேண்டும். சர்வதேச சமூகம் முன்னேற்றத்தைக் கண்காணித்து வரும்.

★ சமாதான முயற்சிகளுக்கு மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு அவர்கள் தமது சமூக, இன வேறுபாடுகளுக்கு அப்பால் சமாதானக் கனியைச் சுவைக்க வழி செய்யவேண்டும். அதற்கு சர்வதேச சமூகம் உதவி வழங்கும் போது நாட்டின் இனப்பரம்பல், பூகோள அமைப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

★ யுத்தத்தால் சீரழிந்த வடக்கு, கிழக்கில் அவசரமாக மனிதாபிமான உதவிகளைச் செய்யவேண்டும். ஜப்பான் இதுவரை 2கோடி 50லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவிகளைச் செய்திருக்கின்றது. உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களுக்கான உதவித் திட்டம், கிளிநொச்சி வைத்தியசாலை அபிவிருத்தி, அரச சார்பற்ற ஜப்பான் நிறுவனம் ஒன்று நடத்தும் வடக்கிற்கான நடமாடும் சிகிச்சைப் பிரிவு ஆகியன ஜப்பானின் உதவித் திட்டங்களில் அடங்கும். ஜப்பான் தொடர்ந்து இப்படியான உதவிகளைச் செய்துவரும். கண்ணிவெடிகளை அகற்றும் உதவியையும் ஜப்பான் செய்து வருகிறது.

★ இலங்கை நாட்டைக் கட்டி எழுப்பவும் சமூக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தவும் இடைநிலை மற்றும் நீண்டகால உதவிகளை வழங்க வேண்டியது அவசியமாகும். இந்த வகையில் கிராம அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஜப்பான் அரசு கடந்த மார்ச் மாதம் 28 கோடி அமெரிக்க டொலர் - யென் கடன் உதவி வழங்க முடிவுசெய்தது. இந்த விதமான உதவியை ஜப்பான் தொடர்ந்து செய்யும்.

★ உதவும் நாடுகளும், சர்வதேச நிறுவனங்களும் தாமாக உதவி வழங்கும் பணியைச் செவ்வனே செய்யமுடியாது. சிவில் சமூகத்துடனும் தனியார் துறையுடனும் இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அதற்கு அந்த இரு தரப்பினரையும் இந்த மாநாட்டுக்கு அழைத்திருப்பதன் மூலம் முன்னேற்பாடு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

- இப்படி அவர் கூறினார்.


## விக்னா
கல்வி நிறுவனம்

பிரிவு 6

O/L DAY CLASS

இறுதிப் பிரிவிற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

O/L PAPER CLASS

கணிதம் : திரு. CK.B. தயாளன்

விஞ்ஞானம் : திரு. N.தேவா

ஆரம்பம்: 14.06.2003

பிரிவுI சனி,ஞாயிறு 11.00 (Old Time)

பிரிவுII திங்கள்,வெள்ளி. 4.00 மணி



## தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள அலுவலக உபகரணங்களைத் திருத்தம் செய்யும் நிறுவனம் ஒன்றிற்கு.

தொழில்நுட்பவியலாளர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் தேவை.

விள.இல.1921

தொடர்பு: மே/பா.

உதயன் (18876)



## இலவச நீரிழிவு முகாம்

11-06-2003 புதன்கிழமை

1. நீங்கள் 40 வயதிற்கு மேற்பட்டவரா?
2. நீங்கள் பருமனாக இருக்கின்றீர்களா?
3. உங்களுடைய குடும்ப வரலாற்றில் நீரிழிவு இருக்கின்றதா?

அப்படியாயின் நாங்கள் இரத்த குளுக்கோஸ்பரிசோதனை செய்வோம். நீரிழிவு நோய் இருப்பதாகக் காணப்பட்டால் வைத்திய கலாநிதிகளால் உடனே பரிசோதிக்கப்பட்டு ஆரம்ப மருந்தும் வழங்கப்படும்.

★ ஏற்கனவே நீரிழிவு நோய் இருப்பவர்களும் பரிசோதனை - மருத்துவ ஆலோசனை பெறலாம்.

உடனடியாக பதிவு செய்வதற்கும்

மேலதிக விவரங்களைப் பெறுவதற்கும்

சன்றைஸ் ரேடேர்ஸ்,

94, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி : 222 6166

*Organized By:-*

HEMAS PHARMACEUTICALS (U.S.V.)

(C/28341)



## அலுவலக இடம்மாற்ற அறிவித்தல்
## இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்
## யாழ்ப்பாணம்

இது வரை காலமும் இல.65 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கிவந்த எமது யாழ். அலுவலகம் 09.06.2003 திங்கட்கிழமை முதல் இல.631, 633 1/1, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கும் எமது கூட்டுத்தாபனத்தின் முன்னாள் ஊழியர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

- பொறுப்பதிகாரி,

யாழ்.அலுவலகம்,

இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்.

(C/28338)


## நாளை செயலகத்தில் முக்கிய கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜுன்10

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் அவசர புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்கான முக்கிய கூட்டம் ஒன்று நாளை புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபை அதிகாரிகள், யாழ்.திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்கின்றனர்.

அவசர புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பாக முக்கிய விடயங்கள் இந்தக்கூட்டத்தில் தெரிவிக்கப்படவிருக்கின்றன. (ஐ-3)

## மரண அறிவித்தல் திருத்தம்

இன்றைய உதயனின் 13ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ள **கணபதிப்பிள்ளை குருநாதன்** (சட்டநாதர் கோவிலடி) என்பவரின் மரண அறிவித்தல் விளம்பரத்தில்-

அன்னாரின் பூதவுடல் நாளை 10.06.2003 பிற்பகல் 3.00 மணியளவில் தகனம் செய்யப்படும் என்பதை **இன்று 10.06.2003 பிற்பகல் 3.00 மணியளவில்** தகனம் செய்யப்படும் எனத் திருத்தி வாசிக்கவும்.


## NIRU
Kondavil

சிங்களம்

By: லீலாகிருஷ்ணன்

ஆரம்பம் 11.06.2003

(18912) புதன் 8.30 a.m.



## BRIGHTMAN

பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.

A/L 2004 பௌதிகம் ஈர்ப்புப்புலம்

By: ஜெயசீலன்

ஆரம்பம்: 11.06.2003

WED. 3.00 p.m.


## படை அதிகாரி ஓய்வு பெற்றார்

யாழ்ப்பாணம்,ஜுன்10

பலாலிப் படைத்தளத்தில் நீண்ட காலமாகப் பணியாற்றிய கேணல் டபிள்யு. ஏ.ஆர்.குணவர்த்தன சேவையில் இருந்து ஓய்வுபெறுகின்றார்.

யாழ்.சிவில் நிர்வாக அதிகாரியாகவும், பலாலி படைத்தளத்தில் நிர்வாக அதிகாரியாகவும் இவர் பணியாற்றி வந்தார். (ஐ-3)

## உலக வங்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாகி நேற்றுப் பிற்பகல் பிரதமரையும் நிதி அமைச்சர் என்ற முறையில் என்னையும் சந்தித்தார். அப்போது தமது பணிக்காலத்தில் இவ்வளவு எண்ணிக்கையான பிரதிநிதிகள் கலந்துகொண்ட உதவும் நாடுகள் கூட்டத்தை தாம் பார்த்ததேயில்லை என்று அவர் கூறினார்.

கூட்டத்தில் பங்குபற்றிய ஜப்பான் பிரதமர், இலங்கைப் பிரதமர், அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர், ஐரோப்பிய யூனியன் தலைவர் அனைவருமே புலிகளை மீண்டும் சமாதான முயற்சிகளுக்குத் திரும்பி, இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காண்பது குறித்து இலங்கை அரசுடன் மீளப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி வற்புறுத்தியுள்ளனர்.

இலங்கை அரசு எதிர்பார்த்ததை விட அதிகமான தொகையை வழங்க சர்வதேச சமூகம் இணங்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

ஜப்பான் மட்டும் அடுத்த மூன்று வருடங்களுக்கு பத்தாயிரம் கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது. இதேபோன்ற தொகை ஆசிய அபிவிருத்தி வங்கி ஊடாகவும் கிடைக்கவிருக்கின்றது.

வெள்ள நிவாரணப் பணிகளுக்கு நூற்றியைம்பது கோடி ரூபாவை வழங்குவதற்கு உலக வங்கி இணங்கியுள்ளது. இது தவிர, மேலும் பல உதவித் திட்டங்களுக்கு உதவியளிக்க உலக வங்கி சம்மதித்துள்ளது.

உலக வங்கியின் உதவியில் நாற்பது வீதம் உதவு தொகையாகக் கிடைக்கின்றது. எஞ்சிய பகுதி மிகக் குறைந்த வட்டியுடன் கடனாகக் கிடைக்கின்றது.

உலக வங்கியின் உதவி அடுத்த வாரத்தில் இருந்து வாஷிங்ரனில் உள்ள அதன் தலைமையகம் மூலம் எமக்குக் கிடைக்கத் தொடங்கும் - என்றார் நிதியமைச்சர். (ஐ)

## எதிர்பார்த்தது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான உதவும் நாடுகளின் முதல் நாள் கூட்டத்தில் இத்தீர்மானங்கள் எடுக்கப்பட்டன என்று அறியவந்தது.

உதவும் நாடுகள் கூட்டத்தில் நேற்றைய முதல்நாள் நிகழ்வில் பங்குபற்றிய அமெரிக்கா, ஜப்பான், நோர்வே போன்ற நாடுகள் மற்றும் முக்கிய சர்வதேச அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பலரும் உதவும் நாடுகள் கூட்டத்தில் புலிகள் பங்குபற்றாதமை குறித்து கவலை தெரிவித்தனர். அத்தோடு, பேச்சு மேசைக்கு புலிகள் திரும்பி சமாதான நடவடிக்கைகளை அவர்கள் மீள ஆரம்பிக்கவேண்டும் என்று அவர்களை வற்புறுத்தும் விதத்திலும் உரையாற்றினர்.

உதவும் நாடுகளின் உதவு தொகை பற்றிய விடயங்கள் பெரும்பாலும் நேற்று முதல்நாள் அமர்வில் தீர்மானிக்கப்பட்டன.

கூட்டத்தின் கடைசி இரண்டாம் நாளான இன்று காலை அமர்வின் போது கூட்டத்தின் முடிவில் வெளியிடப்படவேண்டிய கூட்டறிக்கை பூரணப்படுத்தப்படும் எனத் தெரிகின்றது.

இந்தக் கூட்டறிக்கையில் -

இலங்கை அரசு, புலிகள், இலங்கை மக்கள் ஆகிய முத்தரப்பினரும் தாம் எதிர்பார்ப்பது என்னவென்பதை உதவும் நாடுகள் சமூகம் குறிப்பிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் அகாசாகா பிரின்ஸ் ஹோட்டலில் நேற்றுக் காலை 9.15 மணிக்கு ஆரம்பமானது.

மாநாட்டின் தொடக்க வைபவத்துக்கு இணைப்பாளராக ஜப்பானின் இலங்கைக்கான விசேட பிரதிநிதி யசூசி அகாஷி கடமையாற்றினார்.

முதலில் ஜப்பானின் பிரதமர் யுனிசிரோ கொய்சுமி அவரைத் தொடர்ந்து இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உரையாற்றினர்.

அவர்களைத் தொடர்ந்து ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யோரிகோ கவகுச்சி அம்மையார், சர்வதேச அபிவிருத்திக்கான நோர்வேயின் இராஜாங்க அமைச்சர் ஒலோப் கியோர்வின், அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ், ஜப்பானுக்கான ஐரோப்பிய ஆணைக்குழுவின் தூதுவர் பேர்ன் ஹாட் ஸெடர், ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் டாடோ சினோ ஆகியோர் உரையாற்றினர்.

காலை தொடக்க அமர்வைத் தொடர்ந்து சிறிது நேரம் தேநீர் இடைவேளை இடம்பெற்றது.

அதன் பின்னர் மதியபோசனத்துக்கு முன்னரும் பின்னரும் மாநாட்டின் இரு சுற்று அமர்வுகள் இடம்பெற்றன. (ஐ-3-4)

## டோக்கியோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேத் தரப்பு சமாதான முயற்சிகள் தொடர்பான தனது அனுசரணைப் பணியை மீண்டும் முழுமூச்சாக ஆரம்பிக்கும் எனவும் -

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்புடைய வட்டாரங்கள் நேற்று மாலை உதயனுக்குத் தெரிவித்தன.

இந்த நடவடிக்கைகளோடு சமாதான முயற்சிகள் மீண்டும் சுறுசுறுப்படைய வாய்ப்பு இருப்பதாக பிரதமரின் அலுவலக வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. (ஐ)


## UNIVERSITY OF JAFFNA, SRILANKA
## PROFESSOR ALAGAIAH THURAIRAJAH MEMORIAL LECTURE

*Date & time* : $11^{th}$ June 2003 at 3.00 p.m

*vemie* : Kailasapathy Auditorium, University of Jaffna.

*Delivered by* : Professor H.Sriyananda, *Professor of Electrical Engineering, Open University of Srilanka*

*Title* : "ENGINEERING EDUCATION FOR THE NEW WORLD ORDER"

Those who are interested are cordially invited

(28342) Vice - Chancellor



## இந்திய சாஸ்திரியார்வருகை

முதன் முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்.

*பரம்பரை ஜோதிடர்*

புகழ்பெற்ற S.N.குமாரசாமி அவர்கள்.

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, தொழில் முன்னேற்றம் இன்மை கல்வித்தடையா? குழந்தைப்பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்

இல.711, கே.கே.எஸ்.வீதி,யாழ்ப்பாணம்.

(யாழ்.இந்துக்கல்லூரிக்கு அண்மையில்)



MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS

324, Palaly Road Jaffna

BIT

## Selection for BIT

TRIAL Exam



MCS

Please contact us on or before 13-06-2003 with NIC and BIT admission card to confirm your admission.

SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.06.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.